கல்கி

KALKI 26.4.98 ரூ. 4.50





உங்கள் அருமைக் குழந்தையே உங்கள் வாழ்வின் மையம்.

அவளுடைய இல்லம் பாதுகாப்பாகவும் கவலைக்கிட மின்றியும் இருக்க வேண்டாமா ?

உங்கள் வீடு வெறும் கற்களாலும், சிமெண்டாலும் மட்டுமே கட்டப்பட்டதல்ல. நம்பிக்கை, ஆசைக் கனவு மற்றும் பந்தபாசங்களினால் கட்டப்பட்டது. எனவே, இது நீண்ட காலம் இருக்க வேண்டுமல்லவா ?

உங்கள் வீட்டின் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை கருதி, சமையல் கேஸை கையாளும் போது கீழ்க்கண்ட சுலபமான முறைகளைப் பின்பற்றுங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியவை • சமையல் முடிந்த பின்பும், இரவிலும் கேஸ் பர்னர் மற்றும் ரெகுலேட்டர் குமிழ்களை மூடிவிடுங்கள். • ஐ எஸ் ஐ (ISI) முத்திரை தாங்கிய ரப்பர் டியூபை மட்டுமே பயன் படுத்துங்கள். அதை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கண்டிப்பாக மாற்றுங்கள். • கேஸ் வாசனை அடித்தால் எரிகின்ற எல்லா சுடர்களையும் அணைத்து விட்டு, பர்னர் மற்றும் ரெகுலேட்டர் குமிழ்களை உடனடியாக மூடுங்கள். • சமைக்கும் போது பருத்தியினால் ஆன மேல் ஆடை (Cotton apron) அணியுங்கள். • சிலிண்டரை மாற்றும் போது எரிகின்ற எல்லா சுடர்களையும் அணையுங்கள். • எப்போதுமே சிலிண்டர் மட்டத்தைவிட உயரமான மேடையிலேயே கேஸ் அடுப்பை வைக்க வேண்டும்.

தவிர்க்க வேண்டியவை • கேஸ் பொருத்தப்பட்ட இடத்திற்கு அருகில் எரிகின்ற சுடர்களையோ எரிபொருள்களையோ வைக்காதீர்கள். • எரிகின்ற கேஸ் அடுப்பின் மீது பாத்திரங்களை வைத்துவிட்டு கவனமின்றி இருக்காதீர்கள். • கேஸ் சிலிண்டரை மாற்றும் போது மின்சார சுவிட்சுகளை இயக்காதீர்கள். • மூடிய பகுதிகளுக்குள் கேஸ் சிலிண்டரை வைக்காதீர்கள். • நீங்களே பழுது பார்க்காதீர்கள். விநியோகஸ்தரின் உதவியை நாடுங்கள். • சமையல் அறையில் குழந்தைகளை விளையாட அனுமதிக்காதீர்கள்.

பொதுநலன் கருதி வெளியிடுவோர்
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்
இந்தியன் ஆயில் பவன், G-9, அலி யாவர் ஜங் மார்க்
பாந்த்ரா (கி), மும்பை - 400 051.

Indane

பா து கா ப் பி ன் பி ற ப் பி ட ம் உ ங் க ள் இ ல் ல ம்

IMAGEADS TAM



356!

குடியரசுத் தலைவர் ஒரு மாநில ஆளுனரிடம் இருந்து ஓர் அறிக்கையைப் பெறுவதன் மேலோ, பிறவாறாகவோ, இந்த அரசமைப்பின் வகை முறைகளுக்கு இணங்கியவாறு அந்த மாநிலத்தின் அரசாங்கத்தை நடத்த இயலாத ஒரு நிலைமை எழுந்திருக்கிறது

எனத் தெளிதேற்றம் கொள்கிறார் என்றால், குடியரசுத் தலைவர், சாற்றாணை வாயிலாக...

– இதுதான் இந்திய அரசியலமைப்பின் 356-வது பிரிவு.

இந்தப் பிரிவைக் காட்டி மத்திய அரசுதான் மாநில அரசுகளைப் பயமுறுத்த முடியும் என்கிற காலம் போய், இன்று வாஜ்பேயி அரசையும் இதை வைத்தே பயமுறுத்த முடியும் என்பதை ஜெயலலிதா நிரூபித்துக் கொண்டிருக்கிறார். 'தமிழகத்தில் 356–ஐ பயன்படுத்து. இல்லாவிட்டால் நாடாளுமன்றத்தில் நான் 27 (அ.தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. எம்.பிக்கள் ஆதரவு) பயன்படுத்துவேன்' என்று சொல்லாமல் சொல்லிப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்.

ஜெவின் இந்தப் பயமுறுத்தலுக்கு அடிபணிந்து விடவும் கூடாது; அதே சமயத்தில் ஜெவையும் திருப்திப்படுத்தியாக வேண்டும் என்கிற நிலை வாஜ்பேயிக்கு. அதனால்தான் '356-ஐ நாங்கள் தவறாகப் பயன்படுத்த மாட்டோம்' என்று ஒருபுறம் அறிக்கை விட்டுக் கொண்டே மறுபுறம், மத்திய உள்துறையின் சிறப்புச் செயலாளர் அசோக் குமார் தலைமையிலான ஒரு குழுவை தமிழகத்துக்கு அனுப்பி சட்டம் – ஒழுங்கு நிலையை ஆய்வு செய்யப் பணிக்கிறார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இறங்கியவுடனேயே, "பாகிஸ்தானின் உளவு ஸ்தாபனமான ஐ.எஸ்.ஐ. இந்தியாவிலுள்ள

கல்கி இண்டர்நெட் முகவரி: www.kalkiweekly.com ஈ மெயில்: kalki@md2.vsnl.net.in

தீவிரவாதிகளுக்கு உதவி செய்து கொண்டிருப்பதற்கான ஆதாரம் இருக்கிறது!" என்று பேட்டியளித்த அசோக்குமார், திரும்பிப் போகும்போது, "நாங்கள் கடற்கரையில் வாக்கிங் போனபோது சென்னை வாழ் மக்களும் பயமின்றிக் கடற்கரையில் வாக்கிங் போனதைப் பார்க்க முடிந்தது!" என்று பேட்டியளிக்கிறார்!

"இதிலிருந்து என்ன தெரிகிறது? 'தமிழ் நாட்டில், மக்கள் சாதாரணமாக சாலைகளில் நடமாடுவதற்குக் கூட பயந்து, வீட்டைப் பூட்டிக் கொண்டு உள்ளேயே கிடக்கிறார்கள்' என்றொரு தவறான எண்ணம் வடக்கே உள்ளவர்களுக்கு ஏற்படும் அளவுக்கு எங்கள் தலைவியின் பிரசாரம் அமைந்திருக்கிறது..." - இப்படிப் பெருமை அடித்துக் கொண்டார் ஓர் அ.தி.மு.க. பிரமுகர்!

சரி, தீவிரவாதத்தையும் சட்டம் - ஒழுங்கையும் காரணம் காட்டி தி.மு.க. அரசைக் கலைத்து விட்டுத் தேர்தல் வருவதாகவே வைத்துக் கொள்வோம். அந்தத் தேர்தலில் அ.தி.மு.க.வால் பதவிக்கு வர முடியுமா?

> "கூட்டணி அரசியலில் 13 என்ற எண்ணுக்கு ஏதோ விசேஷம் இருக்கிறது. ஐ.மு.வில் 13 கட்சிகள் அங்கம் வகித்தன. முந்தைய வாஜ்பேயி அரசில் 13 நாட்களே ஆயுட் காலமானது. இன்று பா.ஜ. தலைமையிலான கூட்டணிக் கட்சிகளும் 13 தான்!" என்று பாராளுமன்றத்தில் ப. சிதம்பரம் சொல்லியிருக்கிறார்.
>
> - அண்ணா அன்பழகன்

இந்தக் கேள்வியை எந்த அ.தி.மு.க.காரரிடம் கேட்டாலும், "நாடாளுமன்றத்தில் நாங்கள் ஜெயிக்கவில்லையா! அதுபோல் இதிலும் நாங்கள் ஜெயிப்போம்!" என்று கடந்த நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியைத்தான் முன்னிறுத்திப் பேசுகிறார்களே தவிர, வரப் போகிற தேர்தலை முன்னிறுத்திப் பேசத் தயங்கவே செய்கிறார்கள். கடந்த தேர்தலிலும் மக்கள் ஊழலை மறந்து விட்டு வோட்டுப் போடவில்லை; மத்தியில் நிலையான ஆட்சி வேண்டும் என்பதற்காகத்தான் வோட்டுப் போட்டார்கள் என்பதை அவர்களும் கடைசியில் ஒப்புக் கொள்ளவே செய்கிறார்கள்.

ஆனாலும் ஆட்சிக் கலைப்புக்கு இத்தனை துடிப்பு ஏன்? "என்ன சார் தெரியாத மாதிரி கேட்கறீங்க. எத்தனை வழக்குங்க போட்டிருக்காங்க தி.மு.க. ஆட்சியிலே. பொம்பளைன்னும் பார்க்காம போட்டது நியாயமா? நாங்க ஆட்சிக்கு வந்திட்டா ஸ்பெஷல் கோர்ட்டுக்கெல்லாம் ஒரு முழுக்குப் போட்டுட்டு மக்கள் நலனில்(!) கவனம் செலுத்துவமே!" என்கிறார்கள் தீவிரமாக!

அப்படி ஆட்சிக்கு வந்து விட்டால் தி.மு.க.வினர் மேலும் வழக்குப் போடுவார்களா?

"வழக்குப் போடற அளவுக்கு என்ன நடந்து போச்சு? அப்படியெதுவும் தெரியலை. ஆனாலும் ராஜீவ் கொலையானப்போ, தி.மு.க.தான் குற்றவாளிங்கற மாதிரி ஒரு ஸீனை கிரியேட் பண்ணி அவங்களை ஒண்ணுமில்லாம ஆக்கலையா! அதுபோல இப்பவும் தீவிரவாதிகளின் குண்டு வெடிப்புக்குத் தி.மு.க.தான் காரணம்னு தொடர்ந்து பிரசாரம் செய்வோம். இது போதுமே தி.மு.க.வை ஓரங்கட்ட!" என்று ரொம்பவும் நம்பிக்கையோடு சொல்கிறார்கள்.

எல்லாம் சரி, அ.தி.மு.க.வின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக வாஜ்பேயி அரசு நடந்து கொள்ளுமா? அதாவது தி.மு.க. அரசைக் கலைக்குமா?

அ.தி.மு.க.வின் அவசர நிபந்தனையே மே மாதம் வரப்போகிற ராஜ்யசபா தேர்தலுக்கு முன்பாகவே தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும் என்பதுதான். இதைத் தான் செயற்குழுவைக் கூட்டியும் சுயமாகவே ("அம்மா பேச்சுக்கு எதிர்ப் பேச்சுப் பேச முடியுங்களா எங்களால? அவுங்க சொன்னாங்க. நாங்க மௌனமா சரின்னு சொன்னோம். அவ்வளவுதான்!" என்றார் நமது நிருபரிடம் பேசிய செயற்குழு உறுப்பினர் ஒருவர்) முடிவெடுத்து அறிவித்தார் ஜெ.

ஜெ. முடிவெடுத்தாலே அது தொண்டர்களின் ஒட்டுமொத்த முடிவுதான் என்கிற நிலையில் எதற்காக செயற்குழுவைக் கூட்ட வேண்டும்? காரணம் இருக்கிறது.

மரபுரீதியாகப் பார்த்தால், ஒரு மாநிலத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும்போது அந்த மாநிலத்தைக் கலைக்கக் கூடாது. இப்படி இதுவரை நடந்ததில்லை. இப்போது தமிழகத்தில் பட்ஜெட் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கிறது. இது மே மாதம் இறுதி வரை தொடரும்!

ஜெவின் எதிர்பார்ப்பு மே மாதம் வரவிருக்கிற ராஜ்யசபா தேர்தல் அறிவிப்புக்கு முன்னதாகவே தி.மு.க. அரசைக் கலைத்து விட வேண்டும் என்பதுதான். ஆனால் வாஜ்பேயி அரசு மரபை நினைத்துக்,

கொண்டு கலைப்பதில் சுணக்கம் காட்டி னால் ராஜ்யசபா தேர்தலே முடிந்து விடும். அதில் ஒரு அ.தி.மு.க.வினரும் ஜெயிக்க முடியாதே! அப்புறம் வெடிகுண்டுத் தீவிரவாதமும் முழுமையாக ஒடுக்கப்பட்டு விட்டால் சட்டமன்றத் தேர்தலிலும் ஜெயிக்க முடியாது!

இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் 'உடனடியாக தி.மு.க. – அரசைக் கலைக்க வேண்டும்' என்கிற ஒரேயொரு கோரிக்கை யோடு, செயற்குழுவின் முடிவில், "தார்மீக நெறிகளைக் கட்டிக் காக்கிற வகையில் சேடப்பட்டி ராஜிநாமா செய்த மாதிரி, மத்திய அரசிலுள்ள மற்ற அமைச்சர்களும் ராஜிநாமா செய்ய வேண்டும். அல்லது வாஜ்பேயி, அவர்களின் பதவியைப் பறிக்க வேண்டும்!" என்றும் பேட்டியளித்தார் ஜெ.

மற்றவர்களும் என்பதில் அத்வானியும் அடக்கம். பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் அத்வானி மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டுதான் ஜெ. அப்படியொரு அழுத் தம் கொடுத்திருக்கிறார். அத்வானியின் பெயரைத் தாம் குறிப்பிடாவிட்டாலும் சு. சுவாமி மூலம் அத்வானியின் பெயரைப் போட்டு உடைத்திருக்கிறார் ஜெ.

அதாவது, "நான் சொல்றதைக் கேட் கலைன்னா, உங்க அடி மடியிலேயே என் னால கை வைக்க முடியும்னு அம்மா காட்ற சாணக்கியம்தாங்க இது!" என்று ஜெவின் விசுவாசிகள் சொல்லிச் சொல்லிப் புல்லரித் துப் போகிறார்கள். இன்னும் வெளிப்படை யாகச் சொல்லப் போனால், 'அத்வானியா, கருணாநிதியா?' என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்' என்று பி.ஜே.பிக்கு ஜெ விட்டிருக்கும் இறுதி எச்சரிக்கையாம் இது!

இந்த எச்சரிக்கைக்குப் பிறகுதான் 'தி.மு.க. அரசு பதவி விலக வேண்டும்' என்று மட்டுமே கோரி வந்த தமிழக பி.ஜே.பியின் பொதுச் செயலாளர் இல. கணேசன் இப்போது, "356-ஐப் பயன்படுத்த வேண்டுமென்று மத்தியில் நாங்கள் வற் புறுத்துகிற கட்டாயத்துக்கு உள்ளாக் காதீர்கள்!" என்று அறிக்கை விட்டிருப்ப தாகவும் சொல்கிறார்கள்.

இந்த அரசியல் பரபரப்பில் தி.மு.க. வின் நிலை என்ன? "என் ஆட்சியின் நாட்கள் மட்டுமல்ல; என் ஆயுளின் நாட் கள் எண்ணப்பட்டாலும் நான் கவலைப் படப் போவதில்லை!" என்று சட்டசபை யிலேயே கலைஞர் அறிவித்திருந்தாலும் தொண்டர்கள் இன்னும் அத்தனை பக்கு வத்துக்கு வரவில்லை.

"மறுபடியும் தேர்தல்னு வந்தா ஜெயிக்க வேண்டாமா?" என்கிறார் ரொம்பவும் சோர் வோடு, செங்கல்பட்டைச் சேர்ந்த தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

ஆனாலும் தலைவர்கள் மட்டத்தில் கலைப்புக்குத் தயாராகவே இருக்கிறார்கள். "தன்மானம்தான் முக்கியம்!" என்கிறார்கள். கலைஞர் டெல்லிக்குச் சென்று வாஜ்பேயி யையும் அத்வானியையும் சந்தித்ததில் முரசொலி மாறனுக்குத் துளியும் விருப்ப மில்லையாம். "ஆட்சிக்காக நாம் யாரையும் போய் தாஜா செய்ய வேண்டிய அவசிய மில்லை. கலைத்தால் கலைக்கட்டுமே!" என்று சொல்லி விட்டாராம். அதனால் தான் கலைஞரோடு மாறன் டெல்லிக்குப் போகவில்லை என்று தி.மு.க. தரப்பில் சொல்கிறார்கள்.


மக்களும் கூட இப்போது 356 ஜெயிக் குமா 27 ஜெயிக்குமா என்கிற ஆர்வத்தில் தான் இருக்கிறார்கள். 356-ன் புனிதம் பெரிதா அல்லது 27-ன் ஆதரவு பெரிதா என்பதை இனி வாஜ்பேயிதான் முடிவு செய்ய வேண்டும்.

கடைசியாக, பி.ஜே.பியில் அனைத் திந்திய அளவிலான கட்சிப் பொறுப்பில் இருக்கிற ஒரு முக்கியஸ்தரைச் சந்தித்த போது சொன்னார்: "ஜெவைக் கழற்றிவிட நாங்கள் தயாராகிக் கொண்டிருக்கிறோம்!"

— பிரின்ஸ், ப்ரியன்

படம் : **சௌந்தர்ராஜன்**

அட்டை வண்ணப்படம் : **ரவிசங்கரன்**



"அந்த ஆளு போலீஸ்காரன் மாதிரி வேஷம் போடறான்னு நினைக்கிறேன்..."

"எப்படிச் சொல்றே?"

"முனியாண்டி மாமூல் கொடுத்தப்ப, 'தாங்க்ஸ், முதல் தேதி கண்டிப்பா திருப்பித் தந்துடறேன்'னான்!"

– ந. செந்தில் குமார்

“நமது நாட்டில் மரம் நடும் விழா எடுத்து ஆண்டுதோறும் மரம் நட்டு வருகிறோம். இவை பேணிப் பாதுகாக்கப் படாமல், நட்ட இடத்திலேயே தொடர்ந்து மரம் நடுகின்ற நிகழ்வுகள் ஏற்படுகின்றன! வளர்ந்த மரங்களையும் பாதுகாக்க வேண்டுமென்ற பக்குவம் நமது இளைய சமுதாயத்தினரிடமாவது ஏற்பட்டால்தான் நமக்கு விடிவு காலம் எனத் தோன்றுகிறது.”


– இப்படி ரொம்பவும் ஆதங்கத்தோடு எழுதியிருப்பவர் வேறு யாருமல்ல; நமது சென்னை மாநகர மேயர் மு.க. ஸ்டாலின்தான். அமெரிக்காவிலுள்ள ஃப்ளோரிடா மாநிலத்தின் இயற்கை அழகுகளைப் பார்த்துவிட்டு வந்த மேயர்தான் 'பயணச் சிறகுகள்' (குங்குமம் 7.11.97) என்கிற தமது தொடர்கட்டுரையில் இப்படி ஆதங்கப்பட்டிருக்கிறார்.

இந்த ஆதங்கம் நமது மேயருக்கு மட்டும்தானா? நமக்கும் நிறையவே இருக்கிறது.

ஆனால், சென்னை நகரில் நடப்படுகின்ற மரங்களை வளர விடாமல் வெட்டிக் கொண்டே இருப்பது யார்? இப்போதிருக்கிற முதிய தலைமுறையா அல்லது இளைய தலைமுறையா?

இரண்டுமேயில்லை. பெரிய பெரிய விளம்பர போர்டுகளை வைத்திருக்கிற செல்வாக்குள்ளவர்கள்தான் தங்களுடைய விளம்பர போர்டுகள் (Hoardings) மரங்களால் மறைக்

மரங்களை வெட்டுவது யார்?







கப்பட்டு விடக் கூடாது என்பதற்காக அரசால் நடப்படுகிற மரக்கன்று களை வளர விடா மலேயே செய்து கொண் டிருக்கிறார்கள். வளர்ந்து கொண்டிருக்கிற இளைய மரங்களையும் ஈவு இரக்கமில்லாமல் வெட் டித் தள்ளிக் கொண்டிருக் கிறார்கள். இதற்கு நாம்






இங்கே வெளியிட் டிருக்கிருக்கிற புகைப் படங்களே சாட்சி!

இந்த நிலையில் வருகிற இரண்டாண் டுகளில் 2.77 கோடி ரூபாய் செலவழித்து 25 லட்சம் மரக்கன்று களை நடப் போகிற தாம் அரசு! இப்படி நடப்பட விருக்கிற மரக் கன்றுகளை விளம்பரப் பலகை களின் சொந்தக்காரர் கள் வெட்டிச் சாய்க்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

சரி, இவை ஒரு புறமிருக்கட்டும்! விளம்பரப் பலகைகளில் மாநகராட்சிக்காவது நிறைய வருமானம் கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை. கடந்த பத்தாண்டு காலமாக இத்தொகை சரி வர வசூல் செய்யப்படவில்லையென்றும் இனி இந்த வசூல் வேட்டை முடுக்கி விடப்பட்டு, 97-98ஆம் ஆண்டுகளில் 25 லட்ச ரூபாய் வசூலிக்கப்படும் என்றும் சென்ற ஆண்டின் மாநகராட்சி நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.



அதன்படி 25 லட்ச ரூபாய் வசூலிக்கப்பட்டிருப்பதாகவே வைத்துக் கொண்டாலும் மரம் நடுவதற்காக அரசு இந்த ஆண்டு செலவிடப் போகும் 1.37 கோடி ரூபாய் எங்கே? வெறும் 25 லட்ச ரூபாய் எங்கே?

பச்சை மரங்களில் ஆணியடிப்பதுகூடத் தவறு என்கிற எண்ணம் உலகம் பூராவும் பரவிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், இந்த விளம்பரப் பலகைகளின் சொந்தக்காரர்கள் இப்படி மரங்களை வெட்டிச் சாய்த்துக் கொண்டிருப்பது எந்த விதத்தில் நியாயமாக முடியும்?

எனவே, இனியும் மேயரவர்கள் பொதுமக்களைக் குற்றம் சாட்டுவதை விட்டு விட்டுத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

— இளங்கோவன்

●● மத்திய அமைச்சரவையில் சேருவதா வேண்டாமா என்ற பிரச்னைக்கு ம.தி.மு.க.வில் இன்னமும் தீர்வு காணப்படவில்லை. சமீபத்தில் நடைபெற்ற கட்சி நிர்வாகக் குழுவில் இந்த விஷயத்தில் ஒரு தீர்க்கமான பிளவு இருப்பதைக் கண்டு வைகோ தலையைச் சொறிந்து கொண்டிருக்கிறார். செஞ்சி ராமச்சந்திரன் ஆதரவாளர்கள்; அவரை அமைச்சரவையில் சேர்த்தே ஆக வேண்டும்' என்று பிடிவாதமாக இருக்கின்றனர். "தி.மு.க.வில் இருக்கும்போது அண்ணனை (செஞ்சியார்) ஓரங்கட்ட நினைத்த கலைஞரை எதிர்த்தே மாவட்ட அரசியல் நடத்த வேண்டியதாக இருந்தது. அப்படியும் தொடர்ந்து மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது நீண்ட அரசியல் அனுபவம் காரணமாக செஞ்சியாருக்கு அமைச்சராகும் வாய்ப்பைக் கொடுத்தே ஆக வேண்டும்" என்கிறார் விழுப்புரம் மாவட்ட ம.தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

ஆனால் தென் மற்றும் தஞ்சை, திருச்சி மாவட்ட ம.தி.மு.க.வின் கண்ணின் மணிகள், "மத்திய அரசில் பங்குபெற வேண்டாம்" என்று வலியுறுத்திச் சொல்கிறார்கள். இதற்கிடையில் ஜெ.யின் கலைப்புக் கோரிக்கையை ம.தி.மு.க.வினர் கடுமையாக விமர்சிக்கின்றனர்.

"இவ்வளவு அவசரப்பட வேண்டிய அவசியமில்லை. அதிகாரம் அவரை (ஜெ) எப்படி மாற்றும் என்பது எங்களுக்குத் தெரியும். எனவே எங்கள் பொதுச் செயலாளரிடம், பிரதமர் இது விஷயத்தில் கருத்துக் கேட்டால், 'கலைக்க வேண்டாம்' என்றுதான் சொல்வார்" என்கிறார் ஒரு ஸீனியர் ம.தி.மு.க. பிரமுகர்.

●● 'சுவாமிநாதன், நெடுஞ்செழியன் ஆகியோர் கவர்னர்களாகப் போகிறார்கள்' என்று வந்த செய்தியை மறுத்திருக்கிறார் ஜெ. இதன் பின்னணி என்னவென்று விசாரித்தோம். வாய்ப்பு வந்தது உண்மைதானாம். ஆனால் அம்மையாரின் பாலிடிக்ஸ் என்னவென்றால், தமது கோரிக்கைகளை பா.ஜ.க. அரசு ஏற்றுக் கொள்ளாத நிலையில், அவர்கள் கொடுக்கும் எந்தப் பதவியையும் ஒப்புக் கொள்ளக் கூடாது என்பதுதானாம். ஏனென்றால் அப்படி ஒப்புக் கொண்டால் 'கமிட்' ஆகி கோரிக்கைகளுடன் சமரசம் ஆகி விடுவோமோ என்ற தயக்கமாம்!

ஜீன்ஸில் வரவிருந்த வீரப்பன்!



●● புதிய தமிழகம் கிருஷ்ணசாமியும், தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகமும் (த.மு.மு.க.) நெருங்கி வந்துள்ளது தி.மு.க.வினருக்கு சங்கடத்தை உண்டாக்கியுள்ளது. "கிட்டத்தட்ட 20லிருந்து 30 சட்டமன்றத் தொகுதிகள் வரை புதிய தமிழகத்திற்குச் செல்வாக்கு உண்டு. எக்குத்தப்பாக, சட்டசபைத் தேர்தல் வரும்பட்சத்தில், கிருஷ்ணசாமியுடன் கூட்டணி அமைக்க

ஒரு வாய்ப்பு இருந்தது. ஆனால் இப்போது அவர் முஸ்லீம் முன்னேற்றக் கழகத்துடன் சேர்ந்து விட்டதால் எங்களுக்குச் சங்கடம்தான்" என்றார் ஒரு தி.மு.க. பிரமுகர். ஏனென்றால் தீவிரவாத இளைஞர்கள் த.மு.மு.க.வால் ஊக்குவிக்கப்படுகிறார்கள் என்று போலீஸ் செய்திகள் சொல்லுவதுதான்.

●● தாற்காலிகமாக தங்கபாலுவின் தலைவர் பதவி காப்பாற்றப்பட்டுள்ளதாகச் சொல்லுகிறார்கள் காங்கிரஸ்காரர்கள். சோனியா காந்தியிடம் முட்டி மோதியும், 'உடனடியாக என்னால் எதுவும் செய்ய முடியாது' என்று சொல்லி விட்டாராம் அவர். இதனால் பிரபு, அன்பரசு, குமரி, திண்டிவனம் ராமமூர்த்தி ஆகியோர் சற்று மனவருத்தத்தில் இருக்கிறார்களாம். "தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பதால்தான் தலைவி தயங்குகிறார்" என்றார் ஒரு பிரமுகர். இதற்கிடையில் அடைக்கலராஜை காங்கிரஸில் சேர்த்து, அவரைத் தலைவர் பதவிக்கு முன்னிறுத்தினால் என்ன என்று சிலர் தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

●● இந்து முன்னணித் தலைவர் இராம. கோபாலனும், முதல்வரும் சந்தித்தது குறித்துக் கொஞ்சம் கவலைப்பட்டுப் போயிருக்கிறார்கள் அ.தி.மு.க.வினர். அவர்களிடையே இருந்த பனிப்பாறையை உடைத்து, அவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்த பத்திரிகையாளரைக் கடிக்கிறார்கள். இந்தச் சந்திப்பின் போது, முதல்வர் தம் தரப்பு வாதங்களைத் தெளிவாக எடுத்து

காதில் விழுந்தவை :



வைத்தாராம். "எந்தவிதமான விரவாதத்தையும் நாங்கள் திர்ப்போம்" என்பதுதான் அவர் சொன்னதன் அடிக்கருத்தாம். கோபாலன் சற்றே சந்தோஷப்பட்டுத்தான் திரும்பினாராம்.

அரசியலிலிருந்து விடுபட்டு இரண்டு துக்கடாக்கள் :

●● தொடர்ந்து தமது படங்கள் தந்த தோல்வியால் பயங்கர நிதி நெருக்கடியால் இருக்கும் அந்த நடிகர் - இயக்குனர் நன்றாக விற்கும் தமது பத்திரிகையை விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கிறார். யார் வாங்கினாலும் தாம் அதில் தொடர்ந்து எழுதுவதாக உறுதியளிக்கிறார்.

●● 'ஜீன்ஸ்' படத்தில் வீரப்பன் வருவதாக இருந்ததாம். மிரண்டு விடாதீர்கள்! அவனைப் பற்றிய வீடியோ கிளிப்பிங்கை 'நக்கீரன்' கோபாலிடம் கேட்டார்களாம். "நாங்கள் அந்தப் படத்தை கிராபிக்ஸ் சேர்த்து உபயோகித்துக் கொள்கிறோம்" என்றும் சொன்னார்களாம். ஆனால், பலவிதமான அவதூறுகள் வந்து சேருமே என்று கோபால் கிளிப்பிங் கொடுக்க மறுத்து விட்டாராம்!

— தில்லப்பா

ஹரித்வார் கும்பமேளா

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை கும்பகோணத்தில் மகாமகம். அதே போல் வட இந்தியாவிலும் நான்கு இடங்கள். அவை, ஹரித்வார், பிரயாகை, உஜ்ஜயினி மற்றும் நாசிக். அவை வெவ்வேறு ஆண்டுகளில் வரும். இவ்வாண்டு ஹரித்வாரில்.

வருடத்துக்கு ஒரு ராசி விதம், 12 ராசிகளில் சஞ்சரித்து விட்டு, தேவ குரு மீண்டும் கும்ப ராசியில் வந்து இருக்கும்போது, சூரிய-சந்திரர் மேஷராசியில் சேர்ந்து அமையும் புனிதவேளை தான் 'கும்பவேளை' எனப்படுவது. அந்தப் புனிதச் சேர்க்கை 1998 ஏப்ரல் 25 இரவு சுமார் 9 மணியளவில் தொடங்கி, ஏப்ரல் 27 நள்ளிரவுக்குச் சற்று முன்னால் வரை நிலவும். அப்போது ஹரித்வாரில் லட்சக் கணக்கில் மக்கள் வந்து கூடிக் கங்கையில் புனித நீராடுவார்கள். அதுதான் 'கும்பமேளா' எனப்படுவது. இந்த நூற்றாண்டின் இறுதிக் கும்பமேளா!

முக்கிய மேளா ஏப்ரல் 25-27ல் தான் என்றாலும், பிப்ரவரி 1 முதல் ஏப்ரல் 30 வரை உள்ள மூன்று மாத காலத்துக்கும் 'கும்ப காலம்' அனுஷ்டிக்கப் படுகிறது. இந்தத் தொண்ணூறு நாட்களுமே நீராடலுக்குப் புனிதமானவை தான். முக்கிய மேளா தினங்களில் நீராடுவதால் கிடைக்கும் புண்ணியம், இந்தத் தொண்ணூறு நாட்களில் என்றைக்கு நீராடினாலும் கிடைக்கிறது. கும்ப ஸ்நான பலன் பற்றிப் பேசும் விஷ்ணுபுராணம்:

"அஸ்வமேத சகஸ்ராணி வாஜ்பேய சதானிச
லக்ஷப் பிரதக்ஷிணா ப்ருத்வயா:
கும்பஸ்நானேன தத்பலம்"

என்கிறது. அதாவது ஓராயிம் அஸ்வமேத யாகம், ஒரு நூறு வாஜ்பேய யாகம், மற்றும் ஒரு லட்சம் தடவை பூமியைச் சுற்றி வருவதால் கிடைக்கும் புண்ணியம் ஒரே ஒரு கும்ப ஸ்நானத்தில் கிடைத்து விடுகிறது. அப்போது, தேவர்களும் மக்களோடு மக்களாக வந்து கலந்து கும்பஸ்நானம் செய்வதாக ஐதிகம்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது, கடலிலிருந்து 14 வகை ரத்தினங்கள் வெளிப்பட்டன. இறுதியாக அமிர்தம்! அதை உண்டவர் இறவாநிலை பெறுவர். தேவர்கள் போல், அசுரர்களும் அமிர்தம் உண்டு அந்நிலை பெற்று விட்டால்...? எனவே, அசுரர்களுக்கு அமிர்தம் கிடைக்காமல் செய்வதெங்ஙனம்? திட்டம் உருவாயிற்று. அதன்படி, இந்திரன் மகன் ஜயந்தன் அமிர்த கலசத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டான். விடுவார்களா அசுரர்கள்? ஜயந்தன் ஓட... அசுரர் துரத்த, பன்னிரெண்டு நாட்கள் இடைவிடா தேவாசுரப் போர்!

அந்தப் பன்னிரெண்டு நாளும் தினம் ஒரு இடமாக ஓடி, ஜயந்தன் அமிர்த கலசத்தை மறைத்து வைத்துக் காத்தான். அப்பணியில் குரு, சூரியன், சந்திரன் மூவரும் கலசம் காப்பாற்றப்பட ஜயந்தனுக்கு உதவி புரிந்தனர். எனினும் அந்தப் பன்னிரெண்டு இடங்களிலும், கலசத்தின் குலுங்குதல் காரணமாக, சில அமிர்தத் துளிகள் தரையில் தெறித்து விழுந்தன. துளிகள் தரையில் விழுந்த அவ்வேளைதான் கும்ப வேளை! இடங்கள் தான் கும்ப மகாபூமி! கலசம் காப்பாற்றப்பட சூரியன்-சந்திரன்-குரு உதவியதால், அம்மூவரும் அப்போது இருந்த ராசியில் மீண்டும் அவர்களின் சேர்க்கை நிகழும் போது 'கும்பவேளை' அனுசரிக்கப்படுகிறது.

தேவர்களின் ஒருநாள், மனிதர்களுக்கு ஓராண்டு. எனவே ஜயந்தன் கைக் கலசத்திலிருந்து 12 நாளில் 12 இடங்களில் அமிர்தம் சிந்திய புனிதவேளை மனிதர்களுக்கு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகிறது. அந்த 12 இடங்களில் நான்கு மட்டுமே இப்பூலோகத்தில் உள்ளன. அவை தான், ஹரித்வார், பிரயாகை, உஜ்ஜயினி மற்றும் நாசிக். மற்ற எட்டும் தேவலோகத்தில். பூலோக நான்கும் நமது பாரதத்தில்.. எனவே தான் இது புண்ணிய பாரதம்!

மூன்றுமாத கும்ப காலத்தில் 6-7 நாட்கள் மிகவும் சிறப்புப் பெற்றவை. அவை, மகா சிவராத்திரி, சைத்ர அமாவாசை, புதுவருடப் பிறப்பு மேஷ சங்கராந்தி, மகாகும்ப தினங்கள், ஸ்ரீராம நவமி, வைசாக அமாவாசை ஆகியன. இவை தவிர கிரகணம் ஏற்பட்டால், அதுவும் இதில் அடங்கும். இவற்றில், மூன்று தினங்கள்

மிகவும் கோலாகலமானவை. அவை 'ஷாஹி ஸ்நான்' எனப்படுகின்றன. அந்த தினங்களில் சாது-சந்நியாசிகள் மட்டுமே வந்து 'ஹர பௌடி'- ஹரன் படித்துறையில் நீராடுவார்கள். அவர்களுடன் சேர்ந்து நீராடப் பொது மக்களுக்கு அனுமதி கிடையாது. நூற்றுக் கணக்கான சாது-சந்நியாசிகள் படித்துறை நோக்கித் தமக்கே உரிய பதாகை முதலான ஆடம்பரங்களோடு ரத- கஜ-துரக-பதாதி என்ற பரிவாரங்கள் புடைசூழ ஊர்வலமாக வருவார்கள். அதைக் கண்டு களிப்பதற்கு என்றே சாலையின் இரு மருங்கிலும் லட்சக் கணக்கில் மக்கள் கூடுவார்கள். சாதுக்களின் அந்த ஆடம்பர ஊர்வலம் 'பேஷாவாயி' எனப்படும்.

முதல் ஷாஹி தினம் மகா சிவராத்திரியன்று. அன்று சந்நியாசிகள் மட்டும்தான். இரண்டாவது சைத்ர அமாவாசை தினம். அன்று சந்நியாசிகள், வைராகிகள், உதாசிகள் மற்றும் நிர்மல் போன்றோர் வருவர்.

மூன்றாவதுதான் முக்கியமானது. அது மேஷ சங்கராந்தி வேளையில் நடக்கும். நான்காவதாக ஒரு ஷாஹி ஸ்நானும் உண்டு. அது வைசாக அமாவாசையன்று. அது முற்றிலும் வைராகிகளுடையது.



இந்த மகா கும்பமேளாவில் மற்றொரு சிறப்பும் உண்டு. சாது-சந்நியாசிகள் ஒரே இடத்தில் மூன்று நாட்களுக்கு மேல் தங்குவதில்லை. இது மரபு. ஆனால், கும்பமேளாவில் மட்டும் 'ஷாஹி ஸ்நான்' காரணமாக அம்மரபு மீறப்படுகிறது. ஹரித்வாரில் அவர்கள் பல நாள் தங்குவர். எனவே, கும்பமேளா புனித நீராடலுக்கு மட்டுமின்றி, அந்த சாது-சந்நியாசிகளை ஒரே இடத்தில் தரிசித்து ஆசி பெறுவதற்காகவும் மக்கள் லட்சக் கணக்கில் அங்கு வந்து கூடுகின்றனர்.

இந்த நூற்றாண்டின் கடைசி கும்பமேளா என்பதால், இவ்வாண்டின் ஹரித்வார் கும்பமேளா மிகமிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

— ஜானகி மணாளன்

கோடைக்கு நீச்சலா? இதோ சில டிப்ஸ்!

கோடைக்காலம் முழுமூச்சுடன் தொடங்கி விட்டது. ஜில்லென்ற உணர்வுக்கும் சரி உடற்பயிற்சி என்ற கோணத்திலும் சரி, நீச்சல் ஒரு உல்லாசமான எளிய பொழுது போக்கு. ஆனாலும் ஒவ்வொரு வருடமும் ஆறு, ஏரி, நீச்சல்குளம் ஆகிய நீர் நிலைகளில் சில உயிரிழப்புகளாவது நடை பெறுகின்றன. பாதுகாப்பான நீச்சலுக்கு இதோ சில ஆலோசனைகள்.

முதலில் ஓய்வு : நீச்சலடிப்பதற்கு முன்னால் கொஞ்ச நேரமாவது (குறைந்தது ஐந்து நிமிடங்கள்) ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு இரண்டு நிமிடங்களுக்கு மெதுவாக ஓடுவது அல்லது வேகமாக நடப்பது நல்லது. அதற்குப் பிறகு நீரில் குதியுங்கள்.

உணவா? பொறுங்கள் : வயிறு முட்டச் சாப்பிட்டிருந்தால் அதைத் தொடர்ந்து ஒன்றரை மணி நேரமாவது நீச்சலடிப்பதைத் தவிர்த்து விடுங்கள். வெறும் வயிற்றோடு நீச்சலடித்தால் களைப்பாகிவிடுமே என்று கவலைப்படுபவர்கள் திரவ உணவை அருந்திவிட்டு, அதற்குப் பிறகு அரை மணி நேரம் கழித்து நீச்சலடிக்கலாம்.

அறிமுகம் இல்லாத ஆபத்து : நீங்கள் நீந்தத் தெரிந்தவராகவே இருக்கலாம். என்றாலும் அறிமுகமில்லாத நீர் நிலைகளில் நீச்சலடிக்க வேண்டாம். அவற்றில் எதிர்பாராத ஆபத்துக்கள் (ஆற்றில் சுழல் இருக்கிற மாதிரி) காத்திருக்கக் கூடும். அப்படியே நீச்சல் அடித்தாலும் பக்கத்தில் யாராவது பார்வையாளராக இருக்கட்டும்.

தொட்டால் தெரியும் : தண்ணீரைத் தொட்டுப் பாருங்கள். தாங்கக்கூடிய குளிர்ச்சியில் அது இருக்கிறதா என்பதைக் கவனியுங்கள். காற்றின் வெப்பமும், தண்ணீரின் வெப்பமும் மிகவும் வேறுபட்டிருந்தால் அது இதயத்தை பாதிக்கக் கூடும்.

மரத்துண்டு உதவும் : நீச்சல் அடிப்பதற்கு முன் காற்றின் வேகம், நீர்நிலையில் ஆழம், கடலாக இருந்தால் அலைகளின் உயரம் இவற்றைப் பற்றி ஓரளவாவது அறிந்து கொள்ளுங்கள். மரத்துண்டு போன்ற மிதக்கும் பொருளை நீருக்குள் போட்டு அது நீருக்குள் இழுக்கப்படும் வேகத்தைக் கொண்டு ஒரு முடிவுக்கு வரலாம்.

உரிய உடை : ஆண்கள் நீச்சடிக்கும் போது வேட்டி, லுங்கி போன்றவற்றை அணிவதைத் தவிர்க்க வேண்டும். அதே போல் பெண்களுக்குப் புடைவை ஏற்றதல்ல. இந்த உடைகள் கைகால்களில் சுற்றிக் கொண்டு உயிருக்கே எமனாக வாய்ப்பு உண்டு.

துன்பம் நேர்கையில் : நீச்சலடிக்கும்போது உடல் களைத்துவிடுவது போலத் தோன்றினால் பதற்றப்படாதீர்கள். தலைக்குமேல் கைகளைத்

தூக்கிக் கரையில் இருப்பவர்களின் கவனத்தைக் கவர ரொம்பவும் முயற்சிக்க வேண்டாம். களைப்போடு இந்த முயற்சிகளை மேற்கொண்டால் நீரில் மூழ்கி விடும் அபாயம் உண்டு. எனவே கொஞ்சம் ஆசுவாசம் ஏற்படும் வரையில் நீரின் மேல் மிதக்கவும்.



குழந்தைகள் ஜாக்கிரதை : கடற்கரையில் இந்தக் காட்சியை நீங்கள் கண்டிருக்கலாம். சிறு குழந்தைகள் கூட அலைகளில் கால் நனைத்தபடி தனியாக நிற்க சில பெற்றோர்கள் அனுமதிப்பதை. இது தவறு. கடல் அலை அந்தக் குழந்தையின் காலை வாரிவிட்டு கடலுக்கு இழுத்துச் செல்லக்கூடிய அபாயம் உண்டு.

நீச்சல் வேறு டைவிங் வேறு : நீச்சல் நன்றாகத் தெரியும் என்ற ஒரே காரணத்தைக் கொண்டு நீங்களாகவே டைவிங் போர்டிலிருந்து டைவ் செய்யத் தொடங்கி விடாதீர்கள். டைவிங்கின் போது எப்படிப்பட்ட கோணத்தில் எந்த உடல் பாகம் நீரில் முதலில் படும்படி குதிக்க வேண்டும் என்பதற்கு ஓரளவாவது தகுந்த நபர்களிடம் பயிற்சி எடுத்துக் கொள்வது நல்லது. இல்லாவிட்டால் ஆபத்து.

நிரந்தர நீர் ஜீவன்கள் : நீச்சலடிக்கும்போது எந்தவித பூச்சி அருகில் வந்தாலும் ஒதுங்கிச் செல்வது நல்லது. காரணம் விஷமில்லாத பூச்சிகள் கூட தோலில் அரிப்பை ஏற்படுத்தக் கூடும். ஒரு குறிப்பிட்ட குளத்தில் நீச்சல் அடிக்கும் போது (அது என்னதான் சுத்தமாகப் பராமரிக்கப் படுகிறது என்றாலும்) தொடர்ந்து தோலில் அரிப்போ, தோல் சிவப்பாவதோ நடைபெறுகிறது என்றால் நீரில் உள்ள குளோரின் அளவு உங்களுக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்று பொருள். எனவே வேறு நீச்சல் குளத்திற்கு மாறி விடுங்கள். ●

— ஜி.எஸ்.எஸ்.



செவ்வந்தி

3

செவ்வந்தி கதவருகே வந்தாள். ஒருகணம் தயங்கினாள். திடீரென்று ஆவேசம் வந்தது போல், தடாலென்று கதவை அகலத் திறந்தாள். எண்ணெய் காணாத கதவு அழுது கொண்டே விரிந்தது. இடதுபக்கத் திண்ணையில் செட்டியார். வளையல் செட்டியார். கால் மேல் கால் போட்டு நடுத் திண்ணையில் உட்கார்ந்து இருந்தார். பக்கத்தில் அம்மாவும், அவர் சாப்பிட்டுக் கைகழுவிய தட்டும்.

செட்டியார் வளையல் விற்கிறவர். ஊர் ஊராய், வீடு வீடாய்ச் சென்று வளையல் விற்கிறவர். தொட்டில் மாதிரி தோளில் ஒரு பாரம். 'வளையல்... வளையல்...' என்று மற்றவர்கள் மாதிரி கூவிக் கொண்டு அலைய மாட்டார். தெருவோர நிழலிலே நடப்பார். தோளில் தொங்கும் வளையல்கள் தனக்குத்தானே, ஒன்றோடு ஒன்று மோதிக் கிசுகிசுக்கும். அவ்வளவு தான். பெண்கள் விழித்துக் கொள்வார்கள்.

முன்பு ஒருநாள். ஊரெல்லாம் சுற்றிப் பதினோரு மணிக்கு உடைந்து போய் வந்தார். அம்மாவிடம் ஒரு ரூபாயை எடுத்து நீட்டி காலைப் பலகாரத்திற்கு. அம்மாவும் சேம்ப இலையில் நாலு பணியாரம், ரெண்டு ஆப்பம் என்று வைத்துக் கொடுத்தாள். காலை மடித்து, நடுத் திண்ணையில் உட்கார்ந்து விட்டார். பிற்பாடு அது நிதம் நிதம் நிகழ்ந்தது.

செட்டியார் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். அம்மா மெல்லச் சிரித்தாள். கசிகின்ற சிரிப்பு. அம்மாவின் மதிய நேரத் தனிமையில் ஒரு பேச்சுத் துணையாக – அநேகமாக இவர்தான் வந்து பேசிக் கொண்டிருப்பார். அந்தப் பேச்சின் கதகதப்பில் இருந்து விடுபட்டு எழ முடியாமல் அம்மாவும் உட்கார்ந்து விடுவாள். அவர்களிடையே ஒரு பரிச்சயம் இளைத்து விட்டது. அந்தப் பரிச்சயம் அப்பாவின்

பாரதிபாலன்

மரியாதையை அறுத்துக் கொண்டிருந்தது. செவ்வந்திக்குப் பயம்! தன் கனவையும் இது கல்லால் அடித்து நொறுக்கி விடுமோ என்ற பயம். தாயைப் போல் பிள்ளை, நூலைப் போல் சேலை என்று ஊர் வாய் முன் வைத்துப் பேசி விடுமோ என்று பயம். அந்தப் பயம்தான் அவளைப் பதுங்கிப் பதுங்கி, நடக்கச் செய்கிறது. உள்ளதை உள்ளபடி திறக்க முடியாது திணறடிக்கிறது.

அம்மா இது பளு. சுமக்கின்றவர்களையே போட்டு அமுக்கி விடுகின்ற பளு. நீ இதை ஏன் மனம் விரைக்கச் சுமந்து கொண்டிருக்கிறாய்? செவ்வந்தி அம்மாவைப் பார்த்து விட்டு நிற்காமலே சிறிது தயங்கி, வேகமாய் விலகிப் போனாள். அடுப்பறைக்குப் போனாள். அங்கே புழுக்கம். உள் அறைக்குப் போனாள். அங்கிருந்து திண்ணை தெரிந்தது. கொல்லைப் பக்கம் போனாள். கொல்லைக் கதவைத் திறந்தாள். அது கிழக்குத் தெரு. செவ்வந்தி வீட்டின் விசேஷம் அதுதான். அது நீளமான வீடு. முன்னால் இடமும் வலமுமாய் இரண்டு திண்ணைகள். திண்ணையை அடுத்துச் சிறிது காலி இடம். பருத்தி மார், தென்னை மட்டை, வைக்கோல் போர், என்று அடைந்து கிடக்கின்ற இடம். அதை ஒட்டி சின்னக் கொட்டம். மாட்டுக் கொட்டம். அங்குதான் அப்பாவின் இரண்டு காளை மாடுகளும் இருக்கும்.

அப்பாவிடம் இரண்டு மாட்டு வண்டிகள் உள்ளன. ஒன்று மொட்டை வண்டி. மற்றொன்று கூட்டு வண்டி. மொட்டை வண்டி குப்பை கூளங்கள் சுமப்பதற்கும், கல்லு மண்ணு அடிப்பதற்கும். கூட்டு வண்டி கோயில், குளம் என்று மனிதர்களைச் சுமக்கும்!

செவ்வந்தி கொல்லைக் கதவின் தாழிடும் வளையத்தை நீக்கினாள். கதவு படாரென்று விலகியது. தெரு முழுக்க வெயில் கொதித்துக் கொண்டிருந்தது. அப்பா பரக்கப் பரக்கத் தார்க் குச்சியால், வண்டிச் சக்கரத்தில் ஒட்டியிருக்கும் செம்மண் வடுக்களை உடைத்து, நொறுக்கிக் கொண்டிருந்தார்.

அப்பாவின் வேஷமே மாறிப் போயிருந்தது. உடல் முழுக்க வேர்வை. செம்மண் ஊறி ஒழுகிக் கொண்டிருந்தது. தலை, தோள், வயிறு என்று செம்மண் ஒழுகல். இவள் நிழலாடிய போது அப்பா ஒருகணம் நிறுத்தி, இவளை நிமிர்ந்து பார்த்தார். செவ்வந்திக்கு அந்தப் பார்வையைச் சந்திக்க முடியவில்லை. அந்தக் காட்சி நெஞ்சில் முட்டிக் கொண்டு நின்றது. கண்களை நெருடியது. 'அப்பா எனக்குத்தான் புரியவில்லை. உங்களுக்கு ஏன் புரியவில்லை!' அப்பா வண்டியை நோண்டிக் கொண்டு நிமிஷங்களை உதிர்த்துக் கொண்



டிருந்தார். அவரின் தயக்கம் அவளுக்குப் புரிந்து விட்டது.

"அப்பா..." என்று அலறினாள்.

"என்னம்மா?"

"நாழி ஆகலை? சாப்பிட வாங்க..."

"தோ வர்றேன்."

அவள் காத்திருந்தாள். அவளுக்குப் பொறுமை தப்பியது. 'தோ... வர்றேன். தோ வர்றேன்' என்று சொல்லுகிறாரே தவிர வந்தபாடில்லை.

"வர்ற மாதிரி இல்லையா?"

"வர்றேம்மா. இந்தக் குப்பை எல்லாம் தட்டி எறிஞ்சு, சுத்தம் பண்ணிட்டு வர்றேன்!"

"இத்தனை நாளாய்த் தெரியலையா - இந்தக் குப்பை?"

அப்பா சட்டென்று திரும்பி அவளைப் பார்த்தார். அவர் முகம் இறுகியது. அவளைப் பார்க்க முடியாது. கண்கள் கூசின. அப்படியே குறுகிப் போனார். செல்வந்திக்கு என்னவோ போல ஆயிற்று. ஒரு நிமிடம் தடுமாறி விட்டாள். பிற்பாடு சமாளித்துக் கொண்டு, தன்னைச் சரிசெய்து கொண்டாள்.

அப்பா விறுவிறுவென்று வீட்டிற்குள் வந்தார். தொட்டித் தண்ணீரை ஆவேசமாக அள்ளி அள்ளி முகத்தில் அறைந்து கொண்டார். கொடியில் தொங்கிக் கொண்டிருந்த துணியை விருட்டென்று உருவி, முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டே திண்ணைக்கு வந்தார். திண்ணை காலி. அம்மா மட்டும் பாத்திரங்களை அள்ளிப் போட்டுக் கழுவிக் கொண்டிருந்தாள். அப்பா அந்தத் திண்ணையை ஒரு பார்வை பார்த்தார்.

"திண்ணை, நாலு நல்ல மனுஷங்க வந்து உட்கார்ற இடம். வெயிலுக்கு இளைப்பாறுகிற இடம். அதுல குப்பையையும் கூளத்தையும் சேர்க்காதேனு எத்தனை நாள்தான் சொல்றது..."

அம்மாவுக்கு ஒருகணம் அது புரியவில்லை. திருதிருவென்று அவள் விழி உருண்டது. சட்டென்று ஏதோ இடறின மாதிரி அவள் பார்வை நின்றது. தலையைக் கவிழ்ந்து கொண்டே, "சரி. தொடச்சுப் போட்டுர்றேன். ஒரு குப்பை இல்லாம தொடச்சுப் போட்டுர்றேன்" என்றாள். அவள் கண்களில் நீர் திரண்டு விட்டது.

அப்பா ஒரு நிமிடம் எதுவும் பேசவில்லை. அந்தத் திண்ணையையே பார்த்தார். வெறிகொண்டாற்போல் பார்த்துக் கொண்டிருந்தார்.

"இனி குப்பை சேராதே?"

அம்மா சட்டென்று அப்பாவைப் பார்த்தாள். பொலபொலவென்று அவள் கண்களில் இருந்து நீர் இறங்கியது. அம்மா வெகு நேரம் வரையிலும் வெயிலிலேயே கிடந்தாள். வெயில் ஆளைக் கரைத்துக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் அம்மாவின் உடம்பு தெப்பமாய் நனைந்து விட்டது. உடம்பு கழுவி எடுத்த மாதிரி ஆனது. பின்பு தானாக எழுந்து, வீட்டிற்குள் வந்தாள். மாற்று உடை எடுத்துக் கொண்டு குளிக்கக் கொல்லைப் பக்கம் போனாள்.



"திடீர்னு பஸ் கட்டணத்தை நம்ம முதல்வர் குறைப்பார்னு நான் நினைச்சுக்கூட பார்க்கலை..."

"அதனால உனக்கென்ன?"

"பஸ் டிக்கெட் விலை அதிகமா இருக்கறதைக் காரணம் காட்டி எங்க மாமனார்கிட்ட ஸ்கூட்டர் கேட்டிருந்தேன்!"

— எஸ். எஸ். பூங்கதிர்

சக்திவேல் ராக வாத்தியாரைப் பார்க்கச் சென்றான். பள்ளிக்கூடத்தை ஒட்டி ஒரு சந்து. மிகக் குறுகலான சந்து. அந்தக் கோடியில் ஒரு விளக்கு. தெரு விளக்கு. அந்த உயரத்திற்கு அந்த வெளிச்சம் காணவில்லை. மினுக் மினுக்கென்று விக்கிக் கொண்டிருந்தது. தெரு முழுக்க இருட்டு! மையிருட்டு இல்லை. உருவம் அசைவதும் நகர்வதும் தெரியும். ஏழு மணிக்கெல்லாம் இப்படி இருட்டி விடுகிறது. பழகிய கண்களுக்குத்தான் இந்தப் பாதை. இல்லாவிட்டால் எது பள்ளம் எது மேடு என்று தெரியாது. வாண்டுகள் "ஐஸ்பால்... ஐஸ்பால்..." என்று இருட்டைப் பிளந்து கொண்டு, ஓடிக் கொண்டிருந்தன.

சக்திவேல் நிதானமாக எட்டு வைத்தான். அந்தத் தெரு பழக்கமில்லை. அவனுக்கு இந்தப் பக்கம் ஜோலியே இல்லை. அதுவும் இருள் விழுந்து விட்ட பிற்பாடு இந்தத் தெரு பக்கம் வருவது சங்கடம். பள்ளிக்கூடத்தின் முதுகுக்குப் பின்னாடி ஒரு ஓடை! தண்ணீர் ஓடுகின்ற ஓடையில்லை. வெறும்

கூழாங்கல்லும், கற்றாழையும், சீமைக் கருவேலும் மண்டிக் கிடக்கிற ஓடை. இருள் விழுந்து விட்டால் பெண்கள் 'வெளியே' போகின்ற இடம். இந்த ஊர்ப் பெண்களுக்கு இதுதான் சாபக்கேடு. இருள் விழுந்தால்தான் பாரத்தை இறக்க முடியும். இந்த இருளுக்காகவே காத்திருப்பார்கள்.

சக்திவேலுக்குக் காலை வீசி நடக்க முடியவில்லை. தடவித் தடவித்தான் நடந்து போனான். குப்பென்று ஒரு 'மல்லிகை' வாசனை அவனைக் கடந்து போனது. சிறிது நேரத்தில் கனகாம்பர வாசனை. அதை அடுத்து மரிக்கொழுந்து. பவுடர் வாசனை. இப்படி ஒவ்வொரு வாசனையாகக் கடந்தது. இத்தனை அலங்காரமும் இந்த இருளுக்கும் கருவேல முள்ளுக்கும்தானா?

சக்திவேலுக்குச் சங்கடமாயிற்று. சற்று பொழுதோடு வந்திருக்கலாமோ? செல்வத்தியும் அம்மாவும் கூட இந்த நேரம்தான் போவார்கள். இருளில் சக்திவேல் தோளில் ஒரு கை விழுந்தது. உலுக்கித் திரும்பினான். ராசு வாத்தியார். கடகடவென்று ஒரு சிரிப்புச் சிரித்தார். அவர் அப்படித்தான். யாரை எங்கு பார்த்தாலும் அவருக்கு விசாரிக்கத் தோன்றாது. ஒரு சிரிப்புச் சிரிப்பார். கடகடவென்று இடி இடிக்கிற மாதிரி ஒரு சிரிப்பு. யாரு எது பேசினாலும் எது சொன்னாலும் அவருக்குச் சிரிப்பாணி பொத்துக் கொள்ளும். "ராசு துக்க வீட்டுப் பக்கம் போய்த் தொலையாதேடா" என்று அவரின் நண்பர்கள் பரிகாசம் பண்ணுவார்கள். அந்தப் பரிகாசத்திற்கும் சிரிப்புத்தான் பதில்.

"என்ன மாப்பிள்ளை...?"

"உங்களைப் பார்க்கத்தேன்."

"வாங்க... வாங்க... உங்க அப்பாகிட்டச் சொல்லி விட்டேன். சொன்னாரா?"

"சொன்னார்."

"ஒரு சங்கதி. வாங்க வீட்டுக்குப் போய்ப் பேசலாம்."

"...........".

"பார்த்து வாங்க. நடுச் சென்டராவே நடங்க. ஓரங்களில், அசிங்கம் பண்ணி வெச்சிருக்கும்."

ராசு வாத்தியார் வீடு தெருக் கோடியில் இருந்தது. நுழைந்ததும் ரேழி. அதில் உதவாத சாமான்கள். "வாங்க... வாங்க" என்று கூறிக் கொண்டே முன்னாடி நகர்ந்தார். அடுத்து ஒரு பட்டா சாலை. ஒரு குண்டு பல்ப் மந்தமாக ஒளியைச் சிந்திக் கொண்டிருந்தது. பல்பைச் சுற்றிலும் நூலாம் படை. ரகவாரியாக மூன்று பிள்ளைகள். புத்தகங்களை எல்லாம் இறைத்து வைத்துக் கொண்டு, படிக்கிறேன் என்று பேர் பண்ணிக் கொண்டிருந்தன.

"அம்மா எங்கடா?"

"வெளியே போயிருக்கு..."

நீளமாய் ஒரு பெஞ்சு. பள்ளிக்கூடத்துப் பெஞ்சு. அதன் ஒரு முனையில் ஒரு குட்டிச் சாக்கு. அதில் பாதி நெல். பக்கத்தில் ஒரு முறம். ஒரு பெருக்கு மாரு. பெஞ்சு முழுக்க அழுக்குத் துணிகள். சேலை, வேஷ்டி. பாவாடை – சின்னக் குழந்தைகளின் துணி மணிகள். ராசு வாத்தியார் அத்தனையையும் ஒரே இழுப்பில் வாரி, நின்ற நிலையிலே உள் அறைக்குள் வீசி எறிந்தார்.

"உட்காருங்க மாப்பிள்ளை."

சற்று தயக்கத்தோடு அமர்ந்தான்.

"டேய் தூக்குச் சட்டியை எடுத்துட்டு வா. செல்லம்பிள்ளை கடையிலெ போய் டீ வாங்கிட்டு வா. சீனி உண்டனாப் போடச் சொல்லி ஒரு டீ. வாத்தியார் வீட்டுக்குனு சொல்லிக் கேளு."

"எதுக்கு? வேண்டாம்!"


"இருக்கட்டும். இருந்து இருந்து வந்திருக்கிங்க. இப்ப உங்க அக்கா வந்திடுவா..."

சக்திவேலுக்கு இதுபோன்ற தருணங்களில் என்ன பேசுவது என்று தெரியவில்லை. ஒருமுறை ராசு வாத்தியார் முகத்தைப் பார்ப்பதும், மறுமுறை சுவரைப் பார்ப்பதுமாய் இருந்தான்.

"வேறு ஒண்ணுமில்லை. மதுரை டி.வி.எஸ்.லெ ஆள் எடுக்கிறாங்களாம்."

"லேபரரா?"


"ஆமாம். லேபரரா போகணுமான்னு நினைக்க வேண்டாம். டி.வி.எஸ்லெ வேலைன்னா லேசுப்பட்டதில்லை. உங்களுக்குப் படிப்பு இருக்கு. கடகடன்னு உசந்திடலாம்."



"என்னது! ஐநூறு ரூபாய் நோட்டைச் சுருட்டி உன் தாத்தா காதில் சொருகி வச்சிருக்காரு?"

"விடு! பென்ஷன் தினத்தன்று இப்படி ஏதாவது பந்தா பண்றது அவர் வழக்கம் தான்..."

– உ. ராஜாஜி



இளவரசனுக்கும் ஒரு தடை!

படத்தில் சைக்கிள் ஓட்டிக் கொண்டிருப்பது இளவரசன் ஹாரி. சார்லஸ் – டயானாவின் இரண்டாவது மகன். கென்சிங்டன் தோட்டத்தில் ஆசை தீர சைக்கிள் ஓட்டி மகிழ்ந்தான் இவன். 'இனி வருங் காலத்தில் இப்பகுதியில் சைக்கிள் ஓட்ட முடியாது' என்பதும் ஒரு காரணம். ஏனென்றால் லண்டன் பூங்காவில் உள்ள இந்தப் பகுதியில் பனிரெண்டு மற்றும் அதற்குக் குறைந்த வயதுடையவர்களுக்கு மட்டும் தான் சைக்கிள் ஓட்ட அனுமதி.

— குல்லு

"............................."

"என்ன யோசிக்கிறீங்க..."

"சரி. சொல்லுங்க..."

"எங்க ஹெட்மாஸ்டர் தெரியுமா? சிவப்பா ஒல்லியா ஒரு ஐயர். குச்சனூர்லெ இருந்து வருவார். விந்தி விந்தி நடப்பார். தெரியுமா?"

"ம். தெரியும்."

"அவரோட மாமனார் டி.வி.எஸ்.லெ உசந்த வேலையிலே இருக்கார். அவர் வீட்டு அட்ரஸ் இருக்கு. வேணுமின்னா ஹெட்மாஸ்டர்கிட்ட ஒரு கடிதம் வாங்கிக்கிடலாம். எனக்கென்னவோ இது அமைஞ்சிடும்னுதான் படுது..."

"சரி."

அப்போது வாசலில் 'வரட்டுமாக்கா?' என்று வழியனுப்பும் ஒரு குரல். ராசு வாத்தியாரின் மனைவியின் குரல். அந்தக் குரல் ரேழி வரை இழுபட்டுக் கொண்டே வந்தது. சக்திவேலைப் பார்த்ததும் ஒரு இடறல். சற்று தயங்கி "வாங்க" என்று தலையை லேசாக உயர்த்திக் கேட்டாள். விடுவிடுவென்று கொல்லைப் பக்கம் போனாள். சற்று நேரத்தில் ஈரக் காலைத் தேய்த்துக் கொண்டே திரும்பி வந்தாள்.

"காப்பி, வாங்கிட்டு வரச் சொல்லட்டுமா?"

"போயிருக்கான். நம்ம வயுத்துப் பயலை அப்பவே அனுப்பிச்சேன். கழுதை எங்குனெ பராக்குப் பார்த்துக்கிட்டுத் திரியுதோ..."

"தம்பிக்கு ஒண்ணும் அமையலையா?" என்றாள்.

"அதேன் பேசிக்கிட்டு இருக்கோம்."


"............................."

"உங்க அப்பாவுக்கு எப்பவும் உங்க நினைப்புதேன். மனுஷனை சும்மா சொல்லப்படாது. சோறு இல்லாம, துணி இல்லாம, ஒரு நல்லது பொல்லாதது இல்லாம இருந்தார். இதுக்கெல்லாம் பிறந்தவன் நானில்லைன்னு இருந்தார். அவருக்கு எப்படியாவது உங்களை உசத்திப் போடணும்."

சக்திவேல் பார்வை இங்கும் அங்கும் அலைந்தது. என்ன செய்வது என்று புரியவில்லை. எது உத்தமம் என்று விளங்கவில்லை. ஆனால் வருத்தமாய் இருந்தது. லேபரராய்ப் போய்ச் சேரு என்கிறார்கள். ஆள் காட்டி விரல் உயர்கின்ற திசையில் ஓடுவதற்கும், ஒரு மேசையில் இருந்து இன்னொரு மேசைக்குக் காகிதங்களையோ, கச்சாப் பொருள்களையோ, மாற்றுவதற்கும் எம்.ஏ. பட்டம் தேவைதானா? ராசு வாத்தியார் இத்தனை நாளாய் இப்படி ஒரு திசையைக் காட்டவே இல்லை. படிப்புக்கும் தகுதிக்கும் தகுந்தாற்போல்தான் கைகாட்டிக் கொண்டிருந்தார். சட்டென்று ஏன் திசையை மாற்றி விட்டார். ஒருவேளை காலம் பழுத்து விட்டதோ? இல்லை என்வேர்கள் பழுத்து விட்டதோ? சக்திவேல் மண்டையைக் குடைந்தான். ஒருகணம்தான். சட்டென்று அவன் மூளையில் சில திசைகள் இடம் மாறின. ஒரு முடிவுக்கு வந்தான்.

(தொடரும்)

படம் : **யோகா**





1998 ஏப்ரல் 26
வெகுதான்ய சித்திரை 13
மலர் : 56
இதழ் : 39

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




குடியைக் கெடுக்கும் டீ.வி. விளம்பரங்கள்!

டீ.வி.யில் காட்டப்படும் மதுபான விளம்பரங்கள் குறித்து மிகுந்த கவலை வெளியிட்டிருக்கிறார் செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ். மது விளம்பரங்களை ஏற்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதற்காகத் தனியார் தொலைக்காட்சி நிறுவனப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசியிருக்கிறார்.

அமைச்சரின் கவலை மிகவும் நியாயமானது. பெரும்பாலும் விளையாட்டு நிகழ்ச்சிகள் அல்லது பந்தயங்களின் நேரடி ஒளிபரப்புகளுக்கிடையேதான் இவ்விளம்பரங்கள் இடம் பெறுகின்றன. அந் நிகழ்ச்சிகளை வழங்கும் விளம்பரதாரர்களாகவும் இந்த மதுபான கம்பெனிகள் இருப்பதுண்டு. ஒருசில மதுபான விளம்பரங்களில் விளையாட்டு வீரர்களே தோன்றி அந்தப் பானங்களைச் சிலாகித்துப் பேசி, பாடி, ஆடுகிறார்கள். இதனால் விளையாட்டுகளுக்கும் மதுபானத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது போன்ற ஒரு மனமாயை மிகச் சுலபத்தில் ஏற்பட்டுப் போகிறது.

குழந்தைகளையும் டீன் ஏஜ் பருவத்தினரையும் இந்த மனமாயை மிகத் தீவிரமாக பாதிக்கிறது. தங்கள் ஆதர்ச விளையாட்டு வீரர்கள் மது அருந்தி மகிழ்வதைக் காணும் இளம் உள்ளங்களுக்குக் குடிப் பழக்கமேகூட ஒரு கவர்ச்சிகரமான பொழுதுபோக்காகத்தான் தோன்றும். போதாக் குறைக்கு, கோக கோலா, பெப்ஸி போன்ற 'ஸாஃப்ட் டிரிங்க்ஸ்' விளம்பரங்களை அடுத்தே இந்த மதுபான விளம்பரங்கள் இடம்பெறுகின்றன. அவை போல் பீரும் ஒரு சாதாரண உற்சாக பானம்தான் என்ற கருத்துக் கூட இளைஞர் மனத்தில் ஆழப் பதிந்து போகும்.

இளைஞர்களை வலையில் போட்டுக் கொள்வதுதான் இந்த விளம்பரங்களை வெளியிடுவோரின் நோக்கம். ஆனால், இந்தக் கண்ணோட்டம் மிகத் தவறானது. சிகரெட் உற்பத்தி செய்



யும் ஒரு நிறுவனம், மும்பையில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலவசமாக சிகரெட் பாக்கெட் வழங்கி, அவர்களைப் புகைக்கும் பழக்கத்துக்கு அடிமைப்படுத்தியது! ஏராளமான கண்டனத்துக்கு உள்ளானது இந்த 'வியாபார யுக்தி'. டி.வி.யில் பெப்ஸி, கோக் பானங்களிடையே விஸ்கி, பீர் விளம்பரங்களை வெளியிடுவதும் இதே போன்ற மலினமான, கண்டனத்துக்குரிய 'வியாபார யுக்தி'தான்.


இதைக் கவனித்து நடவடிக்கை எடுக்க முயன்றிருக்கும் மத்திய அமைச்சர் பாராட்டுக்குரியவர். டி.வி.யில் மதுபான விளம்பரங்களை மட்டும் தடைசெய்வது ஜனநாயக சூழலில் சாத்தியமில்லை எனில், பின்னிரவு நேரங்களிலும் வயது வந்தோருக்கான பிரத்யேக நிகழ்ச்சிகளிலும் மட்டுமே இத்தகைய விளம்பரங்களுக்கு அனுமதி என்று வரையறுக்கலாம்.

கண்களையும் செவிகளையும் ஒருசேரத் தாக்கும் தொலைக்காட்சியின் சக்தி பிரும்மாண்டமானது. அதைச் சாதகமாக்கிக் கொள்ளும் வெறியில் சமுதாயத்தைச் சீர்குலைப்பது நமக்கு நாமே வெடிகுண்டு வைத்துக் கொள்வதாகத்தான் முடியும்!

முட்டுக்கட்டை போடும் வோட்டுகள்!

பள்ளி, கல்லூரி அட்மிஷனுக்கான கியூ வரிசைகள் நீளும் சீசன் இது. அந்த கியூ வரிசைகளைக் கனவில் கூட எட்டிப் பிடிக்க முடியாமல் வறுமையிலும் அறியாமையிலும் உழலும் ஏராளமான இந்தியர்கள் இன்னமும் இருக்கிறார்கள். இது நாம் அறியாத புதிய செய்தி அல்ல. ஆனால், இந்த நிலைமையை ஆராய்ந்து 'Learning and Freedom' என்ற நூலையே எழுதியிருக்கும் பிரிட்டிஷ் கல்வியாளர் ஜான் ராபர்ட் ஷோட்டன் தருகிற சில புள்ளி விவரங்கள் நம்மைத் தலைகுனியச் செய்கின்றன :

- முதல் வகுப்பில் சேரும் குழந்தைகளுள் ஐம்பது சதவிகிதத்தினர் மட்டுமே ஐந்து வருடங்களாவது பள்ளிப் படிப்பைத் தொடர்கிறார்கள்.
- படிக்காமல் வெளியேறும் குழந்தைகளுள் பெரும்பாலோர் ஷெட்யூல்ட் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்.



● எழுதப் படிக்கத் தெரிந்த பெண்கள் 39 சதவிகிதத்தினர்தான்! அதிலும் கிராமப்புறங்களில் ஆறிலிருந்து பதினான்கு வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுள் எழுபது சதவிகிதத்தினர் பள்ளிகளுக்கே போவதில்லை!

'அரசாங்கம், தனியார் கல்வி நிலையங்களை வளர அனுமதித்து உயர்வகுப்பினருக்கு அடிப்படைக் கல்வி கிடைக்க வழிசெய்து விட்டது. ஆனால், ஏழை எளிய மக்களுக்கு இன்னமும் அறியாமையிலிருந்து விடுதலை கிடைக்கவில்லை' என்கிறார் ஷோட்டன்.

'ஒவ்வொரு இந்தியனுக்கும் கல்வியை அடிப்படை உரிமையாக்கிய உயர்நீதி மன்றமே, பிற்பாடு கல்லூரிகளில் நிர்வாக கோட்டா அட்மிஷனுக்கு வழி செய்து, அதன் மூலம் ஏராளமான பணம் திரட்டப்பட வாய்ப்பு அளித்திருக்கிறது. ஏழைகளுக்கு, கல்வியென்பது இன்னமும் எட்டாக் கனிதான்' என்கிறார்.

'1951ஆம் ஆண்டில், கல்விக்கென அரசு ஒதுக்கிய திட்டத் தொகையில் 55.6 சதவிகிதம் ஆரம்பக் கல்விக்கென்று செலவாயிற்று. இத்தொகை விரைவிலேயே நாற்பது சதவிகிதத்துக்கும் கீழே குறைந்து போயிற்று' என்றும் கூறுகிறார்.

இவ்வளவு குறைகளையும் சுட்டிக் காட்டும் நூலாசிரியர் தீர்வையும் சொல்கிறார் :

பாதுகாப்புத் துறைக்கென தயங்காமல் செலவழிப்பது போல, கல்விக்கும் அரசாங்கம் யோசிக்காமல் செலவழிக்க வேண்டும்.

தற்போதைய கல்விமுறையைப் புரட்டிப் போட்டு ஆராய்ந்து, குறைகளைக் களைந்து, வாழ்க்கைக்கு உபயோகமான, தரமான கல்விமுறையை உருவாக்கிக் கடைப்பிடிக்க வேண்டும்.

– நமக்குத் தெரியாததைப் புதிதாகக் கூறவில்லை ஷோட்டன்.

கல்விச் சீர்திருத்தம் மட்டும் நிறைவேறாவிட்டால் வேறெந்தச் சீர்திருத்தத்தின் பயனையும் நாம் முழுவதுமாக நுகர முடியாது என்பதை மன்மோகன் சிங்கூட ஒப்புக் கொண்டிருக்கிறார்.

ஆனால், இதுவரை சுதந்தர இந்தியாவின் எந்த அரசுமே அறியாமையை விரட்டி கல்வியைப் பரவலாக்க தீவிரமாக முயற்சி மேற்கொள்ளவில்லை...

அறியாமை நீங்கப்பெற்ற மக்களை ஏமாற்றி வோட்டு பெற முடியாது என்ற பயம் எல்லாக் கட்சியினருக்கும் இருக்கிறதே!

தந்தை மகனுக்காற்றும் உதவி

கௌஹாத்
5.4.98

அன்புள்ள பெற்றோருக்கு,

உங்கள் மகனின் பணிவான வணக்கம். நலம் நலமறிய அவா. இங்கு குளிர்தான் அதிகம். அங்கே உங்கள் உடல் நலத்திற்கு அடிக்கடி கடிதம் எழுதவும். சென்னை மாநகரையும், நண்பர்களையும் விட்டுவிட்டு வந்ததில், பேச, படிக்க, பழக ஆள் துணை இல்லை என்ற வருத்தமும் இருந்தது. தமிழ்ப் பத்திரிகைகள் கிடைப்பதில்லை என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது, 'அமுதசுரபி' மாத இதழும், 'கல்கி' வார இதழும் தபாலில் வந்தன. திடீரென்று தபாலில் வந்த அதிசயம் எனக்கு! தங்கள் ஏற்பாடு என்பதை அறிந்து மிக மகிழ்ந்தேன். 'ஸ்ரீராம் டிரஸ்ட்' சந்தா முதலீட்டுத் திட்டத்தில் ஐந்து வருடங்களில் பணம் இருமடங்காகும் திட்டத்தில் சேர்ந்து, அதற்கு 'ஸ்ரீராம் டிரஸ்ட்' 5 ஆண்டுகளுக்கு 'அமுதசுரபி'யும், 'கல்கி'யும் அன்பளிப்பாகத் தருவதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்தேன். 5 ஆண்டுகளில் இரட்டிப்பாகி ரூபாய் 20 ஆயிரமாகக் கிடைக்கும். இங்கு மாதாமாதம் 'அமுதசுரபி'யும், வாராவாரம் 'கல்கி'யும் எனக்கு நன்றாக பொழுதுபோக உதவுகிறது. பொன்விழா கண்ட நல்ல பத்திரிக்கைகள் ஆயிற்றே! என்னை நன்றாக முதல் வகுப்பில் வருமாறு படிக்க வைத்தீர்கள். இப்போது எனக்குப் படிக்க நல்ல இரு பத்திரிகைகளையும் இலவசமாக 5 வருடங்களுக்குக் கிடைக்க வழி செய்து விட்டீர்கள். அமரர் கல்கியின் பொன்னியின் செல்வனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன் இப்போது தொடர்ந்து படிக்கக் 'கல்கி' கிடைக்கப்போகிறது என்பது மகிழ்ச்சியைத் தருகிறது. எப்படியும் எல்லைப்புறங்களில் நான் 5 வருடங்களுக்குப் பணியாற்றியே ஆக வேண்டும். உங்களுக்கு நன்றிக்கடனாக நான் செய்ய வேண்டிய திட்டத்தை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன். எல்லோர் உடல் நலத்துக்கும் அவ்வப்போது எழுதவும்.

பி.கு: ஸ்ரீராமின் சீட்டுநிதி விவரங்களை
தெரியப்படுத்துங்களேன்.

அன்பு மகன்
மனோகரன்

ரூ.10,000/- (ரூ.பத்தாயிரம்) ஸ்ரீராம் டிரஸ்ட் பெயருக்கு செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி :
ஸ்ரீராம் டிரஸ்ட், A-7, 2வது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600 102.
போன் : 6286869 / 6287879

- பெயர் : திரு / திருமதி / செல்வி : ....
  முகவரி : ....
  .... Pin ....
- கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர் : ....
- வாரிசுதாரர் (Nominee) : ....
- கல்கி மற்றும் அமுதசுரபி இதழ்கள் அனுப்ப வேண்டிய முகவரி : ....
  ....

இத்துடன் ரூ.10,000/- (பத்தாயிரம்) காசோலை / டிடி எண் : .... / தேதி : ....
வங்கியின் பெயர் .... இணைத்துள்ளேன். 5 ஆண்டுகளுக்குப் பிறகு **ரூ.20,000** (இருபதாயிரம்) ஆகத் திரும்ப பெற்றுக் கொள்ளச் சம்மதிக்கிறேன்.

இடம் தேதி முதலீட்டாளர் கையொப்பம்

என்னண்ணே!
நம்மைப் பார்க்க யாருமே
வரலை?






படங்கள்: யோகா

கல்கி விடுமுறை மலர்
வாங்கினாப் போதாதா... நம்மைப்
பத்தித் தெரிஞ்சுக்கறதோட இன்னும்
எத்தனையோ இடங்களைப் பத்தியும் நேர்ல
பார்க்கற மாதிரி தெரிஞ்சுக்கலாமே!
அதனாலதான்!

கடந்த 1991 வரை தனது உற்பத்தியை கோடிக்கணக்கில் லாபம் ஈட்டும் வகையில் நடத்தி வந்த உதகை HPF ஆலை தற்போது நலிந்த தொழிற்சாலை லிஸ்ட்டில் வந்துள்ளது. இந்த நலிவுக்கு என்ன காரணம் என்று நாம் ஆராய்ந்த போது அதிர்ந்து போனோம். அரசின் மெத்தனம், தொடர்ந்து ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவர்களின் உதாசீனப் போக்கு.. அரசியல்வாதிகளின் கபட நாடகம்... என பட்டியல் நீண்டது!




தாராளமயமாக்கலால் தவிக்கும் ஹிந்துஸ்தான் ஃபோட்டோ ஃபிலிம்ஸ்!

“1991ஆம் ஆண்டு சென்னையில் உலகத் திரைப்பட விழா நடந்தது. துவக்கி வைத்தவர் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ். அப்போது அவரை இந்தியாவின் முன்னணி படத் தயாரிப்பாளர்கள் உட்பட பல்வேறு முக்கியஸ்தர்களும் சந்தித்து என்ன கோரிக்கை வைத்தார்களோ தெரியாது. அப்போது இறக்குமதி செய்து, கன்வர்ஷனில் (ஃபிலிமை சிறுசிறு ரோல்களாக பேக்கிங் செய்வது) ஈடுபடுத்தப்பட்ட ஃபிலிம்களுக்கான 25% விலை உயர்வை உடனடியாக ரத்து செய்யச் சொல்லி அடுத்த நாள் காலையில் ஒரே ஒரு போன். “ஐயா 60 கோடி அதனால் நஷ்டமாகும்!” என்று அதிகாரிகள் பதறியபோது, தலைமையிடமிருந்து கிடைத்த ஒரே பதில் “நஷ்டமானா ஆகட்டும்...!”

இதுதான் இந்தக் கம்பெனிக்குக் கிடைத்த முதல் மரண அடி என்று திரும்பின பக்கமெல்லாம் யூனியன் தலைவர்கள், தொழிலாளர்கள், அதிகாரிகள் சொல்லுகிறார்கள்.

மிகவும் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்பட்டது நீலகிரி மாவட்டம். குறிப்பாக மலைவாழ் மக்கள் அதிகம் வசிக்கும் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கூடலூர் வாசிகளுக்குக் கடந்த 30 வருட காலமாய் உயிர்ப் பிச்சை அளித்து வந்த இந்த ஊட்டி ‘இந்துஸ்தான் ஃபோட்டோ பிலிம் தொழிற்சாலை’ (HPF) இப்போது குற்றுயிராய்க் கிடக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று கேட்டால், ‘வேறென்ன... எல்லா பொதுத் துறை நிறுவனங்களிலும் நிலவும் அசிரத்தைதான்...’ (தொழிலாளர்கள்) என்று வெளியாட்கள் சொல்லி விடுவர். நாமும் முதலில் அப்படித்தான் நினைத்தோம்.

ஆனால் நாம் உள்ளே நுழைந்து HPF-ன் ஒவ்வொரு ‘யூனிட்’டிலும் புகுந்து வெளியே



வந்தபோது நம் கருத்தை அழுத்தந்திருத்தமாகத் துடைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

அப்படியொரு ஒழுங்குமுறை. கண்டிப்பான வழி நடத்துதல்...

"இங்கே லிப்ட் இருக்கிறது சார்... ஆனா அதை நாங்க யாரும் யூஸ் பண்றதில்லைன்னு எங்களுக்கு நாங்களே ஸ்டிரிக்ட் ஆர்டர் போட்டுக்கிட்டோம். அது புரொடக்ஷன் மெட்டீரியல் கொண்டு வருவதற்கு மட்டும் தான். மற்றபடி படிக்கட்டுகள்தான். மின்சாரச் சிக்கனம்; படியில் ஏறியிறங்கினா தொப்பை விழாது; எக்ஸர்சைஸ் ஆன மாதிரியும் இருக்கும்...!"

– நம்மை நான்கு மாடியையும் நடக்க வைத்தே சுற்றிக் காண்பித்த 'இன்ஸ்ட்ருமெண்டேஷன்' மானேஜர் பி. பாலசுப்பிரமணியம் மொட்டை மாடியில் மூச்சிரைக்கக் கூறிய வாசகம் இது.

இந்தத் தொழிற்சாலையை ஜவாஹர்லால் நேரு உருவாக்கியதன் நோக்கமே நம்நாடு மருத்துவத் துறையிலும் சரி, இதர துறைகளிலும் சரி ஃபிலிம்களுக்கு எந்த ஒரு வெளிநாட்டுக் கம்பெனியையும் நம்பியிருத்தலாகாது. திடீரென்று வெளிநாட்டுக் கம்பெனிகள் தங்கள் வியாபாரத்தை நிறுத்தி விட்டால் மருத்துவத்திற்கு (எக்ஸ்-ரே ஃபிலிம்கள்) நாம் என்ன செய்ய முடியும்? என்பதுதானாம்.

1965-ல் துவங்கி கடந்த 1990 வரை இந்நிறுவனம் வருடம் ஒன்றுக்கு அரசுக்கு நூறு கோடி ரூபாய் வருமானம் ஈட்டித் தந்ததோடு, தன்னளவிலும் கோடிக்கணக்கில் லாபம் ஈட்டியே வந்திருக்கிறது.

இதன் வளர்ச்சி கருதியும், வெளிநாட்டுக் கம்பெனிகளோடு கலர் ஃபிலிம் உற்பத்தியில் இறங்கவும் இத் தொழிற்சாலை முடிவு செய்து, கடந்த 1986ல் அமெரிக்க கம்பெனியுடன் சேர்ந்து புதுதிட்டம் ஒன்றுக்கு அடிக்



"அந்த ஆன்மீகப் பத்திரிகையில் வேலைக்குச் சேர்ந்தது தப்பாப் போச்சு!"
"ஏம்ப்பா?"
"கடவுளை பேட்டி எடுத்துக்கிட்டு வரச் சொல்லி ஒரு வாரமா எடிட்டர் நச்சரிக்கிறார்!"
— உ. ராஜாஜி

கல் நாட்டியது. இதில் மருத்துவத்திற்குப் பயன்படும் எக்ஸ்-ரே ஃபிலிம் தயாரிப்புகள், தொழிற்சாலை மெஷின்களில் உள்ள கோளாறுகளைக் கண்டுபிடிக்கும் எக்ஸ்-ரே ஃபிலிம், சினிமா, மற்றும் கலைத்துறை ஒலி, ஒளி நாடாக்கள் ஆகியவற்றைத் தயாரிக்க முடிவு செய்து, மத்திய அரசிடம் 40 கோடி ரூபாய் உதவி நாடியது. அதை அப்போதைய நீலகிரி எம்.பியும் மந்திரியுமான ஆர். பிரபு பெற்றுத் தந்திருக்கிறார். ஆட்சிகள் மாற அதை அரசு கொடுப்பதில் காட்டிய தாமதமே இந்த ஆலை நலிவிற்கு முதல் காரணம் என்கின்றனர். போதாக்குறைக்கு 1991-ல் கொண்டு வரப்பட்ட 'திறந்தவெளி பொருளாதாரக் கொள்கை' இதனைப் படுகுழிக்கே கொண்டு போய் விட்டது.

இது பற்றி அலுவலர்கள் யூனியனின் பொதுச் செயலாளர் எஸ்.எஸ். தர்மராஜன் கூறும் போது, "கொடாக், கோனிகா போன்ற கம்பெனிக்காரர்களெல்லாம் இங்கே வந்து கடை விரித்து விட்டார்கள். அவர்கள் 100 வருஷத்திற்கு முன்னால் உள்ள கம்பெனிக்காரர்கள். அவர்களுக்கு முதல் அஞ்சு வருஷத்துக்கு இந்த அரசாங்கம் வரி விலக்குக் கொடுத்துள்ளது. அவர்கள் வந்து இங்கே வியாபாரம் பண்ணட்டும். நாங்க யாரும் அதை எதிர்க்கலை. ஆனா அவங்களை இங்கே தொழிற்சாலை அமைத்துத் தொழில் பண்ணச் சொல்லட்டும். இலட்சக்கணக்கான இந்தியர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும். இந்தியாவிற்கு கோடிக் கணக்கில் எக்சைஸ் டூட்டி கிடைக்கும்.

"இப்ப அவர்கள் உற்பத்திங்கிற பேரால வெறும் conversion வேலையை மட்டும் அதுவும் நேபாளத்தில் செய்து இந்தியாவிற்குள் நுழைகிறார்கள்; அவர்கள் நாட்டில் தயாரித்து நேபாளத்தில் கொண்டு வந்து பேக் செய்து நம் நாட்டில் வரிவிலக்குப் பெற்று விற்கிறார்கள். அதற்கு அன்றைய ஆட்சியாளர்களும் உடந்தையாயிருந்திருக்கிறார்கள்! இதனால் மட்டும் அரசுக்குக் கடந்த ஆண்டுகளில் சுமார் 500 கோடி ரூபாய் நஷ்டமாகியுள்ளதாகப் புள்ளி விவரங்கள் சொல்லுகின்றன!" என்றார்.

ஒரு jumbo என்பது 600 மீட்டர் நீளமுள்ள பிலிம் ரோல்கள் அடங்கியது. அதை பேக் செய்யும் போது ஒன்றுக்கு இரண்டாக 1200 மீட்டர் பேக் செய்து 600 மீட்டர் வெயிட்டை மட்டும் காட்டி மீதியை பேக்கேஜ் வெயிட்டாகக் காட்டி விடுகின்றனர். 600 மீட்டருக்கான எக்ஸைசஸ் டூட்டியை மட்டும் கட்டி விட்டு, மீதியை சட்டவிரோதமாக இந்திய மார்க்கெட்டில் தள்ளி விடுகின்றனர். இதனால் HPF ஒரு சதுர மீட்டர் பிலிமுக்கு 194.00 ரூபாய் விலை வைத்தால் அவர்களால் 192க்கு விற்க முடிகிறது. அதோடு பெரிய டீலர்களுக்குக் கண்கவரும் கிஃப்ட்டுகளும் விற்பனை முகவர்களுக்குக் கூடுதல் கமிஷனும் கொடுக்க முடிகிறது. அப்புறம் எப்படி நமது ஃபிலிம் விற்கும்?

"சீனாவிலும் இதே தாராளமயமாக்கல் வந்தது. ஆனால் அங்கு இப்படியில்லை. வெறும் conversion plant மட்டும் ஏற்படுத்திக் கொண்டு அங்கே காலத்தை ஓட்டி விட முடியாது. தொழிற்சாலையை நிறுவினால்தான் அந்நாட்டில் சந்தைப் பொருளாதாரம் எடுபடுகிறது. ஆனால் இங்கு புறக்கடை வழியாக எல்லா விஷயங்களும் நடந்து முடிகிறது!" என்கின்றனர் இங்குள்ள பல்வேறு தரப்பு ஊழியர்களும் அலுவலர்களும்.

"கடந்த வருடம் (1997 டிசம்பரில்) இந்த ஆலையை மூடுவதைத் தவிர வேறு வழியில்லை... என்கிற முடிவிற்கு நிர்வாகம் வந்த போது இங்கே 'கேட்'டில் பெரிய தர்ணா. இதை மூடினால் இதை நம்பியிருக்கிற 3000 குடும்பங்களின் (இது தவிர இதைச் சார்ந்திருக்கிற பல்வேறு சிறு தொழிற்சாலைகள்) நிலை என்ன என உத்தேசித்து, அனைவரும் ஒன்று கூடி ஒரு முடிவெடுத்தோம். அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஒரு வருட சம்பளத் தொகையை (சுமார் 30 கோடி ரூபாய்) முன்பணமாக அரசிடம் கேட்டோம். அதை வைத்து நிறுவனத்தை இயக்கிக் காட்ட வேண்டும் என நாங்கள் ஒன்று பட்டு, அப்போதைய தொழில் அமைச்சர் முரசொலி மாறனிடம் பேசி (அப்போதைய

தொகுதி எம்.பி., எஸ்.ஆர்.பி. ஒன்றுமே செய்யவில்லையாம்). அதைப் பெற்று வந்தோம். அதில் 20 கோடி ரூபாயை மின் கட்டணம், விற்பனை வரி, சம்பளம், தொழிலுக்கு முதலீடு என சரி செய்துள்ளோம். இது இன்னும் ஓரிரு மாதங்களுக்குத் தாங்கலாம். பிறகு... அரசை நாடித்தான் ஆக வேண்டும்...!" என்று — HPF ன் மக்கள் தொடர்பு அதிகாரி பி.என். ரமேஷ் நம்மிடம் பேசும் போது நமக்கு மனசு தைத்தது.

இது மட்டுமல்ல, HPF ன் அதிகாரிகள், விஞ்ஞானிகள், அலுவலர்கள் யாருக்கும் 1987க்குப் பிறகு இன்னும் சம்பளமே உயர்த்தப்படவில்லையாம். உண்மையைச் சொன்னால் அப்போதைக்கும் இப்போதைக்கும் (11 வருடங்களில்) வெளியில் சாதாரண கடைநிலை ஊழியம் செய்பவருக்குக் கூட இப்போது இவர்களை விட சம்பளம் கூடுதல் என்கின்றனர் பலரும்.

"சம்பளமில்லாவிட்டாலும் பரவாயில்லை சார்... எங்க சமூகத்துல கோயில், கடவுள் எதுவுமேயில்லை சார்... எங்களுக்கு உள்ள ஒரே கோயில், ஒரே தெய்வம்... எங்கள் குல தெய்வமே இந்தத் தொழிற்சாலைதான். இது போனா எங்களின் இரண்டு கண்களும் போனது மாதிரி!" என்று கண்ணில் நீர் உகுக்காத குறையாய்ப் பேசினார் திருமதி வாசமல்லி. இதன் நிர்வாக உதவியாளர். தோடர் சமூகத்தைச் சார்ந்தவர்.

இங்கு இவரைப் போலவே தாழ்த்தப்பட்ட சமூகம் சார்ந்த தோடர், இருளர், பனியாஸ் என பல்வேறு மலைவாழ் இன மக்களும் பணிபுரிகின்றனர்.

இதன் உலகத் தரமான பிலிம்களைக் கூட சமீப காலங்களில் அரசு ஆஸ்பத்திரிகளும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் மருத்துவமனைகளும் வாங்குவதில் தயக்கம் காட்டுகின்றன. "அரசு மருத்துவமனைகள் HPF -ல்தான் ஃபிலிம் வாங்க வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இருக்கிற போதிலும் அவை இதை உதாசீனப்படுத்தியே வருகின்றன. இதற்குக் காரணம், மருத்துவ அதிகாரிகள் உட்பட அனைவருக்கும், வெளிநாட்டுக் கம்பெனிகள் கொடுக்கும் அன்பளிப்புதான்!" என்கின்றனர்.

ஆக, HPF தொழிற்சாலையைப் பொறுத்து வரை ஒரு தாய் தன் சொந்தக் குழந்தையின் கழுத்தை நெறிக்கிற நிலையில்தான் அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது!

— கா.சு. வேலாயுதன்

இது அட்மிஷன் சீ(ஷீ)சன்!


— ஜியா —



''இந்த ஸ்கூல் கரஸ் பாண்டெண்ட் பெரிய தமிழ் அறிஞராம்., டொனேஷனே வேண்டாம்னுட்டார்.''

''அட, பரவாயில்லையே.''

''ஆனா 'உவந்தளிப்பா' பத்தாயிரம் ரூபாய் வழங்கணுமாம்.''




''உன்னையும் உன் குழந்தையையும் இண்டர்வியூ பண்ணிட்டு பிரின்ஸ்பால் என்ன சொன்னாங்க?''

''என்னை வேணா சேத்துக்கறேன்னு யூ.கே.ஜி.ல சொல்லிட்டாங்க.''

''எங்க வீட்டுக்காரர் இத்தனை அசடா இருப்பார்னு நினைக்கவே இல்லை!''

''என்ன செய்தார்?''

''பிரின்சிபால் ரூம் கதவுல 'நோ அட்மிஷன்'னு எழுதியிருக்கறதப் பார்த்துட்டு அட்மிஷனெல்லாம் முடிஞ்சுடுத்துன்னு நெனச்சுத் திரும்பி வந்துட்டார்!''





"ஸ்கூல் பிரின்ஸ்பால் பக்கத்துல ஒரு மந்திரவாதியும் இருக்காரே, ஏன்?"

"அட்மிஷனுக்கு வர்ற குழந்தையோட முன்னோர்கள் ஆவியையெல்லாம் வர வழைச்சு அவர் இண்டர்வியூ பண்ணு வாராம்."



"எல்.கே.ஜி.ல இடம் இல்லேன்னதும் பிரின்ஸ் பால் விழுந்து விழுந்து சிரிக்கற அளவுக்கு நீ என்ன சொன்னே?"

"'என் சொலவிலே ஒரு சொந்தச் பெஞ்ச் போட்டுக்கலாமா'ன்னு கேட் டேன்."



"தி. நகர்ல ஒரு இடம் வாங்கிட்டேன். பெசன்ட் நகர்ல இடம் வாங்கிட் டேன்... போரூர்ல இடம் வாங்கிட்டேன்... ஹூம்..."

"அப்புறம் என் அலுத்துக்கறீங்க?"

"என் பைய னுக்குக் கான்வெண்ட்ல ஒரு இடம் வாங்க முடிய லையே!"



'ஸாரி. நீங்க பெரிய அரசியல்வாதியா இருக்க லாம். ஆனா உங்க பைய னுக்கு அட்மிஷன் தர முடி யாது?"

"ஏன்?"

"ஏ ஃபார் ஆர்க், பி ஃபார் பந்த், சி ஃபார் கரப்ஷன்'னு சொல்றானே!"

இந்த வார இளைஞர்!

புதிய சென்னைக்குப் பூபாளம்!



ரஷ்யாவில் ஏழு வருடங்கள் கட்டடக் கலை பற்றிய படிப்புப் படித்துவிட்டுச் சென்னை திரும்பியவர் இளைஞர் பூபாலன்.

அங்கே படிப்பு முடிந்து, உலக மதங்கள் ஒரே பாதையைத்தான் காட்டுகின்றன என்று உணர வைக்கும் சர்ச்சும், மசூதியும், கோயிலும் ஒரு சேர அமைந்த இவரது கட்டட வடிவைப் பாராட்டியவர்கள் அநேகர். (அந்தக் கட்டட வடிவமைப்பு, இப்போது ஆஸ்திரேலியாவில் உருவாக்கப்பட இருக்கிறதாம்.)

பூபாலனின் திட்டங்கள் எல்லாமே பிரம்மாண்டமானவை. ஜனத் தொகை பெருகி வரும் சென்னையில் நெரிசலைச் சமாளிக்க, இவர் தயாரித்திருக்கும் 'புதிய சென்னைத் திட்டம்' அடுத்த நூற்றாண்டுத் திட்டம்!

"இப்போதே ஆரம்பித்தால் 25 - 30 வருடங்களில் முழுதுமாக நகரை நிர்மாணித்து விடலாம். முதல் ஐந்து வருடங்களிலேயே புதிய நகரின் உருவம் தெரியத் தொடங்கி விடும்!" என்கிறார் பூபாலன்.

"இது சாத்தியமா என்று உங்களை நீங்களே கேட்டுக் கொண்டது உண்டா?"

"ஏன் சாத்தியமில்லை? 1879ல் சூயஸ் கால்வாயைக் கட்டிய இஞ்சினீயர் பெர்டினான்ட் டி லெஸப்ஸ் 26 வயது இளைஞர். இந்தியாவிலேயே, பெரியாறு அணை கட்டிய பென்னி குயிக், எத்தனை சோதனைகளும், இடர்ப்பாடுகளும் வந்த போதும் மனம் தளராமல், சொந்த உடைமைகளையும் விற்று இதற்காகச் செலவழித்து, இரவும் பகலுமாக உழைத்து உருவாக்கவில்லையா? 'குறிக்கோளை நிச்சயித்து, அதில் உறுதியாக இருந்தால், அதை அடையும் மார்க்கம் நிச்சயமாக உருவாகும்' என்பார் தொழிலதிபர் டாடா.

"தற்போதைய சென்னை நகரம், திட்டமிட்டு உருவான நகரமல்ல. ஆங்கிலேயர்கள் சென்னைத் துறைமுகத்தின் பயனுக்காகக் குடியிருப்புகளையும், நிர்வாக நிலையங்களையும் உருவாக்கினார்கள். பிறகு வரிசையாக, சிந்தாதரிப்பேட்டை, மயிலாப்பூர் என்று கிராமமாக இருந்த பகுதிகளை நகர வட்டத்துக்குள் கொண்டு வந்து, அவ்வப்போது ஏற்பட்ட மக்கள் தொகை நெருக்கடியைச் சமாளித்தார்கள்"

ரஷ்யாவில் ஏழு வருடங்கள் ஆர்க்கிடெக்சர் படித்தபோது, ஐரோப்பிய நகரமைப்பைக் கவனமாக மனத்தில் இருத்திக் கொண்டிருக்கிற பூபாலன், "ஒரு நகரம் ஆரோக்கியமாக இருந்தால்தான், அதில் வாழும் மக்களும் சுறுசுறுப்பாக இருக்க முடியும்" என்கிறார்.

புதிய சென்னைக்குத் தேவையான நிலத்தை அரசு நினைத்தால் கையகப்படுத்திவிடலாம். தற்போதிருக்கிற சென்னையை விட்டு அதிக தொலைவில் சென்று விடாமல் அருகேயே நிர்மாணிக்கலாம். புதிய, அகலமான பாதைகள், நீருற்றுக்கள், செயற்கை ஏரிகள், ஒரே மாதிரியான உயரங்களில் கட்டடங்கள், பூமிக்கடியில் ரயில் பாதை, கிழக்கிலிருந்து மேற்கேயும், தெற்கேயிருந்து வடக்கேயும் எந்தவித சிக்னல் தடையும் இல்லாமல் சீராக வாகனங்கள் போய்வர பாதைகள் என்று வியப்பூட்டும் ஐடியாக்கள் தருகிறார் பூபாலன்.

"கிட்டத்தட்ட 2,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு இருக்கும். விளை நிலங்கள் ஓரளவு பாதிக்கப்படலாம்!" என்கிறார்.

"அப்படியானால் இடையே வருகிற கிராமங்களை என்ன செய்வது? நவீன நகரமைப்பில் அந்தக் கிராமங்கள் எப்படி ஒட்டும் அல்லது சேரும்?"

கிராமங்கள் உள்ளே வரும்போது, அந்தக் கிராமத்தின் ஆன்மாவைச் சிதைக்காமல் உள்ளடக்கி, நகரின் வடிவமைப்போடு பொருத்தி விடலாம். கிராமத்துக்கு நகரின் சகல வசதிகளும் கிடைக்கவும் செய்யும்!"

மின்சார பஸ்கள் உண்டு. எனவே சுற்றுச் சூழல் பாதிப்பு கிடையாது!

இப்போதே ஆரம்பித்தால்தான் 2025ல் புதிய நகரைக் காண முடியும் என்கிறார் பூபாலன்.

இதற்கான செலவு பற்றியோ, முழுமையான திட்டங்கள் பற்றியோ இப்போதே வெளியிடுவது தொழில் முறை ரகசியத்தைப் பாதிக்கக் கூடியது என்பதால், அவை பற்றி பூபாலன் எதுவும் தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால் நகரின் முழுத் திட்டமும் வரைபடங்களோடு ரெடி!

எதிர்க்கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்ணனிடம் இரண்டு முறை இது பற்றிப் பேசியிருக்கிறாராம்.

முதல்வரைச் சந்திக்க நேரம் கேட்டு எழுதிய கடிதத்துக்கு இதுவரை எந்தப் பதிலும் இல்லையாம்.

"ஆனாலும் நான் நம்பிக்கையை இழக்கவில்லை!" என்கிறார் பூபாலன்.

— சித்தார்த்

கல்கி—
B. M. SILK SAREES
இணைந்து வழங்கும்
பட்டுப் புடவை பரிசுப் போட்டி - 3

ம.தி.மு.கவிலுள்ள ஒரு பிரிவினர் தங்கள் எம்பியொருவரை மத்திய அமைச்சராக்க வேண்டுமென்று வைகோவிடம் சொல்லி வருகிறார்கள்.

அந்த எம்.பியின் பெயர் என்ன?

இந்த இதழைப் படித்துக் கண்டு பிடித்துக் கீழுள்ள ஒரு பாதிக் கூப்பனில் எழுதியனுப்புங்கள். பலர் சரியான விடையெழுதினால் குலுக்கல் முறையில் ஒருவருக்கே பட்டுப் புடவை பரிசு!

மீதிப் பேருக்கு ஏமாற்றம்தானா? இல்லை. கூப்பனிலுள்ள மறுபாதியிலும் இதே விடையை எழுதிப் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள். பன்னிரண்டு வாரம் தொடரப் போகும் இப் போட்டியின் முடிவில் பம்பர் பரிசு ஒன்றும் காத்திருக்கிறது! விவரங்கள் விரைவில்.

- விடைகளைக் கூப்பனில் மட்டுமே எழுதியனுப்ப வேண்டும். ஒரிஜினல் கூப்பன்தான்; ஜெராக்ஸ் பிரதிகள் செல்லாது.
- ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முடிவு தேதி: 4.5.98

பட்டுப் புடவை பரிசுப் போட்டி – 3
(நீங்கள் பத்திரப்படுத்த வேண்டிய கூப்பன்)

அந்த எம்.பி.யின் பெயர் :

....

என் பெயர் : ....

முகவரி : ....

....

பட்டுப் புடவை பரிசுப் போட்டி – 3
(எங்களுக்கு அனுப்ப வேண்டிய கூப்பன்)

அந்த எம்.பி.யின் பெயர் :

....

என் பெயர்: ....

முகவரி: ....

....

KALKI SHOPPING PAGE

இலக்கியக் கூட்டமும் இந்தியப் பொருளாதாரமும்!

சுமி சூப்பர் மார்க்கெட் :

தமிழ்நாட்டுல, தீவிர இலக்கிய ரசிகர்கள்னு ஒரு ஐந்நூறு பேரைப் பொறுக்கி எடுக்கலாம்; இவங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரு இடத்துல சேர்த்து வெக்கறது ரொம்பக் கஷ்டம்; அந்தக் கஷ்டமான காரியத்தைச் செஞ்சிட்டு வர்ற (வருஷம் ஒருதரம்) அமைப்பு 'இலக்கியச் சிந்தனை' அப்படீன்னு இலக்கியமும் தெரிஞ்ச எங்க ப்ரொபசர் ஒருத்தர் அடிக்கடி சொல்லுவார்.

தமிழ் நியூ இயர் சமயம் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்துல நடந்த இலக்கியச் சிந்தனை ஆண்டு விழாவுக்கு ப்ரொபசரோட போயிருந்தேன். உள்ள நுழைஞ்சதுதான் லேட். ப்ரொபசர் கூட்ஸ் வண்டி மாதிரி ஒரு பெருமூச்சு விட்டு, "ஹூம்! இந்தியப் பொருளாதாரம் மாதிரி இலக்கிய ஆர்வலர்கள் எண்ணிக்கையும் கீழ கீழ விழுந்துட்டிருக்குதே"ன்னு ஒரு பாட்டம் புலம்பித் தீர்த்துட்டார்.

ஏன் இப்படிக் கூட்டம் குறையுதுன்னு கொஞ்சம் யோசிச்சேன். அன்னிக்கு ஃபங்ஷன்லேயே காரணம் கிடைச்சுது. சிறந்த நூல் விருது (சுதந்தரதாகம் – நாவல்) குடுக்க இவங்க தேர்ந்தெடுத்த சி.சு. செல்லப்பா,



'எனக்குப் பரிசு வேணாம் போ'ன்னு சொல்லிட்டு, வராம இருந்துட்டார். சிறந்த சிறுகதைப் பரிசு வாங்க வேண்டிய அ. முத்துலிங்கம் நாட்டுலயே இல்லை. இது இப்படி இருக்க, நல்ல தமிழறிஞர்களையாவது நிறைய பேச விட்டிருக்கலாம். அஸ்லாமி ரைட்டர் தத்தா பருவாவைப் பேசக் கூப்பிட்டு, அவர் இங்கிலீஷ்ல பேச – பேசாம அவர் அஸ்ஸாமில பேசியிருந்தாலே கொஞ்சம் புரிஞ்சிருக்குமோன்னு தோணிச்சி! இட்டம் சூப்பரா இருந்தா கூட்டம் ஏன் குறையப் போகுது?

கூட்டம் முடிச்சிட்டு நைட் ஷோ காதலா காதலா போனேன். தமாஷ் படம்னு எல்லாரும் சொன்னாங்க. என் கண்ணுக்குப் பட்ட ஒரே தமாஷ் – கமலஹாசன் திராவிடர் கழகத்துல சேர்ந்துட்டதை இந்தப் படத்துல பகிரங்கப்படுத்தியிருக்கறதுதான். நிறைய வாட்டி கறுப்பு ஷர்ட் போட்டுட்டு வர்றார்; கடவுள்களைக் கிண்டலடிக்கறாருங்கறது மட்டுமில்லை. படத்துல வர்ற ஒரு கார்ல 'ஐயா துணை'ன்னு எழுதி, க்ளோஸப்ல காட்றாங்க! முருகன் துணைன்னு எழுதினா

"என்னது... அந்த இன்ஸ்பெக்டர், 'மாமூல் அரியர்ஸ்' கேக்கறாரா! என்னப்பா சொல்றே?"

"அவர் சஸ்பென்ஷன்ல இருந்தப்ப நாம மாமூல் தரலையாம்; இப்ப மறுபடியும் வேலைக்குச் சேர்ந்து சம்பள 'அரியர்' வாங்கற மாதிரி மாமூல் 'அரியர்' வேணுமாம்!"

– சீர்காழி வி.ரேவதி



மூடநம்பிக்கை; ஐயா துணைன்னா அது பகுத்தறிவா? ரசிச்சி சிரிச்சுட்டு வந்தேன்.

கவிஞர் முத்துலிங்கம் எனக்குத் தெரிஞ்சவர். கிராமத்துலேர்ந்து மெட்றாஸுக்கு எப்படி ஒரிஜினல் கிராமிய மணத்தோட வந்தாரோ அதே கிராமிய மணத்தோட – பந்தாவே இல்லாம, ஒரு வழிப்போக்கன் மாதிரி ஒருநாள் என்னைப் பார்க்க வந்திருந்தார்.

தம்மோட சினிமா பாடல்களின் முதல் தொகுதியைக் குடுத்து விமர்சனம் பண்ண முடியுமான்னு கேட்டார். இன்னைய சினிமா பாடல்கள் விமர்சனம் பண்ணக்கூடிய நிலையிலா இருக்கு? அதையும் தாண்டி அப்பாற்பட்டதாச்சே! இருந்தாலும் ஒண்ணு சொல்லணும், முத்துலிங்கத்தோட பாடல் தொகுதி புத்தகத்துல எழுத்துப் பிழைகளே இல்லை. ஒரு தமிழ்ப் புத்தகம் எழுத்துப் பிழையில்லாம வர்றது அபூர்வம் தெரியுமோ!

சுப்ரமணியன்னு நாப்பது வயசுல எனக்கொரு பாய் ஃப்ரெண்ட் இருக்கார். (மேன் ஃப்ரெண்டுன்னு சொல்லணுமா?) பேங்க் எம்ப்ளாயி. போன சாட்டர்டே காலைல என் வீட்டுக்கு போன் பண்ணி, 'சுமி ஒரு ஜோக் சொல்றேன் கேளு'ன்னார்.

சனிப்பெயர்ச்சி பலன் படிச்சி கடுப்பாயிருந்தவளுக்கு ஒரு சின்ன சேஞ்ச்!

ஒருத்தன் ஈஎன்டி ஸ்பெஷலிஸ்ட்கிட்ட போயி, "டாக்டர், என் பெண்டாட்டிக்குக் காதே கேக்க மாட்டேங்குது. ஆஸ்பிடல் போலாம்னா வர மாட்டேங்கறா. அவ வராமலே நீங்கதான் ட்ரீட்மென்ட் தரணும்"னான்.


டாக்டர், "நோ பிராப்ளம். ஆனா, எவ்ளோ தூரத்துலேருந்து பேசினா காது கேக்கலைன்னு தெரியணும். அதை மட்டும் செக் பண்ணிட்டு வாங்க"ன்னாரு.

இவன் வீட்டுக்குப் போயி, வாசல்லயே நின்னுட்டு, "அடியே மீனாட்சி, இன்னிக்கு என்ன டிபன்?"னு கத்தினான்; பதில் இல்லை. சரின்னு, ஹால்ல போய் நின்னுட்டு, "உன்னைத்தான் கேக்கறேன். இன்னிக்கு என்ன டிபன்?" அப்பவுன்னு மோனிகா செலஸ் டெஸிபல்ல கேட்டான். நோ ஆன்ஸர்!

சமயலறைக்கே போயி, அவ காதுகிட்ட வாயை வெச்சி, "இப்பவாச்சும் பதில் சொல்லு. இன்னிக்கு என்ன டிபன்?"

"மூணாவது முறையா சொல்றேன், தோசை!"ன்னாளாம் அவள்! ●

— சுமி



"ஒரே கல்லுல ரெண்டு மாங்கா அடிக்கணும்னு நினைச்சது முடியாம போச்சு..."

"என்னாச்சு...?"

"முதல் மாங்காவை அடிச்ச கல்லு எவ்வளவு தேடியும் கிடைக்கல...!"

– செங்குன்றம் ரமேஷ் ராமன்

அமரர் கல்கி நூற்றாண்டு விழா சிறப்புச் சிறுகதைப் போட்டி – 1998

இனிய வாசக எழுத்தாளர்களே, கல்கி நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின் இரண்டாவது அறிவிப்பு இது. (முதல் – பொன்னியின் செல்வன்!) பிரமாதமான சிறுகதைகள் மூலம் அசத்த அழைக்கிறோம். இவ்வாண்டு, ஸ்பெஷல் அல்லவா? பரிசுத் தொகை கூடியிருக்கிறது.



முதல் பரிசு – ரூ. 10,000

இரண்டாம் பரிசு – ரூ. 7,500

மூன்றாம் பரிசு – ரூ. 5,000

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 1000 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர் எனில், வழக்கம் போல் போனஸ் உண்டு!

விதிமுறைகள் :

- சரித்திரம், சமூகம், மர்மம், நகைச்சுவை என எப்படிப்பட்ட கதையாகவும் இருக்கலாம். தழுவல், உருவல் கூடாது; அவ்வளவு தான்!
- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும் போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதி மொழி தர வேண்டும்.
- முழு வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால்தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர்குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும் வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- **'அமரர் கல்கி நூற்றாண்டு விழா சிறப்புச் சிறுகதைப் போட்டி'** என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி: ஜூன் 15.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 2 ஆண்டு மலரில் வெளியாகும்.


எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்!

— ஆசிரியர்

நடக்குமென்பார்,

ஏப்ரல் 22 முதல் 28 வரை

அக்னி சர்மா பக்கம்



மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

தீவிரமா எதைப்பத்தியோ யோசிச் சிக்கிட்டிருக்கீங்க. இல்லையா? உங்க வாழ்க்கைல முக்கியமான காலகட்டங்கள்ல இதுவும் ஒண்ணு. நீங்க செய்ய வேண்டியதெல்லாம் எப்பவும் எதுக்கும் அவசரப்படாம இருக்கறது தான்! உரிமைக்குக் குரல் கொடுக்கற உங்களுக்கு மன உளைச்சல் இருந்துட்டேதான் இருக்கும். எதையும் பொருட்படுத்தாதீங்க. உங்க முயற்சி களில் இறுதி வெற்றி உங்களுக்குத்தான். இந்த வாரம் வீட்டுல சில முக்கிய முடிவுகள் எடுக்கப் பட நீங்க காரணமா இருப்பீங்க. உடல் நலத்தைப் பார்த்துக்கங்க. வெளியில அதிகமா சுத்த வேணாம்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

பதறாத காரியம் சிதறாதுன்னுவாங்க. எத்தனை சங்கடம் வந்தாலும் இருக்க வேண்டிய நேரம் இது. உழைப்பு அதிகமா இருக்கும். தூக்கம் போறாது. தவிர, வீட்டுல சிறு மனஸ்தாபங்கள் வந்து, கஷ்டப்படுத்தலாம். வெளியூர்ப் பயணங்கள் சிலருக்கு இருக்கும். ஆனா, அது பைசா பிரயோஜனமில்லாத வீண் வேலையா போகும். பணக் கையிருப்பு கரையுமே தவிர, வர்ற பணம் கூட நிக்காது! புது முயற்சிகளைக் கொஞ்சம் தள்ளிப் போடுங்க. வீட்டுப் பெரியவங்களால லேசான மனக்கஷ்டம் வரலாம். ஷேர், புது வீடு, மனை வாங்கறது எதுவும் இப்ப வேணாம். முருகன் வழிபாடு நல்லது செய்யும்.



மிதுனம் : *(மிருக சீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

குருபலன் கூடியிருக்குங்க. அதனால சுகமான வாரம்தான் இது. ரொம்ப நாளா உடம்பு சரியில்லாம அவதிப்பட்டவங்க பாடு இப்ப தீரும். நீண்ட நாள் கடன் பாக்கி வந்து சேரும். வீட்டுலயும் வெளியிலயும் நல்ல பேரும் புகழும் கிடைக்கும். எதிர்பாராத வகையில பெண்களால அனுகூலம் உண்டு. சிலருக்கு காதல் கை கூடலாம். டும்டும் சான்ஸ் கட்டாயம் உண்டு! ஷேர் மாதிரி முதலீடு கள்ல யோசிச்சிச் செயல்பட்டா, லாபம் பார்க்கலாம். சிலருக்கு பார்ட்டி, அது இதுன்னு உல்லாச மாலை நேரங்கள் வாய்க்கும். இந்த வாரக்கடை சில மட்டும் பிக்பாக்கெட்காரங்க கிட்ட கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்க.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

கொஞ்சம் முன்யோசனையோட, அனுபவஸ்தர்கள் அட்வைஸையும் கேட்டுட்டு இந்த வாரம் நீங்க தொடங்கற புதுக் காரியங்கள் எதுவும் கட்டாயம் வெற்றி பெறும். சட்டம், ராணுவத் துறையினருக்கு நல்ல காலம் இது. ரொம்ப நாளா எதிர்பார்த்துட்டிருக்கற ப்ரொமோஷன், இப்ப வரும். பெண்களுக்கு, வாய் ஜாலம் மூலமாவே அனுகூலங்கள் உண்டு. சில பெண்களுக்கு லாட்டரி யோகமும் இருக்கும். வீட்டுல வயசானவங்க யாராச்சும் இருந்தாங்கன்னா, அவங்க மனசு குளிர்றாப்பல ஏதாச்சும் ஒரு காரியம் பண்ணுங்க. சமயத்துல அவங்க உதவி வேண்டியிருக்கலாம். இந்த வாரம் உங்களுக்குப் பணப் பிரச்னை கிடையாது. வெளுத்து வாங்குங்க.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


பொதுவா சிக்கல் இல்லாத வாரம்னாலும் உஷ்ண சம்பந்தமான வியாதிகள் சிலரைப் படுத்தும் போலத் தெரியுது. அதனால மருத்துவச் செலவு இருக்கும். மற்றபடி தொழில் ரீதில நல்ல வளர்ச்சி இருக்கும். சிலருக்கு வெளிநாடு சான்ஸ் கூட இருக்கும். பத்திரிகைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு சவாலான காரணங்களைச் சாதிச்சி, பெருமை பெறும் நேரம் இது! நிர்வாகம், கணக்கு சம்பந்தப்பட்ட துறைல இருக்கறவங்களுக்கு மேலதிகாரிகளோட ஆதரவும் பாராட்டும் உண்டு. சிலர் வீடு மாறலாம். மேலும் சிலருக்கு டிரான்ஸ்பர் மாதிரி ஊர் மாறும் சான்ஸும் வரும். அரசுப் பணியாளர்கள் மட்டும் எச்சரிக்கையா இல்லேன்னா, கூட இருந்தே சிலர் குழி பறிச்சிடுவாங்க!



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

பொருளாதார ரீதியா கொஞ்சம் கஷ்டப்படுவீங்க. ஆனா, கடன் மட்டும் இப்ப வாங்காதீங்க. அதே மாதிரி, யாரையும் நம்பி முக்கியமான பொறுப்புகளை விட வேணாம். ஏன்னா, சரியா செஞ்சாலே நாலுபேர் தப்புக் கண்டுபிடிக்கக் காத்துட்டிருக்காங்க. இந்த வாரம் வெளியூர் பயணங்களைத் தவிர்த்துடுங்க. ஓட்டல்ல சாப்பிடாதீங்க. கண்ட தண்ணியக் குடிக்காதீங்க. ஜுரம், வயிற்று வலி போல சுகவீனம் வர சான்ஸ் இருக்கு. கணவன் - மனைவி உறவு அத்தனை திருப்திகரமா இருக்காது. எதிலும் விட்டுக் கொடுத்து, அனுசரிச்சிப் போனீங்கன்னா நல்லது.

துலாம் : (சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)



மனசுக்கு இனிய சம்பவங்கள் நடக்கப் போகுது. அது, வீட்டுல கல்யாண ஏற்பாடாகவோ, ஆபீஸ்ல பிரமோஷனாகவோ இருக்கலாம். உங்க பேச்சு சாதுர்யம் கொடி கட்டிப் பறக்கும். எதிரிகள் கூட உங்க பேச்சுல மயங்கு வாங்கன்னா பார்த்துக்கங்க. இந்த வாரம் உறுதியான முதலீடுகள் செய்யச் சரியான சமயம். வீடு, மனையோ, ஷேர் மாதிரியோ செய்யற யோசனை இருந்தா உடனே செயல்படுங்க. வெளிநாட்டுத் தொடர்பு உள்ளவர்களுக்கு ரொம்ப மகிழ்ச்சியூட்டும் விதமா ஒரு செய்தி, கடல் கடந்து வரும். சிலருக்கு கார் மாதிரி வாகனங்கள் வாங்கற யோகமும் உண்டு. அரசியல்வாதிகளுக்கு நினைச்சது நடக்கற காலகட்டம் இது.


விருச்சிகம் : (விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)



ரொம்ப சாதகமான வாரம். உங்க சொல்லுக்கு எல்லாரும் கட்டுப்படுவாங்க. நினைச்சது நடக்கும். புதுமனை புகுவிழா மாதிரி விசேஷங்களுக்கு வாய்ப்பு இருக்கு. சிலருக்குக் கல்யாண யோகம் உண்டு. நல்ல காரியங்களுக்காகக் கொஞ்சம் கூடுதலா செலவு செய்ய வேண்டி வரும். தயங்காதீங்க. அப்புறம் வீட்டுல ஏதாவது சிறு பிரச்னை இருந்தா, சம்பந்தப்பட்டவங்களைக் கூப்பிட்டு நேர்ல பேசுங்க. அதிகார தோரணை மட்டும் வேணாம். ஏன்னா, ரொம்ப டென்ஷன் ஆனா, உடல் நலன் கெட்டுப் போகும் இல்லையா? உங்களுக்கு எதிர்பாராத ஒரு புண்ணிய யாத்திரை இந்த வாரம் இருக்கும்.


நடக்கும்!

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)



உப்புப் பெறாத விஷயத்துக்காக ஏன் மனசை அலட்டிக்கறீங்க? நிதானமா, அமைதியா இருந்தாலே பிரச்னைகள் தானா தீர்ந்துடும். இந்த வாரம் நீங்க டென்ஷனா இறாப்பல சில காரியங்கள் ஏறுக்கு மாறா நடக்கும். குழப்பமும் தூக்கமின்மையும் இருக்கும். அலைச்சலுக்குக் குறைவே இல்லை! வீட்டுலயும் லேசான மனஸ்தாபங்கள் வரலாம். வார்த்தையை வேஸ்ட் பண்ணாதீங்க. சைலன்ட்டா இருந்தீங்கன்னா ரொம்ப நல்லது. சிறு விபத்துகள் ஏற்படும் போலத் தெரியுது. ரோடுல போறப்ப கவனம் முக்கியம். இந்த வாரம் பணப் பிரச்னை இருக்காது. ஒரு பெரிய இடத்து ஆதரவு உங்களுக்கு கிடைக்கும்.

மகரம் : (உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)



வாய்ஜாலத்தாலேயே காரியத்தை சாதிச்சிக்கற சக்தி உங்களுக்கு இருக்கு. அப்புறம் என்ன கவலை? இந்த வாரம் உங்களுக்குப் பணப் பிரச்னை இருக்காது. போன வாரம் இருந்த மனக்கஷ்டமோ, சங்கடங்களோ கூட இருக்காது. எல்லாரும் உதவுவாங்க. குறிப்பா எழுத்தாளர்களுக்கும், இசைக் கலைஞர்களுக்கும் எதிர்பாராத இடங்கள்லேர்ந்தெல்லாம் உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்குப் புகழ் கூடும். பெண்களுக்கும் புதிய பொருள்கள் வாங்கும் யோகம் இருக்கு. வீட்டுலே ஏதாவது விசேஷம் கூடி வரும். எதுக்கும் பர்ஸை பத்திரமா வெச்சுக்கங்க. செலவு நிறைய இருக்கும்!




கும்பம் : (அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)



எல்லாம் இருந்தும் எதுவோ இல்லாத மாதிரி ஒரு குறை இருக்குதா? கவலையைவுடுங்க. இந்த வாரம் நீங்க சந்தோஷத்தோட முழு வீச்சை அனுபவிப்பீங்க. வீட்டுல நல்ல காரியங்கள் நடக்கும். உறவினர்கள், நண்பர்கள் உதவுவாங்க. பணம் நிறைய கையில இருக்கும். புதுப் புடவை, நகை வாங்கற யோகமும் இருக்கு. சிலருக்கு லாட்டரில கொஞ்சமா அதிர்ஷ்டம் இருக்கலாம். உங்க நீண்ட நாள் திட்டம் ஒண்ணு இப்ப செயலாகும். மூத்த மகன் மூலமா பெரும் புகழ் அடைவீங்க. சிலபேருக்கு புண்ணியத்தல யாத்திரை போக வாய்ப்புக் கிடைக்கும்.

கன்னி ராசிக்காரரான பாலகுமாரன் இந்த வாரம் வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கணுமாம். யாரையும் நம்பி முக்கியமான பொறுப்புகளை ஒப்படைக்கக் கூடாதாம்.

மீனம் : (பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)



உடல் நலன் சீரா இருக்காது. குழந்தைகளுக்கு வயிறு சம்பந்தமான நோய்கள் வரலாம்; கவனம். முயற்சிகள் வெற்றியடைய ரொம்பப் பாடுபட வேண்டி வரும். வீட்டுல சில்லறைப் பிரச்னைகள் இருக்கும். அது 'சில்லறை'யால வர்ற பிரச்னையாவும் இருக்கலாம். வீண் விவாதங்கள், அக்கப்போர் வேணாம். உங்களைப் பற்றி மேலிடத்துல வத்தி வெக்கப் பலர் காத்துட்டிருக்காங்க. இப்ப கொஞ்சம் நேரம் சரியில்லாததால, எதிலும் அடக்கி வாசிங்க. பயணங்கள் வேணாம். முடிஞ்சா திருப்பதிக்கு ஒரு நடை போயிட்டுவாங்க. யாருக்கானா சின்ன அளவுலயாவது தானம், தர்மம் செஞ்சீங்கன்னா, ரொம்ப நல்லது!

ஹர்பிஷன் சிங். தமது 18-வது வயதிலேயே (பெங்களூர்) டெஸ்ட் போட்டியில் அறிமுகமான ஐந்தாவது இந்திய வீரர். இந்த பஞ்சாப்காரர் தமது பத்தாவது பந்திலேயே ப்ளுவட் என்கிற ஆஸ்திரேலிய வீரரை வீழ்த்தியவர். ஆஃப் ஸ்பின்னரான இவர், சென்னையிலுள்ள கெம்ப்ளாஸ்ட் கம்பெனிக்காக முதல் டிவிஷன் போட்டியில் விளையாடுபவர். இவரைச் சந்தித்தபோது...

எனக்காக நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள்!

"இத்தனை சின்ன வயதிலேயே இந்தியாவுக்கான டெஸ்ட் போட்டியில் ஆடுவீர்கள் என்று எதிர்பார்த்தீர்களா?"

"நிச்சயம் எதிர்பார்த்தேன். பஞ்சாபுக்காக ரஞ்சி போட்டிகளில் விளையாடியிருக்கிறேன். பதினேழாவது வயதில் இந்திய 'ஏ' அணியில் இடம் பெறும் வாய்ப்புக் கிடைத்து, பாகிஸ்தான் சென்று விளையாடி நிறைய விக்கெட்டுகளையும் எடுத்தேன். எனவே, இந்தியாவுக்காக ஆடுவேன் என்பது நிச்சயம் எனக்குத் தெரியும். இருந்தபோதிலும் இத்தனை சீக்கிரத்தில் அந்த வாய்ப்புக் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை என்பதும் உண்மைதான்."

"இந்த மகிழ்ச்சியான செய்தியை உங்களிடம் முதன் முதலில் சொன்னது யார்?"

"கல்கத்தா போட்டியில் இந்தியா வெற்றி பெறுவதை டெலிவிஷனில் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த அன்று இரவுதான் இந்தச் செய்தி எனக்குக் கிடைத்தது. டெலிபோனில் சொன்னவர் எனது குருநாதர் பிஷன்சிங் பேடி. கேட்டதும் சந்தோஷக் கடலில் மூழ்கிப் போய் விட்டேன்."

"உங்களின் இந்த வளர்ச்சிக்கு யார் முக்கிய காரணம்?"

"முதலில் என் பெற்றோர். அவர்கள் கொடுத்த ஊக்கத்தால்தான் பஞ்சாப் மாநில இளைஞர் அணியில் இடம் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது பாஜி (பிஷன்சிங் பேடியை இப்படித்தான் குறிப்பிடுகிறார். பாஜி என்றால் குரு என்று அர்த்தமாம்!) எனது பந்து வீச்சைப் பார்த்தார். அதில் சில மாற்றங்களைச் செய்தார். ப்ளோட்டர், டாப் ஸ்பின் ஆகியவற்றை எப்படி லாகவமாகப் போடுவது என்பதை நுணுக்கமாகச் சொல்லிக் கொடுத்தார். இப்படி அவரது மேற்பார்வையில் பதினெட்டு மாத காலம் பயிற்சி பெற்றேன். இப்போது நான் சுமாராகப் பந்து வீசுகிறேன் என்றால் அதற்கு பாஜியும் சிக்காவும் (நம்ம ஸ்ரீகாந்த்

தான்!தான் காரணம். பாஜி எனது பந்து வீச்சில் மெருகேற்றினார் என்றால் சிக்கா எனக்கு தைரியம் கொடுத்தார். 'பேட்ஸ்மன் எத்தனை ரன் எடுத்தாலும் நீ கவலைப் படாமல் பந்து வீசு' என்று எனக்கு தைரிய மூட்டியவர் சிக்காதான். இவர்களை நான் என்றும் மறக்க மாட்டேன்."

"இந்திய அணியின் 'பேபி'யாக இருக் கிறீர்கள். சீனியர் ஆட்டக்காரர்கள் எப் படிப் பழகினார்கள்?"

"அஸார், சச்சின், ஸ்ரீநாத், கும்ப்ளே ஆகி யோரை முன்பு நான் டெலிவிஷனில்தான் பார்த்திருக்கிறேன். இப்போது பெங்களூரில் அவர்களோடு சரிசமமாகப் பழகும் வாய்ப்பே கிடைத்தபோது என்னை நானே கிள்ளிப் பார்த்துக் கொண்டேன். அதுவும் அணியிலுள்ள 15 பேரில் ஒருவராக அல்லாமல், ஆடு கிற 11 பேரில் ஒருவராக என்னை நேரடியாகவே தேர்ந் தெடுத்ததென்பது எனது புண் ணியம்தான். அனைவரும் சரி சமமாகப் பழகினார்கள். பயிற்சியின்போதும் சரி, மேட்சில் பந்து போட்ட போதும் சரி அனைவரும் கை தட்டி என்கரேஜ் செய்தார்கள். 'பயப்படா மல் எப்போதும் போலவே நீ பந்து போடு' என்று கும்ப்ளே என்னை உற்சாகப்படுத் தினார். எனது பத்தாவது பந்திலேயே நான் விக்கெட் எடுத்தபோது, கும்ப்ளேவும் சித் துவும் எனக்கு முத்தமே கொடுத்தார்கள்! மேட்ச் முடிந்த பிறகு அவர்கள் என்னைக் கலாட்டா செய்த விஷயம் இருக்கிறதே... அப்பப்பா! மைதானத்தில் அப்படி உற்சாகப் படுத்தியவர்களா இப்போது இப்படி என்று தோன்றியது!"

"ராகிங் மாதிரி செய்தார் களா?"

"ராகிங் இல்லை. ஆனா லும் அதையெல்லாம் எப்படி உங்களிடம் சொல்ல முடி யும்?"

"உங்களைப் போலவே இளம் வய தில் வந்து உலகையே கலக்கிய சிவராம கிருஷ்ணன், மனீந்தர் சிங் ஆகியோர் பிறகு காணாமலே போய் விட்டார்களே?"

"அந்த மாதிரி யெல்லாம் நடக்கக் கூடாது. நான் இந் தியாவுக்காக நீண்ட காலம் ஆட வேண்டும்; நிறைய விக்கெட்டுகள் எடுக்க வேண்டும் என்று ஆண்டவனிடம் வேண்டிக் கொள் கிறேன். எனக்காக நீங் களும் பிரார்த்தனை செய் யுங்கள்!" ○

சந்திப்பு, படம்: **நந்தினி**





டூ மச் ரேட்டில் டூ வீலர் ஸ்டாண்ட்கள்...

மாற்று ஏற்பாடு செய்யுமா மாநகராட்சி...?

கோவை மாநகராட்சிக்குட்பட்ட எல்லைகளில் தற்போதெல்லாம் இருபதுக்கு இருபது என்கிற அளவில் ஓர் இடம் கிடைத்தால் போதும்; உடனே அங்கொரு டூவீலர் ஸ்டாண்ட் முளைத்து விடும்! அதுவும் 'மெயின் ரோடு'களில், (அவினாசி ரோடு, திருச்சி ரோடு, பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி ரோடு, மேட்டுப்பாளையம் ரோடு) மெயின் பாய்ண்ட்களில் கையகல இடம் கிடைத்து விட்டால் நாலு சைக்கிள்களை நிறுத்தி, தினம் ஆறு ரூபாய் கட்டணம் வசூலித்து விடுகிறார்கள். நிலைமை அவ்வளவு மோசம்.

'போக்குவரத்து (பஸ்) வசதியில்லாத கிராமங்களிலிருந்து நகரம் நோக்கி வேலைக்குப் போகும் மக்களுக்கு இது ஒரு சேவை முயற்சிதானே...?'

இதை மேலோட்டமாகப் பார்த்தால் இப்படித்தான் தோன்றும். ஆனால் இதையே தொழிலாக - கூடுதல் கட்டணம் வசூலித்து - கூலிக்கு ஆள் வைத்து - அமோகமாய் லாபத்தை அறுவடை செய்கிறார்கள். டூவீலர் 'ஸ்டாண்ட்களில் வாடிக்கையாளராயிருப்பவர்கள் தினறுகிறார்கள்.

காரணம், பஸ் கட்டணம் போல் அடிக்கடி மாறும் கட்டண விவரம். முதன் முதலாய் வெறும் 0.25 பைசாவிற்கு அங்கொன்றும் இங்கொன்றுமாய் முளைத்த சைக்கிள் ஸ்டேண்ட்கள் இப்போது வசூலிக்கும் தினக் கட்டணம் எவ்வளவு தெரியுமா...? சைக்கிளுக்கு ரூ. 1.50, ஸ்கூட்டர் மற்றும் பைக்குகளுக்கு ரூ. 3.00! இப்படித் தாறுமாறாய் தனியார் டூவீலர் ஸ்டாண்ட்கள் வசூலிப்பது நாம் கண்கூடாகப் பார்த்த உண்மை...! (இங்கே மாநகராட்சி சைக்கிளுக்கு 0.50 பைசாவும் ஸ்கூட்டருக்கு 2.00 ரூபாயுமே வசூலிக்கிறது.)

கோவை 'மாநகராட்சி'யாகப் பிரகடனப் படுத்தப்பட்டபோதோ - அல்லது கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களை நோக்கி வேலைக்காகப் பயணித்த போதோ ரொம்ப மெதுவாய் உருவாக ஆரம்பித்த இத்தகைய தனியார் 'ஸ்டாண்ட்கள்' இப்போது

கோவை மாநகரிலும், அதன் சுற்றுப்புற எல்லையோரங்களிலும் சுமார் நூற்றுக்குக் கிட்டத்தில் இருக்கும்!

மாநகராட்சி டெண்டர் விட்டு நடத்த விட்டிருக்கும் டூவீலர் ஸ்டாண்ட்கள், மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஸ்டாண்ட்கள் அத்தனையும் கோவை மத்திய பஸ் நிலையத்திலும், உக்கடம் (பொள்ளாச்சி – பாலக்காடு பஸ் ஸ்டேண்ட்) டவுன் ஹால் பகுதிகளில் – இன்னும் சிற்சில இடங்களில் மட்டுமே உண்டு.

மாநகராட்சி டெண்டர் விட்டு, அதற்கு ஒரு தொகை கட்டி வசூலிக்கும் குத்தகை தாரருக்கு இந்தக் குறைச்சலான 'ரேட்' கட்டுபடியாகிறதென்றால் (நாம் விசாரித்த அளவில் ஓரிரு இடங்கள் தவிர மீதியெல் லாவற்றிலும் முறையான வசூலே நடை

• மேயர் கோபாலகிருஷ்ணன்



பெறுகிறது) தனியார் ஸ்டாண்ட்கள் மட் டும் இப்படி கூடுதல் ரேட் வைப்பதற்குக் காரணம் என்ன...?

பீளமேடு, சிங்கநல் லூர் உட்பட இன்னும் பல பகுதிகளில் இது குறித்து விசாரிக்கப் புறப் பட்டோம்.

'ஹோப் காலே ஜில்' ஒரு ஸ்டாண்ட்டில் (ஒரு வீடு மாதிரி இருந்தது) முறையாக நமது வண்டிக்கு 1.50 ரூபாய் வசூலித்து விட்டு டோக்கன் கொடுத்தனர் கையெழுத்தும் வாங்கிக் கொண்டு 'விடிந்தால் இரண்டு நாள் கணக்கு' என்று கறாராய்ச் சொன் னார் அந்த வீட்டுக்காரப் பெண். (வீடும் – ஸ்டாண்டும் ஒன்றே)

''மாநகராட்சி ஸ்டாண்ட்களில் சைக் கிளுக்கு வெறும் 50 பைசா. நீங்க ஏன் இப் படி அதிகமாய்...!'' – கேட்டு வாய் மூட வில்லை... வீட்டுக்குள்ளிருந்து இன்னொரு அம்மாள் வெளிப்பட்டுப் பொரிந்து தள்ளினார் :

''எந்த ஸ்டாண்டுல எந்த ரேட்டுன்னு வேண்டாம்...? அங்கெயெல்லாம் அர்த்த ஜாமத்துல கதவு தட்டினா யாரும் கொடுக்க மாட்டாங்க.... நாங்க காத்திருந்து கொடுக் கிறோம், அதுவும் பத்திரமா... அங்கே 'கண் ணாடி' காணாமப் போகறதும், 'டைனமோ' போறதும் எங்களுக்குத் தானே தெரியும்...!''

இன்னொரு சைக்கிள் ஸ்டாண்ட் டுக்கு நாம் விஜயம் செய்தபோது அன்றுதான் அங்கு ரூ. 1.00, 2.00 (சைக்கிள், ஸ்கூட்டர்) என்றிருந்த ரேட்டை 1.50, 3.00 என மாற்றி யிருந்தார்கள்.

''ஏன் தாத்தா... இது என்ன கேப்பாரு கேள்வியேயில்லையா....' திடீர்னு ஒருநாள் கட்டணர்





"நீ எப்படிடா இந்த ஓட்டல்ல வேலைக்குச் சேர்ந்தே?"

"தினம் காசில்லாம சாப்பிட்டு, மாவாட்டி, மாவாட்டி, காலப்போக்குல கன்ஃபார்ம் ஆயிட்டேன்!"

– யமுனா ரங்கநாதன்

1.50ன்னா எப்படி... தினம் 1.50ன்னா மாசம் இதுக்கே ஐம்பது ரூபா ஒதுக்கி வச்சிரணும் போலிருக்கு...!"

அந்த ஸ்டாண்டை நிர்வகித்துக் கொண்டிருந்த பெரியவரிடம் வாடிக்கை ஒன்று அங்கலாய்த்துக் கொண்டிருக்க, நாம் அவர்களை நெருங்கினோம்.

"அதையேன் சார் கேட்கறீங்க! நா பாப்பம்பட்டி பிரிவு (பக்கத்து கிராமம் – 4 கிலோ மீட்டர் தூரம்)லயிருந்து தினம் இங்கே கொண்டு வந்து நிறுத்திட்டுதான் பெரியநாயக்கன்பாளையத்துக்கு வேலைக்குப் போறேன். இதுவரைக்கும் மாசம் 25/- ஒதுக்கிட்டிருந்தேன். இப்ப திடீர்னு 40/-ன்னா என்ன செய்யறது...? இதை எங்கே... யார்கிட்டே போய் அழுகறது..."

– இப்போது நான்கைந்து பேர் சேர்ந்து கொண்டனர். நாம் அந்த ஸ்டாண்ட் நிர்வகிப்பவரிடம் புருவம் உயர்த்த,

"தம்பீ... நாங்களும் கூலிக்காரங்கதான்... மாசம் எட்டு நூறு ரூபா சம்பளம். முதலாளி பார்த்து 'இவ்வளவு வாங்குன்னா' நாங்க வாங்க வேண்டியதுதான்... 'ஏன்... எதுக்கு...'ன்னு எங்கிட்ட வந்து கேட்டா எப்படி...?"

"ஒருவேளை வர்ற வருமானம் இந்த இடத்து வாடகைக்குப் போதலையோ...?"

"அப்படி இல்லை. தினம் இங்கே மட்டும் 400, 500 சைக்கிள்க, ஸ்கூட்டர்க வருது... ஆயிரம் ரூபாய்க்கு மேல கலெக்‌ஷன் ஆகுது... மாசம் எவ்வளவுன்னு கணக்குப் போட்டு நீங்களே பாருங்க...!"

இதுகுறித்து இன்னொரு 'ஸ்டாண்டில்' (சிங்கநல்லூர்) கூடுதல் கட்டணம் வசூலிப்பது நியாயமா? என அதன் அதிபரிடமே கேட்க...

"இஷ்டம்ன்னா வைக்கட்டும் சார்... இல்லேன்னா கொண்டு போய் எங்கியோ விடட்டும்.... இந்த இடத்தை மட்டும் நா ஒரு 'காம்ப்ளக்ஸ்' கட்டடம் கட்டி வாடகைக்கு விட்டா லட்ச லட்சமா சம்பாதிக்கலாம் தெரியுமா.... உங்களுக்கு...?" – நாம் வாயைப் பொத்திக் கொண்டு வர வேண்டிய அளவு காரமான பதில்!

'கண்டிப்பாக, மனிதர் காம்ப்ளக்ஸ் கட்டி விடுவார்... இந்தக் கட்டணம் வசூலித்தே...!'

நாம் பார்த்த டூவீலர் ஸ்டாண்ட்கள் அப்படியொன்றும் பிரமாதமான பாதுகாப்புடன் இல்லை. ஒரு பக்கம் பத்துப் பதினைந்து மூங்கில் கட்டி ஒரு பந்தல்... இன்னொரு இடத்தில் வெறும் தார்ப்பாய்களே கூரை... கோழிக் கடை, கறிக்கடைகளுக்குள்ளும் (நாற்றத்திற்குள்ளேயும்) நீளமாய் அணிவகுக்கும் வண்டிகள்...

மாநகராட்சி நிர்வகிக்கும் ஸ்டாண்ட்களுக்கு விசிட் செய்ததில் 'டோக்கன்' கொடுப்பதிலும் பெறுவதிலும் மிகுந்த கவனம் இருப்பது தெரிந்தது. சரி வண்டியில் கண்ணாடி, டேஞ்சர் லைட், டைனமோ... திருட்டுப் போவதெல்லாம்...

"யாரோ சில பேர் அப்படி புகார் கொடுக்கறாங்க. சிலது வைக்கும் போது உடைந்தும் போய் விடுகிறது. இருந்தாலும் நாங்கள் மிக உன்னிப்பாகக் கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறோம்...!"

– என்றார் கோவை காந்திபுரம் மாநகராட்சி டூவீலர் ஸ்டேண்ட் ஊழியர் ஒருவர்.

கோவை மாநகராட்சி மேயர் கோபாலகிருஷ்ணனிடம் இப் பிரச்னைகளைச் சொன்னோம். மாநகராட்சி கமிஷனர்களிடம் கலந்து பேசி நமக்குக் கீழ்க்கண்ட பதிலைப் பெற்றுத் தந்தார் :

"தனது சொந்தக் கட்டடத்தில் ஒரு தொழிலாய் நடத்தும் தனியார் டூவீலர் ஸ்டாண்ட்களைக் கட்டுப்படுத்துவது என்பது இயலாது. இப்போது மாநகராட்சி நிர்வகிக்கும், டெண்டர் விட்டு நிர்வகிக்கும் ஸ்டாண்ட்கள் நன்றாகவே இயங்கி வருகின்றன. தனியார் ஸ்டாண்ட்கள் பெருகி வருவதும், அதில் அதிகக் கட்டணம் வசூலிப்பதும் பற்றி இதுவரை புகார் ஏதும் இல்லை. அப்படி வந்தால் நடவடிக்கை எடுப்போம். அத்தோடு நீங்கள் குறிப்பிடும் பகுதிகளில் இதுகுறித்து விசாரித்து அங்கு மாநகராட்சிக்கு சொந்தமான இடங்கள் இருப்பின் அதில் 'டூ வீலர் ஸ்டாண்ட்கள்' சிட்டியின் மையத்தில் உள்ளது போலவே அமைக்க மாநகராட்சி முயற்சி எடுக்கும்...!"

கட்டுரை, படங்கள் : **ரோகிணி**

பொன்னியின் செல்வன்

முப்பத்து நான்காம் அத்தியாயம்

லதா மண்டபம்

கல்கி கலெக்ஷன்

அடர்ந்த மாந்தோப்புக்கிடையே சென்ற ஒற்றையடிப் பாதையின் வழியாக அம்மங்கை விடுவிடுவென்று நடந்து செல்ல, வந்தியத்தேவனும் விரைவாகத் தொடர்ந்து சென்றான். மரஞ் செடிகளின் மீது மோதிக் கொள்ளாமல், அந்த இருளில் நடந்து செல்லுவது கஷ்டமாகத்தான் இருந்தது. ஒரு சமயம் இவன் மரத்தில் மோதிக் கொள்ளப் பார்த்துத் தயங்கி நின்றபோது, அந்த மங்கை திரும்பிப் பார்த்து, "ஏன் நிற்கிறாய்? வழி மறந்து போய் விட்டதா? நீதான் இருட்டில் கண் தெரிகிற மனிதன் ஆயிற்றே!" என்றாள். அதற்குப் பதிலாக வந்தியத்தேவன் உதட்டில் விரலை வைத்து முன்னால் அவள் சொன்னது போல் "உஷ்!" என்றான். அதே நேரத்தில் மதில் சுவருக்கு வெளியே ஏதோ சப்தம் கேட்டது. மனித நடமாட்டம் போலத் தொனித்தது. பிறகு இருவரும் மறுபடி நடந்தார்கள். கொஞ்ச தூரம் போனதும் வல்லவரையன் இலேசாகச் சிரித்தான். அந்த மங்கை திரும்பிப் பார்த்து, "என்னத்தைக் கண்டு சிரிக்கிறாய்?" என்றாள்.

"கண்டு சிரிக்கவில்லை; கேட்டுச் சிரிக்கிறேன்!" என்றான்.

"அப்படியென்றால்?...."

"என்னைத் தேடி வந்தவர்களின் காலடிச் சத்தத்தைச் சற்று முன் நீ கேட்கவில்லையா? அவர்கள் ஏமாந்து போனதை எண்ணிச் சிரிக்கிறேன்!"

அமரர் கல்கி

அவள் சிறிது பயத்துடன், "உன்னை யாராவது தேடி வருகிறார்களா, என்ன? எதற்காக?" என்றாள்.

"இல்லாவிட்டால் எதற்காக இந்தக் குருட்டு இருட்டில் மதில் சுவரில் வந்து மோதிக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டும்?"

அச்சமயம் காற்றின் அசைவில் மரக் கிளைகள் விலகி நிலாக் கதிர் ஒன்று வந்தியத்தேவனுடைய முகத்தின் மீது விழுந்தது.

அந்தப் பெண் சற்று வியப்புடனும் திகைப்புடனும் அவனைப் பார்த்தாள்.

"என்ன பார்க்கிறாய்?" என்று கேட்டான்.

"நீ, நீதானா என்று பார்த்தேன்!"

"நான், நான் இல்லாவிட்டால் வேறு யாராயிருப்பேன்?"

"போன தடவை நீ வந்திருந்த போது பெரிய மீசை வைத்திருந்தாயே!"

"நல்ல கேள்வி கேட்கிறாய்? என்னைப் போல் சுவர் ஏறிக் குதித்து வருகிறவன் அடிக்கடி வேஷத்தை மாற்றிக் கொள்ளா விட்டால் எப்படி?"

"முன்னைக்கு இப்போது இளமை யாய்த் தோன்றுகிறாயே?"

"உற்சாகம் இருக்கும்போது இளமை தானே வருகிறது!"

"அப்படி உனக்கு என்ன உற்சாகம் வந்தது?"

"உங்கள் மகாராணியின் தயவு இருக்கும்போது உற்சாகத்துக்கு என்ன குறைவு?"

"பரிகாசம் செய்ய வேண்டாம். இன்றைக்கு எங்கள் எஜமானி இளைய ராணி தான். ஒருநாள் நிச்சயமாக மகாராணி ஆவார்கள்!"

"அதைத்தான் நானும் சொல்லுகிறேன்."

"இதுதானா சொல்வாய்? உன்னுடைய மந்திர சக்தியினால்தான் மகாராணி ஆனார்கள் என்று கூடச் சொல்வாய்! பாதி ராஜ்யத்தைக் கொடு என்று கேட்டாலும் கேட்பாய்!"

வந்தியத்தேவன், அறிய விரும்பியதை ஒருவாறு அறிந்து கொண்டான். பிறகு அவன் ஒன்றும் பேசவில்லை. தீவிரமாக யோசித்துக் கொண்டே நடந்தான்.

தான் சந்திக்கப் போகிறது யாரை? பழுவூர் இளையராணியாயிருக்கலாம். அல்லது மதுராந்தகத் தேவரை மணந்து கொண்ட சின்னப் பழுவேட்டரையரின் மகளாயிருக்கலாம். தன்னை மந்திரவாதியென்று எண்ணி அந்தப் பெண் அழைத்துக் கொண்டு போகிறாள். போய், அந்த 'இளையராணி' யாராயிருந்தாலும் அவளைச் சந்திக்கும்போது எப்படி நடந்து கொள்வது? - நெஞ்சே! தைரியத்தைக் கைவிடாதே! தைரியம் உள்ள வரையில் ஜயமும் உண்டு! சமயத்தில் ஏதேனும் யுக்தி தோன்றாமல் போகாது! இதுவரையில் எந்த நெருக்கடியிலும் நாம் தோல்வியுற்று வந்ததில்லை. அதிலும் பெண் பிள்ளை ஒருத்தியிடமா தோல்வியடையப் போகிறோம்?

ஒரு பெரிய மாளிகையை அவர்கள் நெருங்கிச் சென்றார்கள். ஆனால் மாளிகையின் முன் வாசலை நோக்கிச் செல்லவில்லை. பின்புற வாசலையும் நெருங்கவில்லை. மாளிகையின் ஒரு பக்கத்தில் தோட்டத்துக்குள் நீட்டி விட்டிருந்த சிருங்கார லதா மண்டபத்தை நெருங்கினார்கள். இன்னும் அருகில் நெருங்கிய போது, அந்த லதா மண்டபம் இரண்டு பெரிய பிரம்மாண்டமான மாளிகைகளை ஒன்று சேர்க்கும் பாதையைப் போல் அமைந்திருப்பது தெரிந்தது. அப்படிச் சேர்க்கப்பட்ட இரு கட்டடங்களும் ஒருவிதத்தில் மாறுபட்டிருந்தன. வலதுபுறத்து மாளிகை அதன் உள்ளே சுடர் விட்டு எரிந்த பல தீபங்களினால் ஜொலித்துக் கொண்டிருந்தது. உள்ளிருந்து பலவித கலகலப்பான தொனிகள் வந்து கொண்டிருந்தன. இடதுபுறத்துக் கட்டடத்திலோ, ஒரு சின்னஞ் சிறு தீபம் கூட எரியவில்லை. நிலா வெளிச்சத்தில் அதன் வெளிச் சுவர்கள் நெடிதுயர்ந்து தெரிந்தன. ஆனால் அந்த மாளிகையின் உள்ளே நிசப்தமும் இருளும் குடிகொண்டிருந்தன.

வந்தியத்தேவனை அழைத்துக் கொண்டு வந்த பெண், லதா மண்டபத்தை அணுகியதும் அவனைப் பார்த்துச் சமிக்ஞையினால் அங்கேயே நிற்கும்படி சொன்னாள். அவனும் அப்படியே நின்றான். அவ்விதம் நின்றபோதுதான் அந்த இடத்தில் நிறைந்திருந்த மலர்களின் நறுமணத்தை அவன் உணர்ந்தான். அப்பப்பா! என்ன வாசம்! என்ன வாசம்! மூக்கில் நெடி போல ஏறித் தலையைக் கிறுகிறுக்க அடிக்கிறதே!

அந்தப் பெண் லதா மண்டபத்துக்குள்




நுழைந்ததும், அவளுடைய குரலும் இன்னொரு இனிய பெண் குரலும் கேட்டன. "வரச் சொல் உடனே! கேட்பானேன்? நான்தான் இத்தனை நேரமாய்க் காத்திருக்கிறேன் என்று தெரியுமே?" என்ற சொற்கள் அவனுக்கு மயக்கத்தை உண்டாக்கின. அந்தக் குரல் பழுவூர் இளையராணியின் குரல்தான்! சந்தேகமில்லை! அடுத்தகணம் அவள் முன்னால் போய் நிற்கப் போகிறோம். அந்த நிலைமையை எவ்விதம் சமாளிக்கப் போகிறோம்? எதிர்பார்த்த மந்திரவாதிக்குப் பதிலாகப் பல்லக்கில் வந்து மோதிய மனிதன் வந்து நிற்பதைக் கண்டு அவள் என்ன நினைப்பாள். ஆச்சரியப்படுவாளா? கோபம் கொள்வாளா? ஒருவேளை மகிழ்ச்சி அடைவாளா?... அல்லது எவ்வித உணர்ச்சியையும் வெளியில் காட்டாமல் நடந்து கொள்வாளா?

அவனை அழைத்து வந்த மங்கை லதா மண்டபத்து வாசலில் நின்றபடி சமிக்ஞையால் அழைத்தாள்.

வந்தியத்தேவன் அவள் நின்ற இடத்தை அடைந்து மண்டபத்தின் உட்புறம் நோக்கினான். ஒரு நொடிப் பொழுதில் அங்கே தோன்றிய காட்சி அவன் கண் வழியாக மனத்தில் பதிந்தது. தங்கவிளக்கு ஸ்தம்பத்தில் ஒளிர்ந்த தீபச் சுடர் பொன் ஒளியைப் பரப்பியது. ஏதோ ஓர் அபூர்வமான வாசனைத் தைலத்தை அந்த விளக்கில் விட்டிருக்க வேண்டும். ஆதலின் தீபச் சுடரின் புகை கமகமவென்று மணம் வீசிற்று. பல வர்ண நறுமண மலர்களைப் பரப்பிய சப்ரகூட மஞ்சத்தில் ஒரு பெண் ஒய்யாரமாக சாய்ந்து கொண்டு வீற்றிருந்தாள். அவள் பழுவூர் இளையராணிதான். பகலில் பல்லக்கில் பார்த்தபோது அவள் அழகியாகத் தோன்றினாள். இரவில் தங்கக் குத்துவிளக்கின் வெளிச்சத்தில் அழகென்னும் தெய்வமே உருவெடுத்தது போலக் காணப்பட்டாள். மலரின் மணமும் விளக்கின் புகை மணமும் பழுவூர் இளையராணியின் மோகன உருவமும் சேர்ந்து வந்தியத்தேவனைப் போதை கொள்ளச் செய்தன.

வந்தியத்தேவா! ஜாக்கிரதை! ஒரே ஒரு தடவை நீ மதுபானம் செய்தாய்! உன் அறிவு கலங்குவதை அறிந்தாய்! பிறகு மதுவைத் தொடுவதில்லை என்று சபதம் செய்தாய்! இப்போது அதை ஞாபகப்படுத்திக்கொள்! மதுவின் போதையைக் காட்டிலும் சக்திவாய்ந்த இந்த மயக்கத்தில் உன் அறிவைப் பறிகொடுத்துவிடாதே!

வந்தியத் தேவனைப் பார்த்த பழுவூர் இளைய ராணி நந்தினி, அவளுடைய பவழ இதழ்கள் சிறிது விரிந்து முத்துப் பற்களை வெளிக் காட்டும்படி வியப்புடன் நோக்கிக் கொண்டிருந்தாள். பேச முடியாத நிலையை அவள் அச்சமயம் அடைந்



திருந்தது வந்தியத்தேவனுக்கு அனுகூலமாகப் போயிற்று.

இலேசாக அவன் ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு, "அம்மணி! தங்கள் தாதிப் பெண்ணுக்குத் திடீரென்று சந்தேகம் வந்து விட்டது;-நான் மந்திரவாதியா இல்லையா என்று! அதை எப்படிக் கேட்டாள் என்று நினைக்கிறீர்கள்? 'நீ நீதானா?' என்று கேட்டாள்!" என்று சொல்லி மறுபடியும் சிரித்தான்.

நந்தினி புன்னகை புரிந்தாள். வந்தியத் தேவனுடைய கண் முன்னால் ஒரு மின்னல் மின்னியது! அது தேனைச் சொரிந்தது.

"இவளுக்கு அப்படித்தான் ஏதாவது சந்தேகம் திடீர் திடீர் என்று வந்துவிடும்! வாஸுகி! ஏன் இங்கேயே மரம்போல் நிற்கிறாய்? உன் இடத்துக்குப் போ! யாராவது வரும் காலடிச் சத்தம் கேட்டால் கதவைப் படீரென்று சாத்து! என்றாள் நந்தினி.

"இதோ, அம்மா!" என்று சொல்லிவிட்டு, வாஸுகி லதா மண்டபத்தின் உள் வழியாகப் பிரகாச மாளிகைக்குச் சென்ற நடைபாதையில் நடந்து போய்ச் சற்றுத் தூரத்தில் மங்கலாகத் தெரிந்த வாசற்படியண்டை உட்கார்ந்து கொண்டாள்.

நந்தினி சிறிது குரலைத் தாழ்த்திக் கொண்டு, "உன்னை மந்திரவாதியில்லையென்றா இவள் சந்தேகிக்கிறாள்? அசட்டுப் பெண்! மந்திரவாதிகள் என்று சொல்லிக் கொள்கிறவர்களில் முக்கால்வாசிப் பேர் வெறும் பொய்யர்கள். நீதான் உண்மை மந்திரவாதி! என்ன மாய மந்திரம் செய்து இந்தச் சமயத்தில் இங்கே வந்தாய்?" என்று

கேட்டாள்.

"அம்மணி! மாய மந்திரம் செய்து நான் இங்கு வரவில்லை. சுவர் மீது சாத்தியிருந்த ஏணிமேல் ஏறித்தான் வந்தேன்!" என்றான் வந்தியத்தேவன்.


"அதுதான் தெரிகிறதே! இந்தப் பெண்ணை என்ன மாய மந்திரம் செய்து ஏமாற்றினாய் என்று கேட்டான்."

"நிலா வெளிச்சத்தில் ஒரு புன்னகை புரிந்தேன். அவ்வளவுதான்! அதற்குச் சரிப்பட்டு வராவிட்டால் தாங்கள் கொடுத்த மந்திர மோதிரத்தைக் காட்ட எண்ணியிருந்தேன்."

"அதைப் பத்திரமாய் வைத்திருக்கிறாய் அல்லவா? அந்த மோதிரம் இருக்கும்போது பட்டப் பகலில் பகிரங்கமாக இங்கே வந்திருக்கலாமே? எதற்காக இந்தக் குருட்டு வழியில் திருட்டுத்தனமாக வந்தாய்?"

"அம்மணி! தங்கள் மைத்துனர் இருக்கிறாரே, சின்னப் பழுவேட்டரையர், அவருடைய ஆட்கள் கத்தத் திருடர்கள். முதலில் என்னுடைய உடைகளையும் உடைமைகளையும் திருடப் பார்த்தார்கள். பிறகு என்னைப் பின்தொடர்ந்து ஒரு கணம்கூடப் பிரியாமல் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்து பிரிய பட்டபாடு பெரும் பாடாகப் போயிற்று. பிரிந்த பிறகு சந்து பொந்துகளில் புகுந்து தங்களுடைய மாளிகை மதில் சுவரைச் சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் சுவர்மேல் வைத்த ஏணியைப் பார்த்ததும் தாங்கள் தான் இந்த ஏழையை நினைவுகூர்ந்து இந்த ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்று எண்ணிவிட்டேன். அது தவறு என்று தெரிந்து கொண்டேன். மன்னிக்க வேண்டும்."

"மன்னிப்பதற்கு அவசியம் ஒன்றும்



ஏற்படவில்லையே!''

"அது எப்படி, அம்மணி!"

"நீ நினைத்தது அவ்வளவாகத் தவறும் இல்லை. மந்திரவாதியை எதற்காக நான் தருவிக்க நினைத்தேன், தெரியுமா?"

"தெரியவில்லை, அம்மணி! எனக்கு மந்திரமும் தெரியாது; ஜோசியமும் தெரியாது!"

"உன்னை நேற்றுக் காலையில் பார்த்தது முதல் உன்னுடைய ஞாபகமாகவே இருந்தது. நீ ஏன் இன்னும் என்னைப் பார்க்க வரவில்லையென்று தெரிந்து கொள்ள விரும்பினேன். அதற்காகவே தான் நான் மந்திரவாதியைக் கூப்பிட்டனுப்பினேன்."

"மிக்க ஆச்சரியமாயிருக்கிறது."

"எது?"

"இப்போது நீங்கள் சொன்னதுதான். நேற்று உங்களைப் பார்த்தது முதல் எனக்கு உங்கள் ஞாபகமாகவேயிருந்தது!"

"பூர்வ ஜன்ம வாசனையில் உனக்கு நம்பிக்கை உண்டா?"

"அப்படியென்றால்?"

"பூர்வ ஜன்மத்தில் இரண்டு பேருக்கு நட்போ, உறவோ இருந்தால், இந்த ஜன்மத்திலும் அத்தகைய சொந்தம் ஏற்படும் என்கிறார்களே, அதைத்தான் சொல்லுகிறேன்."

"நேற்று வரையில் எனக்கு அந்த நம்பிக்கை இல்லை. நேற்றுத் தான் அதில் நம்பிக்கை பிறந்தது."

இவ்விதம் வந்தியத்தேவன் கூறிய போது வெளிப்படையாகப் பொய் சொன்னான் என்றாலும், மனத்திற்குள் குடந்தை சோதிடர் வீட்டில் பார்த்த பெண்ணை நினைத்துக் கொண்டுதான் சொன்னான். ஆனால் நந்தினிக்கு அதைப் பற்றிய விவரமே தெரிய இடமில்லை யல்லவா? தன்னைப் பற்றிச் சொல்வதாகவே நினைத்துக் கொண்டாள்.

"ஆனால் அதற்காக நீ என்னைப் பார்க்க வரவில்லையே? ஏதோ ஆழ்வார்க்கடியார் நம்பி என்பவர் செய்தி சொல்லி அனுப்பியதாக..."

"ஆம், அம்மணி! அவர் சொல்லி அனுப்பிய செய்தியைத் தங்களிடம் சொல்வதற்காகவே முதலில் தங்களைப் பார்க்க விரும்பினேன். தங்களை ஒருமுறை பார்த்த பிறகு, பழைய காரணமெல்லாம் மறந்து போய்விட்டது."

"ஆழ்வார்க்கடியாரை நீ எங்கே பார்த்தாய்? என்ன செய்தி சொல்லியனுப்பினார்?"

"வீர நாராயணபுரத்துக்கு அருகில் ஆழ்வார்க்கடியார் நம்பியைச் சந்தித்தேன். அவர் தம் கைத்தடியின் சக்தியைக் கொண்டு விஷ்ணுதான் பெரிய தெய்வம் என்று மெய்ப்பிக்க முயன்றார். அச் சமயத்தில் பெரிய பழுவேட்டரையரின் பரிவாரங்கள் வந்தன. அவரைத் தொடர்ந்து தங்கள் பல்லக்கும் வந்தது. அங்கே என்ன ரகளை என்று பார்ப்பதற்காகவோ என்னவோ, தங்களுடைய ஒரு பொற்கரம் பல்லக்கின் திரையை விலக்கிற்று. அப்போதுதான் தாங்கள் என்று தெரிந்து கொண்டு ஆழ்வார்க்கடியார் தங்களுக்கு ஒரு செய்தி அனுப்ப விரும்பினார். நானும் அன்றிரவு கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் தங்கியபடியால் என்னிடம் செய்தி சொல்லி அனுப்பினார். ஆனால் கடம்பூரில் தங்களை நான் பார்க்க முடியவில்லை. தஞ்சாவூர்க் கோட்டைக்கருகில் சாலையில்தான் சந்திக்க முடிந்தது. அதுவும் தங்கள் பல்லக்கு என் குதிரைமேல் மோதியதினால் தான்!"

இவ்விதம் வந்தியத்தேவன் சொல்லி வந்தபோது நந்தினி மேலே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தாள். ஆகையால் அவளுடைய முக பாவத்திலிருந்து ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியில் வந்தியத்தேவன் சொன்னதைக் கேட்டதும், அவனைத் திரும்பிப் பார்த்து ஒரு மோகனப் புன்னகை புரிந்தாள். "ஆமாம்; நான் ஏறும் பல்லக்கு வெகு பொல்லாத பல்லக்குதான்!" என்றாள்.

மந்திரவாதி

தூரத்தில் பேரிகைகளின் பெரு முழக்கம் கேட்டது. எக்காளங்கள் சப்தித்தன. மனிதர்களின் குரல்கள் ஜயகோஷம் செய்தன. கோட்டைக் கதவுகள் திறந்து மூடிக் கொள்ளும் சத்தமும், யானைகள் குதிரைகளின் காலடிச் சத்தமும் எழுந்தன.

நந்தினியின் கவனத்தை அந்தச் சத்தங்கள் கவர்ந்தன என்பதை வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். காவல் புரிந்த தாதிப்பெண் திடுக்கிட்டு எழுந்து சற்று அருகில் வந்து, "அம்மா! எஜமான் வந்து விட்டார் போலிருக்கிறது'' என்றாள்.

நந்தினி, "எனக்குத் தெரியும்; நீ உன் இடத்துக்குப் போ!'' என்றாள்.

பிறகு வந்தியத்தேவனைப் பார்த்து, "தனாதிகாரி கோட்டையில் பிரவேசிக்கிறார். சக்கரவர்த்தியின் க்ஷேமத்தை விசாரித்து விட்டு, கோட்டைத் தளபதியைப் பார்த்துப் பேசிவிட்டு இங்கே வருவார். வருவதற்குள் நீ போய்விட வேண்டும். ஆழ்வார்க்கடியார் கூறிய செய்தி என்ன?" என்று வினவினாள்.

"அம்மணி! அந்த வீர வைஷ்ணவ சிகாமணி தங்களை அவருடைய சகோதரி என்று சொல்லிக் கொண்டார்; அது உண்மைதானா?" என்று வல்லவரையன் கேட்டான்.

"அதைப் பற்றி நீ ஏன் சந்தேகப்படுகிறாய்?"

"பச்சைக் கிளியும் கடுவன் குரங்கும் ஒரு தாயின் குழந்தைகள் என்றால் எளிதில் நம்ப முடியுமா?"

நந்தினி சிரித்துவிட்டு, "ஒருவிதத்தில் அவர் சொன்னது உண்மைதான். நாங்கள் ஒரே வீட்டில், ஒரே குடும்பத்தில் வளர்ந்தோம். உடன்பிறந்த தங்கையைப் போலவே என்னிடம் பிரியம் வைத்திருந்தார். பாவம்! அவருக்குப் பெரும் ஏமாற்றம் அளித்து விட்டேன்!"

"அப்படியானால் சரி! ஆழ்வார்க்கடியார் தங்களுக்குச் சொல்லி அனுப்பிய செய்தி கிருஷ்ணபகவான் தங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் என்பதுதான். தாங்கள் கண்ணனை மணந்து கொள்ளும் கலியாணக் காட்சியைப் பார்க்க வீர வைஷ்ணவ பக்தகோடிகளும் காத்துக் கொண்டிருக்கிறார்களா!"

நந்தினி ஒரு பெருமூச்சு விட்டாள். "ஆகா! இன்னும் அவருக்கு அந்தச் சபலம் நீங்கவில்லை போலிருக்கிறது! நீ அவரைப் பார்த்தால் எனக்காக இதைச் சொல்லி விடு. என்னை அடியோடு மறந்து விடச் சொல்லு! ஆண்டாளைப் போல் பரம பக்தையாகக் கொஞ்சமும் தகுதியற்றவள் நான் என்று சொல்லு!"


"நான் அதை ஒப்புக் கொள்ளவில்லை, அம்மா!"

''என்னத்தை ஒப்புக் கொள்ளவில்லை?"

"தாங்கள் ஆண்டாள் ஆக முடியாது என்பதைத்தான் ஒப்புக் கொள்ளவில்லை. ஆண்டாள் பக்திசெய்து, பாட்டுப் பாடி, அழுது கண்ணீர் விட்டு, பூமாலை தொடுத்துச் சூட்டி, - இப்படியெல்லாம் செய்து கண்ணனை மணந்து கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் தங்களுக்கு அத்தகைய கஷ்டமே தேவையில்லை. தங்களைக் கிருஷ்ணபகவான் பார்த்துவிட வேண்டியதுதான். ருக்மிணி, சத்தியபாமாவையும், ராதையையும், கோபிகாஸ்திரீகளையும் உடனே கைவிட்டு அவர்கள் வீற்றிருந்த சிம்மாசனத்தில் தங்களை ஏற்றி உட்கார வைத்து விடுவார்!"

''ஐயா! நீர் முகஸ்துதி செய்வதில் சமர்த்தராயிருக்கிறீர்! அது எனக்குப் பிடிப்பதேயில்லை."

''அம்மணி! முகஸ்துதி என்றால் என்னவோ?"



''முகத்துக்கு நேரே ஒருவரைப் புகழ்வதுதான்.''

''அப்படியானால் சற்றே நீங்கள் திரும்பி முதுகைக் காட்டிக் கொண்டு உட்காருங்கள்...''

"எதற்காக?"

"முகத்தைப்

பார்க்காமல் முதுகைப் பார்த்துக் கொண்டு புகழ்ச்சி கூறுவதற்காகத்தான். அதில் ஒன்றும் தவறு இல்லையல்லவா?"

''நீர் பேச்சில் மிக கெட்டிக்காரராயிருக்கிறீர்.''

''இப்போது தாங்கள் அல்லவா முகஸ்துதி செய்கிறீர்கள்?"

''நீரும் உமது முகத்தைத் திருப்பிக் கொண்டு, முதுகைக் காட்டுவதுதானே?"

"மகாராணி! போர்க்களத்திலாகட்டும், பெண்மணிகளிடமாகட்டும், நான் முதுகு காட்டுவது எப்போதும் கிடையாது. தாங்கள் தாராளமாய் என்னை முகஸ்துதி செய்யலாம்!''

இதைக் கேட்டு விட்டு நந்தினி 'கலீர்' என்று சிரித்தாள்!

''நீர் மந்திரவாதிதான்; சந்தேகமில்லை. நான் இம்மாதிரி வாய்விட்டுச் சிரித்து வெகு காலம் ஆயிற்று!'' என்று சொன்னாள்.

'' ஆனால், அம்மணி! தங்களைச்



சிரிக்கப் பண்ணுவது வெகு அபாயம்! தடாகத்தில் தாமரை சிரித்து மகிழ்ந்தது; தேன் வண்டு மயங்கி விழுந்தது!'' என்றான் வந்தியத்தேவன்.

"நீர் மந்திரவாதி மட்டுமல்ல; கவியும் போலிருக்கிறதே!"

"நான் முகஸ்துதிக்கும் அஞ்சமாட்டேன்; வசவுக்கும் கலங்க மாட்டேன்."

"உம்மை யார் வைதது?"

"சற்றுமுன் என்னைக் 'கவி' என்றீர்களே?"

"அப்படியென்றால்?"

"நான் சிறுவனாயிருந்தபோது என்னைச் சிலர் 'குரங்கு மூஞ்சி!' என்று சொல்வதுண்டு. வெகு நாளைக்குப் பிறகு இன்றைக்குத்தான் தங்களுடைய பவளச் செவ்வாயினால் அதைக் கேட்டேன்."

"உம்மையா குரங்கு மூஞ்சி என்றார்கள்? யார் அப்படிப்பட்ட புத்திசாலிகள்?"

"அவர்களில் யாரும் இப்போது உயிரோடில்லை."

"உம்மை நான் அவ்விதம் சொல்லவில்லை. கவிபாடக் கூடியவர் போலிருக்கிறதே என்று சொன்னேன்."

"கொஞ்சம் கவியும் பாடுவேன். ஆனால் பகைவர்களுக்கு முன்னால்தான் பாடுவேன். வில்லம்பினால் சாகாதவர்கள், சொல்லம்பினால் சாகட்டும் என்று!"

"ஐயா, கவிராஜ வீரசிங்கமே! உம்முடைய பெயர் என்னவென்று இன்னமும் சொல்லவில்லையே!"

"என் சொந்தப் பெயர் வந்தியத்தேவன்; பட்டப் பெயர் வல்லவரையன்."

"அரசர் குலத்தினரா?"

"பழைய புகழ் பெற்ற வாணாதி ராஜர் குலத்தில் வந்தவன்!"

"இப்போது உங்கள் ராஜ்யம்?"

"மேலே ஆகாசம்! கீழே பூமி; இப்போது நான் சகல பூமண்டலத்துக்கும் ஏக சக்ராதிபதி!"

நந்தினி சிறிது நேரம் வல்லவரையனை ஏறத்தாழப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அப்படி ஒன்றும் நடக்காத காரியம் இல்லை. உம்முடைய பூர்வீக ராஜ்யத்தை நீர் திரும்பவும் பெறலாம்."

"அது எப்படி சாத்தியம்? புலியின் வயிற்றுக்குள்ளே போனது திரும்பவும் வருமா? சோழ சாம்ராஜ்யத்தில் சேர்ந்த அரசு திரும்பக் கிடைக்குமா?"

"கிடைக்கும்படி செய்ய என்னால் முடியும்."

"அம்மணி! வேண்டாம்! இராஜ்யம் ஆளும் ஆசை எனக்கு எப்போதும் கிடையாது. கொஞ்சம் இருந்ததும் இன்றைக்குச் சுந்தர சோழ சக்கரவர்த்தியைப் பார்த்த பிறகு அடியோடு போய் விட்டது. இம்மாதிரி பிறர் கையை எதிர்பார்த்துச் சக்கரவர்த்தியாயிருப்பதைக் காட்டிலும் மறுநாள் உணவு எங்கே கிடைக்கும் என்று தெரியாத சுதந்திர மனிதனாயிருப்பதே மேல்."

"என்னுடைய கருத்தும் அதுதான்!" என்றாள் நந்தினி. பிறகு ஏதோ மறந்து போன விஷயத்தை ஞாபகப்படுத்திக் கொண்டவள் போல், "சின்னப் பழுவேட்டரையரின் ஆட்கள் உம்மை எதற்காகத் தேடுகிறார்கள்?" என்று கேட்டாள்.

"தங்களுடைய தாதிப் பெண்ணைப் போல் அவருக்கும் என் பேரில் சந்தேகம் உண்டாகி விட்டது."

"என்ன சந்தேகம்?"

"பனை இலச்சினை உள்ள முத்திரை மோதிரம் என்னிடம் எப்படி வந்தது என்று."

நந்தினியின் முகத்தில் பயத்தின் சிறிது சாயல் தென்பட்டது.

"மோதிரம் எங்கே?" என்று இடுக்கிட்ட குரலில் கேட்டாள்.

"இதோ இருக்கிறது, அம்மணி! இலேசில் அதைப் போக்க அடித்து விடுவேனா?" என்று கூறிக் கொண்டே மோதிரத்தை எடுத்துக் காட்டினான்.

"இது உம்மிடம் இருப்பது அவருக்கு எப்படித் தெரிந்தது?" என்று நந்தினி கேட்டாள்.

"சுந்தர சோழ சக்கரவர்த்தியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை என் மனத்தில் நெடுநாளாக இருந்தது. அதற்கு



இந்த முத்திரை மோதிரத்தை உபயோகப் படுத்திக் கொண்டேன். பார்த்து முடிந்த பிறகு இந்த மோதிரம் என்னிடம் எப்படி வந்தது என்று கோட்டைத் தளபதி கேட்டார்....''

"நீர் என்ன சொன்னீர்!" என்று நந்தினி வினாவிய குரலில் திகில் தொனித்தது.

"தங்கள் பெயரைச் சொல்லவில்லை, அம்மணி! பெரிய பழுவேட்டரையர் கொடுத்தார் என்று சொன்னேன்.... கடம்பூர் மாளிகையில் கொடுத்தார் என்றும் சொன்னேன்..."

நந்தினி பெருமூச்சு விட்டாள்.

அவள் முகத்திலும் குரலிலும் இருந்த திகில் நீங்கியது.

"நீர் சொன்னதை அவர் நம்பினாரா?" என்று கேட்டாள்.

"முழுதும் நம்பியதாகத் தெரியவில்லை. அதனால்தானே என்னைப் பின் தொடரும்படி ஆட்களை விட்டிருக்க வேண்டும்? தமையனார் திரும்பி வந்ததும் என்னை அவர் முன்னால் நிறுத்தி உண்மையை அறிய எண்ணியிருக்கலாம்!'' என்றான் வந்தியத்தேவன்.

நந்தினி புன்னகை புரிந்து, "பெரிய பழுவேட்டரையரிடம் நீர் பயப்பட வேண்டாம். அவர் உம்மைக் கடித்துத் தின்றுவிடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள்.

"அம்மணி! தனாதிகாரியின் பேரில் தங்களுடைய செல்வாக்கு எவ்வளவு என்பது உலகம் அறிந்த செய்தி. ஆனால் எனக்கு வெளியில் அவசர காரியம் இருக்கிறது. ஆகையினால்தான் தப்பிச் செல்லத் தங்கள் உதவியைக் கோருகிறேன்."

"அப்படி என்ன அவசர வேலை இருக்கிறது?"

"எத்தனையோ இருக்கிறது. உதாரணமாக ஆழ்வார்க்கடியாரைப் பார்த்துத் தங்கள் மறுமொழியைச் சொல்ல வேண்டும். அவருக்கு என்ன சொல்லட்டும்?"

"அவருக்கு 'நந்தினி என்று ஒரு சகோதரி இருந்தாள்' என்பதை அடியோடு மறந்து விடும்படி சொல்லும்!"

"சொல்லி விடலாம்; ஆனால் நடக்கிற காரியமில்லை."

"எது?"

"தங்களை மறப்பதுதான். இரண்டு தடவை தற்செயலாகப் பார்த்த என்னாலேயே தங்களை மறக்க முடியாது போலிருக்கிறதே! வாழ்நாளெல்லாம் தங்களோடு இருந்தவரால் எப்படி மறக்க முடியும்?"

நந்தினியின் முகத்தில் வெற்றிப் பெருமிதத்தின் சாயல் பரிணமித்தது. அவளுடைய வேல்விழிகள் வந்தியத்தேவனுடைய நெஞ்சை ஊடுருவின போல் நோக்கின.

"சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்கு நீர் ஏன் அவ்வளவு ஆவல் கொண்டிருந்தீர்?" என்று கேட்டாள்.

"உலகப் பிரசித்தி பெற்ற அந்தச் சுந்தர புருஷரைப் பார்க்க நான் விரும்பியதில் வியப்பு என்ன? உலகத்தில் வீர மன்னர்கள் தங்கள் வீரமும் பௌருஷமும் பெருக வேண்டும் என்றும், இராஜ்யமும் கீர்த்தியும் விஸ்தரிக்க வேண்டும் என்றும் விரும்புவார்கள். அவ்விதமே பிரஜைகளைப் பிரார்த்தனை செய்யும்படியும் சொல்வார்கள். ஆனால் நம்முடைய சக்கரவர்த்தியைப் பற்றிப் புத்த பிக்ஷுக்களின் மடங்களில் என்ன பிரார்த்தனை செய்கிறார்கள்?

"...............................சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையும் உலகிற் சிறந்து
வாழ்கெனவே"

என்று பிரார்த்தனை செலுத்துகிறார்கள். இத்தகைய கலியுக மன்மதனைப் பார்க்க வேண்டும் என்று எனக்கு வெகு நாளாக ஆசையாயிருந்தது...."

"ஆமாம்; சக்கரவர்த்திக்குத் தம்முடைய அழகைப் பற்றி ரொம்பப் பெருமைதான். அவருடைய செல்வக் குமாரிக்கு அதைவிட அதிக கர்வம்...."

"குமாரியா? யாரைச் சொல்லுகிறீர்கள்?"

"பழையாறையிலே இருக்கிறாளே, ஒரு அகம்பாவம் பிடித்த கர்வி, - அந்த இளையபிராட்டி குந்தவை தேவியைத்தான் சொல்லுகிறேன்."

வந்தியத்தேவா! நீ அதிர்ஷ்டக்காரன். நீ தேடிக் கொண்டிருந்த உபாயம் இதோ உன் முன்னால் தானே வந்து நிற்கிறது! அதை நன்கு உபயோகப்படுத்திக் கொள்! - இவ்வாறு வல்லவரையன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

இத்தனை நேரமும் ஒய்யாரமாகப் படுக்கையில் சாய்ந்து படுத்திருந்த நந்தினி திடீரென்று எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"ஐயா! நான் ஒன்று சொல்கிறேன். அதை ஒப்புக் கொள்வீரா?" என்று கேட்டாள்.

"சொல்லுங்கள், அம்மணி!"

"நீரும் நானும் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளலாம். நீர் எனக்கு உதவி செய்ய வேண்டியது; நான் உமக்கு உதவி செய்ய வேண்டியது; என்ன சொல்கிறீர்!"

"அம்மணி! தாங்கள் சோழ மகாராஜ்யத்தில் சர்வ சக்திவாய்ந்த தனாதிகாரியின் ராணி. நினைத்ததை நினைத்தபடி சாதிக்கக்கூடிய சக்தி வாய்ந்தவர். நானோ ஒருவிதச் செல்வாக்கும் இல்லாதவன். தங்களுக்கு நான் என்ன விதத்தில் உதவி செய்ய முடியும்?" என்றான்.

அவன் உள்ளத்திலிருந்து பேசுகிறானா, உதட்டிலிருந்து பேசுகிறானா என்று தெரிந்து கொள்ள விரும்பிய நந்தினி தன் கூரிய விழிகளை அவன்மீது செலுத்தினாள்.

வந்தியத்தேவன் அதற்குச் சிறிதும் கலங்காமல் நின்றான்.

"எனக்கு அந்தரங்கமான பணி ஆள் ஒருவர் தேவையாயிருக்கிறது. இந்த அரண்மனையில் உமக்கு வேலை வாங்கிக் கொடுத்தால், ஒப்புக் கொள்வீரா?" என்று கேட்டாள்.

"இதே மாதிரி சேவையை இன்னொரு மாதரசிக்குச் செய்வதாக ஏற்கெனவே ஒப்புக் கொண்டு விட்டேன். அவள் வேண்டாமென்று நிராகரித்தால், தங்களிடம் வருகிறேன்."

"அது யார் அவள், என்னோடு போட்டிக்கு வருகிறவள்?"

"சற்று முன் முகப் பிரியத்தோடு பேசினீர்களே, அந்த இளையபிராட்டி குந்தவை தேவிதான்."

"பொய்! பொய்! அப்படி ஒருநாளும் இருக்க முடியாது! என்னை வேடிக்கை செய்யப் பார்க்கிறீர்...!"

"மகாராணி! இந்த ஓலையை ஏற்கெனவே பலர் திருடிப் பார்த்து விட்டார்கள். ஆகையால் தாங்களும் இதைப்

"பார்ப்பதினால் மோசம் ஒன்றும் வந்து விடாது!" என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் ஆதித்த கரிகாலர் குந்தவைக்குக் கொடுத்த ஓலையை எடுத்து நீட்டினான்.

நந்தினி ஓலையை விளக்கினடியில் பிடித்துக் கொண்டு படித்தாள். படித்து முடித்தபோது அவளுடைய கண்களிலிருந்து கிளம்பிய மின்னல் ஜுவாலை நாக சர்ப்பத்தின் வாயிலிருந்து வெளிவந்து மறையும் அதன் பிளவுபட்ட நாவை வந்தியத்தேவனுக்கு நினைவூட்டியது. அவனையறியாமல் அவன் உடம்பு நடுங்கியது.

நந்தினி கம்பீர பாவத்துடன் வந்தியத்தேவனைப் பார்த்து, "ஐயா! நீர் இந்தக் கோட்டையிலிருந்து உயிரோடு தப்பிச் செல்ல எண்ணுகிறீர் அல்லவா?" என்று கேட்டாள்.

"ஆம். அம்மா! அதற்குத்தான் தங்கள் உதவியை நாடி வந்தேன்."

"ஒரு நிபந்தனையின் பேரில்தான் உம்மைத் தப்பித்து விட நான் உதவி செய்யலாகும்."

"நிபந்தனையைச் சொல்லுங்கள்!"

"இந்த ஓலைக்குக் குந்தவை என்ன மறு ஓலை கொடுக்கிறாளோ, அதை மறுபடியும் என்னிடம் கொண்டு வந்து காட்ட வேண்டும், சம்மதமா?"

"மிக அபாயமான நிபந்தனை போடுகிறீர்கள்!"

"அபாயத்துக்கு அஞ்சாதவர் என்று சற்று முன்னால் பெருமை அடித்துக் கொண்டீரே?"

"அபாயத்துக்குத் துணிவது என்றால் அதற்குத் தகுந்த பரிசு கிட்டவேண்டும் அல்லவா?....."

"பரிசா? பரிசா வேண்டும்? நீர் கனவிலும் அடையக் கருதாத பரிசு உமக்குக் கிடைக்கும். சோழ சாம்ராஜ்யத்தில் இன்று சர்வ சக்தி வாய்ந்தவராய் விளங்கும் பெரிய பழுவேட்டரையர் எந்தப் பரிசுக்காக வருஷக் கணக்காகத் தவம் கிடக்கிறாரோ அத்தகைய பரிசு உமக்குக் கிடைக்கும்!" என்று கூறி நந்தினி வந்தியத்தேவன் பேரில் மறுபடியும் மோகனாஸ்திரத்தைத் தூவினாள்.



பாவம்! வல்லவரையனுடைய தலை சுழன்றது. நெஞ்சே! தைரியத்தைக் கடைப் பிடி! அறிவை இழந்து விடாதே! என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அச்சமயம் அவனுக்குத் துணை செய்ய வந்ததைப் போல் அருகிலுள்ள தோட்டத்திலிருந்து ஆந்தையின் கடூரமான குரல் கேட்டது.

ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவை கேட்டது.

வந்தியத்தேவனுடைய உடம்பு சிலிர்த்தது.

நந்தினி தோட்டத்தில் ஆந்தைக் குரல் வந்த இடத்தை நோக்கி, "நிஜ மந்திரவாதியே வந்து விட்டான்!" என்றாள்.

பிறகு வந்தியத்தேவனைப் பார்த்து, "அவன் எனக்கு இனித் தேவையில்லை. ஆனாலும் இரண்டு வார்த்தை அவனிடம் சொல்லி அனுப்புகிறேன். ஒரு வேளை, உம்மைத் தப்பித்து விடுவதற்கும் அவன் உபயோகமாயிருக்கலாம். சற்று நேரம் நீர் அதோ அந்தப் பக்கம் போய் இருட்டில் மறைந்து நில்லும்!" என்று முன்னம் அவளுடைய தாதிப் பெண் போன திசைக்கு நேர் எதிர்த் திசையைக் காட்டினாள்.

(தொடரும்)



கல்கி கலெக்ஷன்

"ஒரு காலத்தில் நாளொன்றுக்குப் பத்துப் பாடல்கள் ஒலிப்பதிவு செய்து வந்தேன்... இப்போதெல்லாம் மாதத்தில் ஓரிரு பாடல்களே பாடுகிறேன்... இசை என்பது இறைவனின் மொழி.... இன்றைக்கு சினிமா இசையும் பாடல் வரிகளும் அருவருப்பூட்டுகின்றன.... ...இந்த நிலை மாற ஏதாவது செய்தே ஆக வேண்டும்."

- 10.4.98 தேதியிட்ட ஹிந்து நாளிதழில் லதா மங்கேஷ்கர்

"சங்கீதம்

டப்பா சங்கீதத்தைப் பற்றி மேலும் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. சில நேயர்கள் அதைக் கொன்று குழியை வெட்டி மூடிவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். வேறு சிலர் அதைத் தலையில் வைத்துக் கொண்டு கூத்தாட வேண்டுமென்கிறார்கள்.

இதற்கிடையில், விவாதத்தின் ஓர் அம்சத்தைப் பற்றி ஸ்ரீமதி லதாமங்கேஷ்கர் அவர்களின் அபிப்பிராயம் வெளியாகியிருக்கிறது. சென்னையில் பிரசுரமாகும் "Sport and Pastime" என்னும் ஆங்கில வாரப் பத்திரிகையின் விசேஷ நிருபர் ஸ்ரீமதி லதா மங்கேஷைப் பேட்டி கண்டு அவர் கூறிய சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். "மங்கேஷ் கீதம்" என்று இப்பத்திரிகையில் குறிப்பிட்டதை வைத்துக் கொண்டே பேட்டியின் விவரத்தை அந்த நிருபர் தொடங்குகிறார்.

நமது முதல் கட்டுரையில் நாம் எழுதியிருந்ததாவது : "ஸினிமா முதலாளிகளிடம் வேறு உயர்தரமான காரியம் எதையும் நாம் எதிர்பார்க்க முடியாது. 'பணமே தெய்வம்' 'பாக்ஸ் ஆபீஸே கோயில்' என்ற மனப்பான்மையுடன் அவர்கள் படம் எடுக்கிறார்கள். அந்த நோக்கத்துக்காக எதை வேண்டுமானாலும் செய்வார்கள்...."

ஸ்ரீமதி லதா மங்கேஷ்கர் மேற்படி வாரப் பத்திரிகை நிருபரிடம் கூறியதை இப்போது கேளுங்கள். "ஸினிமா சங்கீத டைரக்டர்கள் சொல்லிக் கொடுக்கிறபடி நான் பாடுகிறேன்" என்று கூறிவிட்டு, ஸ்ரீமதி லதா மேலும் சொல்லியிருப்பதாவது :-

"பம்பாயில் ஸினிமாத் தொழிலில் மிக முக்கியமாகக் கருதப்படுவது சங்கீதம் தான்; ஏனெனில் சங்கீதம் பணம் பண்ணுகிறது. பெரும்பாலான ஸினிமா முதலாளிகள் என்னுடைய சங்கீதம் தங்கள் படங்களில் இருந்தால் அவை நிறையப் பணம் சம்பாதிக்கும் என்று நம்புகிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், படத்தின் இதர அம்சங்கள், - கதை நடிப்பு முதலியவை - அவ்வளவு முக்கியமல்ல!"

ஸ்ரீமதி லதா மங்கேஷ் கூறியவற்றில் மேற்கூறியதுதான் முக்கியமானது என்று நிருபர் கருதியிருக்கிறார். ஆகையினால் கட்டுரைக்கே "சங்கீதம் பணம் பண்ணுகிறது!" (Music Makes Money) என்ற தலைப்புக் கொடுத்திருக்கிறார். இந்தத் தலைப்பைத் திருப்பிப் போட்டாலும் பொருத்தமாக இருக்குமென்று நாம் கருதுகிறோம். அதாவது "பணம் சங்கீதத்தைப் பண்ணுகிறது!" (Money makes music) என்று கூறினால் உண்மைக்கு மாறாக இராது. உண்மையுடன் இன்னும் நன்றாகப் பொருந்த வேண்டுமானால், "பணம் சங்கீதத்தைக் கொலை பண்ணுகிறது!" என்றும் தலைப்புப் போடலாம்.

இந்த இடத்தில் ஒரு விஷயத்தை நேயர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம். ஸ்ரீமதி லதா மங்கேஷ்கரின் குரல்

அமரர் கல்கி



இனிமையைப் பற்றி நமது நேயர்களில் சிலர் பரவசமாகக் கூறுவதை நாமும் ஒத்துக் கொள்கிறோம்.

ஆனால் லதாவின குரல் இனிமை தானா அவருடைய பாட்டுக்களின் பிரபலத்துக்குக் காரணம்? அப்படியா னால், அவர் தமது இனிய குரலில் உயர்தர ஹிந்துஸ்தானி சங்கீதத்தையே பாடலாமே? அப்படிச் செய்தால் ஸ்ரீ ஸைகால், ஸ்ரீமதி சாந்தா ஆப்தே, ஸ்ரீமதி கேஸர் பாய் முதலியவர் களின் ஹிந்துஸ்தானி இசையை நாம் ரஸித்துப் பாராட்டுவது போல் அவருடைய சங்கீதத்தையும் பாராட்டலாமே?

இல்லை; மங்கேஷ் கீதத்தின் கவர்ச்சிக்குக் காரணம், லதா மங் கேஷ்கரின் குரல் இனிமை அன்று. அதற்குக் காரணம், அவர் பாடும் 'பஞ்சாபி டியூன்' என்று சொல்லப் படும் டப்பா மெட்டுக்கள்தான். அதனாலேயே அந்த மெட்டுக்களில் மற்ற பாஷை ஸினிமா முதலாளிகளும் பாட்டுப் போடுகிறார்கள். ஹிந்தி வார்த் தைகளை எடுத்து விட்டுத் தமிழ், தெலுங்கு அல்லது மலையாள வார்த்தை களைத் திணித்து விடுகிறார்கள். அவற் றைச் சுமாரான குரலுடையவர்கள் பாடு கிறார்கள்; ஆனால் அவையும் பிரபலம் அடைகின்றன!

ஒரே நாளில் ஒரே வானொலி நிலை யத்தில் ஹிந்தி, தமிழ், தெலுங்கு பாஷை களில் லதா மங்கேஷ் மெட்டுக்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

ஆதலின், அப் பாடல்களின் வசீகர சக்தி குரலில் இல்லை, மெட்டிலே தான் இருக்கிறது என்று ஏற்படுகிறது அல் லவா!

பணம் பண்ணுகிறது!’’

பல ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் ஸ்ரீநடராஜ ஆச்சாரி என்று ஒரு பிரபல நடிகர் இருந்தார். நாடக மேடைகளில் சதாரம் என்னும் நாடகத்தில் அவர் திருடன் வேஷம் போட்டுக் கொண்டு வருவார். அந்த வேஷத்தில் அவருக்கு இணையான நடிகர் யாரும் இல்லை. ஒருவிதமான கில்லாடிப் பாட்டுக்களைப் பாடுவார். ‘‘நட ராஜாச்சாரி டப்பா குத்துதல்’’ என்று அதைப் பற்றிச் சொல்லுவார்கள்.

திருடன் மேடையில் வந்து ஆடிப் பாடிக் கூத்தடிப்பதற்குத் தகுந்தவாறு தாளமே பிரதானமாக அந்தப் பாட்டுக் கள் அமைந்திருக்கும். மேடையில் திரு

டன் பாடிக் கொண்டு குதிக்கும் போது சபையிலே பலர் வாயினாலும் கையினாலும் தாளம் போட்டுத் தங்கள் உற்சாகத்தை வெளியிடுவார்கள்.

இப்படியெல்லாம் சிலர் உற்சாகப் பட்டபோதிலும், அந்த மெட்டுக்களைச் சங்கீதம் என்று ஒப்புக் கொண்டு யாரும் பாராட்டுவதில்லை. "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" என்பதையொட்டிப் பார்க்கும்போது, தமிழ் உலகம் மேற்படி டப்பா மெட்டை ஒப்புக் கொள்ளவில்லையென்றும் சொல்லலாம். ஒப்புக் கொண்டிருந்தால், கர்நாடக சங்கீதம் அப்போதே சமாதியில் வைக்கப்பட்டிருக்கும்.

பல வருஷங்களுக்குப் பிறகு அதே டப்பா சங்கீதம் வெவ்வேறு வடிவங்களில் இப்போது நம் புனிதத் தமிழ்நாட்டில் வியாபித்து வருகிறது. இந்தத் தடவை அது பின்னணி சங்கீதம் எனப்படும் மேனாட்டுக் கபந்தப் பிண்டத்தின் துணையையும் தேடிக் கொண்டு வந்திருக்கிறது.

ஸினிமா சங்கீதம் பற்றி வடநாட்டுப் பிரபல சினிமா நட்சத்திரம் ஒருவரின் அபிப்ராயத்தைக் கொஞ்சம் கேட்டு வையுங்கள். ஸ்ரீமதி சாந்தா ஆப்தே தமிழ்நாட்டு ஸினிமா ரஸிகர்களுக்குப் புதியவர் அல்ல. இருபது ஹிந்திப் படங்களிலும் ஏழு மராத்திப் படங்களிலும் நடித்துப் புகழின் சிகரத்தை அடைந்தவர். அவரையும் மேற்படி 'ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம்' பத்திரிகையின் பம்பாய் நிருபர் பேட்டி கண்டு அதன் விவரம் 18.8.51 இதழில் வெளியாகியிருக்கிறது. ஸ்ரீமதி சாந்தா ஆப்தே சொல்லுகிறார் :

"சமீப காலத்தில் ஸினிமா சங்கீதம் வெறும் ஆபாசக் குப்பையாகி வருகிறது. அதில் 'இந்திய சங்கீதம்' என்று சொல்லக்கூடிய அம்சம் ஒன்றுமில்லை. நம்முடைய சங்கீதக் கலை தற்சமயம் இவ்வளவு கேவலமான நிலைக்கு வந்திருக்கிறது என்றால், அதற்கு ஒரே காரணம், அயல்நாட்டுக் கலப்பட சங்கீதத்தை நமது படங்களில் புகுத்தியிருப்பதுதான்...."

நமது முதல் கட்டுரையில் ஒரு பகுதியை மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறோம் :-

"இப்போது வருகிற ஹிந்தி ஸினிமா கீதங்களும் அவற்றைக் காப்பி அடித்து வெளிவரும் தமிழ், தெலுங்கு ஸினிமா கீதங்களும் ஹிந்துஸ்தானி சங்கீதத்தைச் சேர்ந்தவையல்ல. ஸ்பானிஷ் சங்கீதம், மெக்ஸிகோ சங்கீதம், எஸ்கிமோ சங்கீதம், ஹவாய் சங்கீதம் முதலிய பல சங்கீதங்கள் கலந்த பயங்கரமான உருத்தெரியாத கபந்த பிண்டம்!...."

இந்தக் கபந்த பிண்டத்தை ஸினிமா கீதங்களின் பின்னணி சங்கீதத்தில் அதிகமாகப் பார்க்கலாம். பம்பாயில் இப்போதெல்லாம் சங்கீத டைரக்டர்கள் என்ன செய்து வருகிறார்கள் என்பதைப் பற்றி ஒரு நண்பர் தெரிவித்திருக்கிறார். மேனாட்டு இசைத் தட்டுக்களை நூற்றுக் கணக்கில் வாங்கிச் சேர்த்துக் கொள்கிறார்கள். கிராமபோனில் வைத்துக் கேட்கிறார்கள். அங்கே ஒன்றும் இங்கே ஒன்றுமாக எடுத்துக் கலப்படம் செய்து பின்னணி சங்கீதம் அமைக்கிறார்கள். அதே முறையில் பாட்டு மெட்டுக்களையும் அமைப்பதற்கு இப்போது தொடங்கியிருக்கிறார்கள்!

நாம் ஹிந்துஸ்தானி சங்கீதமே கூடாது என்று சொல்லவில்லை. உண்மையான ஹிந்துஸ்தானி சங்கீதம் கர்நாடக சங்கீதத்துக்கு அனுசரணையாக இருந்து அதன் உயர்வைத் தூக்கிக் காட்டுமே தவிர அதை அழித்து விடாது. நம்மவர்களின் ரஸிகத் தன்மையையும் ஒழித்து விடாது. நாம் ஆட்சேபிப்பதும் அஞ்சுவதும் மேனாட்டுக் கலப்பட கபந்த பிண்டமான ஸினிமா சங்கீதத்தைத்தான்.

நமது இளம் நேயர்களை நாம் கேட்டுக் கொள்வதாவது : அடுத்த முறை 'லாரலப்பா' முதலிய பாடல்களைக் கேட்கும் போது, எதையோ நினைத்துத் தாளம் போட்டுக் கொண்டு கேட்காமல் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள். மூன்று நிமிஷத்தில் முதல் இரண்டு வரிகளை எத்தனை தடவை திருப்பித் திருப்பி ஒருவித மாறுதலுமில்லாமல் அவற்றில் பாடியிருக்கிறது என்று கவனியுங்கள். 'டக்கு டக்கு' என்று தாளம் போடக்கூடிய சௌகரியம் ஒன்றைத் தவிர வேறு எந்தவிதமான சங்கீதக் கலையின் உயர்ந்த அம்சமாவது அந்தப் பாடல்களில் இருக்கிறதா என்று கவனித்துப் பாருங்கள்.

(கல்கி, ஆகஸ்ட் 26, 1951)

Mother's Day Special

MAY '98



CARING FOR PETS

WHY IS MAN CLEVER?

Rs. 5/- Only

GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097

"உங்க பிளட் க்ரூப் என்ன? தெரியாதுன்னா உடனே ஒரு பிளட் டெஸ்ட் செய்து அதைத் தெரிஞ்சு வச்சுக்கிறது நல்லது." இப்படி டாக்டர்கள் சொல்கிறார்கள். பல பள்ளிகளில் விண்ணப்பத்திலேயே மாணவனின் ரத்தப் பிரிவு என்ன என்பதையும் குறிப்பிடச் சொல்கிறார்கள்.

ஆனால் முதல் உலகப் போருக்குச் சில வருடங்களுக்கு முன்புகூட பிளட் க்ரூப்பிங் குறித்து மருத்துவ உலகம் தெரிந்து கொள்ளவில்லை. 'ரத்த சேதம் ஏற்படும் ஒருவரது உடலில் இன்னொருவரது ரத்தத்தை ஏற்றும்போது சில சமயம் க்ளிக் ஆகிறது. சிலசமயம் உடல் மேலும் வெகுவேகமாக மோசமடைகிறதே ஏன்?' என்று மண்டையைப் பிய்த்துக் கொண்டார்கள்!

இப்போது மருத்துவர்கள் என்றில்லை,

ரத்தத்தின் ரத்தமான...

உங்களுக்குக் கூடத் தெரியும் ரத்தத்தில் A.B.O என்ற மூன்று வகைப் பிரிவுகள் உண்டு என்பதும், AB என்று ஒரு கூட்டணிப் பிரிவும் உண்டு என்பதும். எதைக் கொண்டு இப்படி ஒரு லேபிளைக் குத்துகிறோம்? பிரிவினை செய்கிறோம்?

எந்த 'எதிரி'யும் (அதாவது அன்னியப் பொருளும்) கலந்து சீரான உடல் இயக்கத்திற்குத் தடை ஏற்படுத்திவிடக் கூடாது என்று கண்காணிக்க நம் உடலில் ஒரு விழிப்புணர்வுப் படையே உண்டு. அதில் முக்கியமானது நம் ரத்தத்தில் உள்ள 'ஆன்டிஜென்' என்ற பொருள். இதில் இரண்டு வகைகள் உண்டு – ஏ, பி என்று. ரத்தத்தில் 'ஏ' வகை ஆன்டிஜென்கள் மட்டுமே இருந்தால் அந்த ரத்தப்பிரிவு 'ஏ' வகையைச் சேர்ந்தது என்கிறோம். 'பி' வகை ஆன்டிஜென்கள் மட்டுமே காணப்படும் ரத்தம் 'பி'வகையைச் சேர்ந்தது. இரண்டு வகை ஆன்டிஜெனும் இருந்தால் அது 'ஏபி' வகை ரத்தம். இரண்டுமே இல்லையென்றால்?.... 'ஓ' பிரிவு ரத்தம் எனப்படுவது அதுதான்.


ரத்தம் தேவைப்படும் ஒருவருக்கு அதே ரத்தப் பிரிவைக் கொண்ட இன்னொருவரின் ரத்தத்தைத்தான் செலுத்த வேண்டும். (ஆனால் ஒரு அவசரத்துக்கு சில அட்ஜஸ்ட்மெண்ட்டுகளை செய்து கொள்ளலாம்.)

'ஏ' வகை ரத்தப் பிரிவு ரத்தம் கொண்டவர்களின் உடலில் 'பி' பிரிவுக்கு எதிரான சில ரசாயனப் பொருள்கள் உண்டு. இதனால் இவர்கள் உடலில் 'பி' பிரிவு ரத்தத்தைக் கலந்தால், புதிதாக வந்து சேரும் 'பி' பிரிவு ஆன்டிஜென்களை எதிரியாக பாவித்து, ரத்தம் அவற்றை ஒரு பக்கமாக ஒதுக்கத் தொடங்கும். இப்படி ஒதுக்கப்படுபவை அங்கங்கே கொத்துக் கொத்தாக, ஒரு திரட்சியாக மாற வாய்ப்பு உண்டு. அப்படி ஆகிறதென்றால் அது ரத்த ஓட்டத்துக்குத் தடை ஏற்படுத்தும். உயிருக்கே ஆபத்து!

இதே நிலையை உல்டாவாக்கி யோசித்தால், 'பி' பிரிவு ரத்தக்காரர்களின் உடலில் 'ஏ' பிரிவு ரத்தத்தைச் சேர்ப்பதும் ஆபத்து என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

'ஏபி' பிரிவு ரத்தம் கொண்டவர்கள் ஒருவகையில் அதிர்ஷ்டசாலிகள். அவர்கள் உடலில் 'ஏ', 'பி' ஆகிய இருவகை ஆன்டிஜென்களும் இருப்பதால், 'ஏ' அல்லது 'பி' வகை ரத்தத்தை அவர்கள் உடலில் ஏற்றினால் எந்தச் சதி வேலையும் நிகழ்வதில்லை, எந்தவகை ஆன்டிஜென்களும் ஒதுக்கப்படுவதில்லை. இதன் காரணமாக 'ஏபி' பிரிவுக்காரர்கள் "யூனிவர்சல் ரிசெப்டார்ஸ்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

'ஓ' பிரிவுக்காரர்கள் பாவம்! இவர்கள் உடலில் ஏ, பி ஆகிய இரண்டு ஆன்டிஜென்களும் இல்லாததால், ஏ, பி, ஏபி ஆகிய



எந்தவகை ரத்தம் உடலில் சேர்க்கப்பட்டாலும் ஆபத்து. எதிரிகள் வந்து சேர்ந்திருப்பதாகக் கருதப்பட்டு உடலில் பல்வேறு இயக்கங்கள் ஏற்பட்டு, பல சிக்கல்களுக்கு வழி வகுக்கும். ஆனால், இவர்களது ரத்தத்தை யார் உடலில் ஏற்றினாலும் சிக்கல் கிடையாது. இதனால்தான் 'ஓ' பிரிவுக்காரார்கள் ''யூனிவர்சல் டோனர்ஸ்'' என்று குறிப்பிடப்படுகிறார்கள்.

பலவித ஏற்றத் தாழ்வுகளை இயற்கையே சமன்படுத்த முயற்சிக்கும் இல்லையா? அந்தவிதத்தில் 'ஓ' பிரிவு ரத்தக்காரர்களிடம் இயற்கை வேறொரு விதத்தில் கருணையோடு நடந்து கொண்டிருக்கிறது. உலகில் பெரும்பான்மையானவர்களை 'ஓ' பிரிவு ரத்தம் கொண்டவர்களாக்கியிருக்கிறது! எனவே எமர்ஜென்ஸி என்றால் அதே பிரிவைச் சேர்ந்தவர்களின் ரத்தம் கிடைப்பது கடினமல்ல.

இன்னொரு விஷயத்தை கவனித்திருப்பீர்கள். இப்படி ஏ, பி, ஏபி, ஓ இவற்றோடு 'பாசிடிவ்' அல்லது 'நெகடிவ்' என்ற வார்த்தையையும் ஒட்ட வைத்துத்தான் ரத்தப் பிரிவைக் குறிப்பிடுகிறோம். இதை "Rh பாசிடிவ்" அல்லது "Rh நெகடிவ்" என்று மருத்துவர்கள் அழைக்கிறார்கள்.

''ஆர்.ஹெச்.'' என்பது ''ரீஸஸ்'' என்கிற குரங்கின் பெயர்ச் சுருக்கம். இந்த வகைக் குரங்கின் ரத்தத்தில் ஒரு குறிப்பிட்ட வகை புரதச் சத்து நிறைய காணப்படுவதால் அந்தப் பெயர். நம்மில் சுமார் 85 சதவீதம் பேரின் ரத்தத்தில் இந்த வகைப் புரதம் காணப்படுகிறது. அதனால் இவர்கள் 'பாசிடிவ்' ரத்த வகையைச் சேர்ந்தவர்கள். மேற்படி புரதம் ரத்தத்தில் இல்லையென்றால் அவர்கள் 'நெகடிவ்' ரத்த வகையைச் சேர்ந்தவர்கள்.

பெண்களின் பிரசவத்தைப் பொருத்தவரை இந்த பாசிடிவ்/நெகடிவ் விஷயத்துக்கு நிறைய முக்கியத்துவம் உண்டு.

Rh - நெகடிவ் ரத்தவகை உள்ள பெண்மணிக்கு Rh - பாசிடிவ் வகை ரத்தம் கொண்ட குழந்தை பிறக்கிறதென்றால் பிரச்னைக்குப் பிள்ளையார் சுழி போடப் பட்டுவிட்டதாக அர்த்தம். கருவிலுள்ள அந்தக் குழந்தையின் ரத்த அணுக்கள் அம்மாவின் உடலுக்குள் கலக்கும்போது அது அவள் உடலில் Rh - பாசிடிவுக்கு எதிரான பொருள்களை (ஆன்டிபாடீஸ்) உருவாக்குகின்றன. நல்லவேளையாக இந்த எதிர்ப்புப் பொருள் உருவாகி, குழந்தையின் உடலுக்குள் புகுவதற்கு முன் பிரசவம் நடந்து விடுகிறது.

சிக்கல் ஏற்பட வாய்ப்பு என்பது அந்தத் தாயின் இரண்டாவது பிரசவத்தின் போதுதான். இந்த இரண்டாவது குழந்தையும் Rh - நெகடிவ் ரத்த வகையைக் கொண்டதாக இருந்தால், அம்மாவின் ரத்தம் (ஏற்கனவே அதில் உள்ள Rh - பாசிடிவ் எதிர்ப்புப் பொருளோடு) கருவுக்குச் செல்லும்போது பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. இதனால்தான் இப்படிப்பட்ட தாயின் இரண்டாவது பிரசவத்தை முடிந்தவரை தள்ளிப் போடச் சொல்லுவார்கள். அப்போது இந்த எதிர்ப்புப் பொருள் தானாக அழிந்து விட வாய்ப்பு உண்டு.

இந்தச் சிக்கலை எதிர்கொள்ளவும் இப்போது மருந்துகள் வந்துவிட்டன.

— ஜி.எஸ்.எஸ்

கன்னட மூலம்: என். டி சோஸா

முன்னாள் முதல்வர்

தமிழில்: ராம்ஜி

தொண்ணூறு வயதைக் கடந்துவிட்ட அந்த முன்னாள் முதலமைச்சருக்குத் தலைநகரில் ஒரு பாராட்டு விழா! செய்தி அறிந்ததும், என்னிடம் ஒரு விதச் சிலிர்ப்பு! எனக்கு இப்போது அறுபது வயது. முன்னாள் தலைமைப் பொறியாளர். என் மகனிடம் சொன்னேன்: "இந்த விழா எங்கு, எப்போது நடக்கிறது...? கொஞ்சம் விசாரித்துச் சொல்..."

ஒரு சமயம் மகன் மறந்து விட்டால்...? மருமகளிடமும் சொல்லி வைத்தேன். இருந்தாலும், இருவரிடமுமே எனக்கு நம்பிக்கை இல்லை. பத்திரிகைகளில் செய்தியை எதிர்பார்க்கலானேன்.

இரண்டு மூன்று மாதங்களாயின. எந்த விவரமும் தெரியவில்லை. விழாவைக் கைவிட்டு விட்டார்களோ...? பயந்து போனேன். சிலருக்கு ஃபோன் செய்து விசாரித்தேன். எவரிடமிருந்தும் சரியான பதில் இல்லை.

"அப்பா, உங்களுக்கு வேறு வேலை இல்லையா? அரசியலில் அந்தக் கிழவர் ஆடாத ஆட்டமா? அவரைக் கௌரவிக்கா விட்டால் ஒன்றும் குடிமுழுகி விடாது. விட்டுத் தள்ளுங்கள்..." மகனிடம் பரிகாசச் சிரிப்பு!

அந்த முன்னாள் முதலமைச்சர் எப்படிப்பட்டவராக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். நான் பொறியாளர் ஆவதற்கு அவர்தான் காரணம். இதை எப்படி என் மகனிடம் கூறுவது...?

அப்போது நான் சின்னப் பையன். அவர் வீட்டில் பல வேலையாட்கள். அதில் என் தந்தையும் ஒருவர். தோட்டத்தில் வேலை. தேங்காய் பறிப்பார். அவற்றை உரித்துப் போடுவார். மரத்தடியைக் கொத்தி, வெட்டிச் சுத்தம் செய்வார். எரு வைத்துப் பராமரிப்பார்.

என் தந்தையுடன் நானும் அவர் வீட்டுக்குப் போவேன். அங்கு நான் ஒரு கூலியின் மகன். சின்னக் கூலியாள். யாரோ உறிஞ்சிவிட்டு எறிந்த தேங்காயை வெட்டி, அப்பா எனக்குத் தருவார். உள்ளே இருக்கும் வழுக்கை எனக்குக் கிடைக்கும். அதே போல், தோட்டத்தின் மூலையில் உள்ள கொய்யா, நாரத்தை, நாவல் போன்றவை என்னைக் கவர்ந்திழுக்கும் பழவகைகள்.

அவர் அப்போது தான் பாரிஸ்டர் ஆகி வந்திருந்தார். செக்கச் செவேல் என்ற நிறம். கொழுமொழு என்றிருப்பார். நன்றாகப் பேசுவார். கதர் வேட்டி, சட்டை மேலே வெய்ஸ்ட்கோட்... இது தான் அவர் உடை. இப்போது அவரிடம் வழுக்கைத் தலை. ஆனால், அப்போது உரோமம் கருகரு என்றிருக்கும்.

ஒரு தடவை, அவர் பார்வை என் மீது படர்ந்தது.

"பசவண்ணா, இந்தப் பையன் யார்?" அவர் என்னை ஓரக் கண்ணால் பார்த்தபடி என் அப்பாவிடம் கேட்டார்.

"என் மகன் முதலாளி..."

"பள்ளிக்கு அனுப்புகிறாயா இல்லை... இவனையும் மரம் ஏறப் பயிற்றுவிக்கிறாயா...?"

அவர் குரலில் ஒருவித ராகம். அதைக் கவனித்த என் அப்பா, "ஹேங்..ஹேங்' என்று பெரிதாகச் சிரித்தார்.

"நாளைக்கு இவனை அழைத்துப் போய், பள்ளியில் சேர்த்து விடு... என்ன? புரிகிறதா?"– முதலாளியின் குரலில் கண்டிப்பு.

அவர் பேச்சால் எனக்குப் பெரும் லாபம். நான் கிராமத்துப் பள்ளிக்குப் போகத் தொடங்கினேன்.

ஒவ்வொரு வகுப்பாகத் தேறினேன்.

அவர் கவனித்துக் கொண்டே இருந்தார். அடிக்கடி அப்பாவிடம், "மகனை மேலே படிக்க வை... படிக்க வை..." என்பார்.

நடுத்தரப் பள்ளியைக் கடந்து, உயர் நிலைப் படிப்பை முடித்த போது, அவர் வக்கிலாகியிருந்தார். அரசியலில் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டார். சட்ட மன்றம் சென்று, பிறகு அமைச்சராகவும் ஆனார்.

என் அப்பாவின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அந்தக் கிராமத்துக்கே அது பெருமதிப்புக்குரிய விஷயம். வீட்டு வேலை யாட்கள் அனைவரும் மகிழ்ச்சியால், இறக்கை முளைத்தது போல் கூத்தாடினர்.

ஒருநாள், அப்பா அவரிடம் என் படிப்பு பற்றிப் பேசிய போது, அவர், "மகனைப் பொறியியல் படிப்புக்கு அனுப்பு. என்ன உதவி தேவையோ சொல்... நான் செய் கிறேன்..." என்றார்.



''ஏண்டி இது சம்மர் சீஸன் தான். இல்லேங்கலை. அதுக்காக இப்படியா சாம்பார்ல தர்பூசணிப் பழத்தைப் போட்டுச் சமைச்சிருப்பே!''
– பா. ஜெயக்குமார்



பிறகு, அவர் தான், என்னைக் கல்லூரியில் சேர்த்தார். கட்டணம் போன்ற அனைத்தையும் அவரே ஏற்றுக் கொண்டார்.

நம் நாடு விடுதலை பெற்றுப் பத்தாண்டுகளே ஆன காலம். எங்கு பார்த்தாலும் அணைகள், சாலைகள், இன்னும் பாலங்கள் எழும்பின. ஐந்தாண்டுத் திட்டங்கள் விரைவாக நிறைவேறின. பரீட்சையில் தேறியதும், அனைவருக்கும் வேலை என்ற நிலை!

ஒருநாள், என் அப்பாவிடம் அவர், 'என்ன? உன் மகன் தேர்வில் வெற்றி பெற்றுவிட்டானா...?''

''ஆம் ஐயா!''

''அவனிடம், வேலைக்கு ஒரு விண்ணப்பம் எழுதி, கொண்டுவந்து கொடுக்கச் சொல்...''

அச்சமயம், அவர் மாநில முதலமைச்சர் ஆகியிருந்தார். வலிமை மிக்க தலைவர் என்ற நற்பெயர். அவரைப் பற்றி எனக்கும் பெருமையாக இருந்தது.

விண்ணப்பத்தைக் கொண்டு போய்க் கொடுத்தேன். நேருஜி, நாட்டை ஒரே மூச்சில் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல நிச்சயித்திருந்தார். அணைகள், மின் நிலையங்கள், மற்றும் தொழிற்சாலைகளை அவர், 'நவீன தேவாலயங்கள்' என்றழைத்தார். அவரது இந்த உரை என் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது. அச்சமயம், ஓர் அணையின் கட்டுமாணப் பிரிவில் என்னை ஒரு இளநிலைப் பொறியாளராக நியமித்து உத்தரவு வந்தது.

எங்கள் மாநிலத்துக்கு வெளியில் கடலில் கலந்து வீணாகும் ஓர் ஆற்றின் குறுக்கே பெரிய அணை ஒன்றைக் கட்ட, அரசு திட்டமிட்டிருந்தது. கூடவே ஒரு மின் உற்பத்தித் திட்டம். அணை, வாய்க்கால்கள், சாலைகள் மற்றும் இதர கட்டடப் பணிகள் சிவில் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. மின் நிலைய உயர் அழுத்தக் கம்பி வழி நிர்மாணம் மின் துறையிடம் விடப்பட்டிருந்தன. சிவிலில் தான் எனக்கு வேலை.

உத்தரவு கிடைத்ததும் முதலமைச்சரைப் போய்ச் சந்தித்தேன். ''நான்... பசவண்ணாவின்...'' என்று முடிப்பதற்குள் அவர், ''ஓ... பொறியாளர் சாரா...? என்ன விஷயம்...?'' என்றார்.

''எனக்கு இளநிலைப் பொறியாளர் நியமனம் கிடைத்துள்ளது.... எல்லாம், தங்கள் உதவி. பார்த்து நன்றி கூறத்தான் வந்தேன்...''

''அதற்கு என்ன அவசியம்...? சரி.. நல்லவிதமாக வேலை செய்... நாட்டுக்குத் தொண்டாற்ற, உனக்கு ஒரு நல்ல வாய்ப்பு... ஒருபோதும், நாட்டையும் அரசாங்கத்தையும் ஏமாற்றாதே! நம்பிக்கை உணர்வோடு செயல்படு... சென்று வா...'' என்ற அவர், என் முதுகில் தட்டிக் கொடுத்தார். நான் மீண்டும் ஒரு தடவை கையெடுத்துக் கும்பிட்டு 'வணக்கம்' கூறிவிட்டு விடைபெற்றேன்.

கலாவதி அணையின் மொத்த நீளம் ஏறத்தாழ ஏழாயிரம் அடி! உயரம் 190 அடி. அடிமட்ட அகலம் 150 அடி! மாபெரும் திட்டம்.

அணையின் மொத்தப் பணியும் பத்து பிரிவுகளாக இயங்கின. அதன் முழு ஒப்பந்தமும் தலை நகரில் வசித்த நாணய்யா என்பவருக்குக் கிடைத்திருந்தது. நான் வேலையில் சேர்ந்த போது அணை தரை மட்டத்திலிருந்து ஐந்தடி உயர்ந்திருந்தது. நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்தனர். பலநூறு லாரிகள், ஜீப்கள் மற்றும் புல்டோசர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. கல், மணல், ஜல்லி, சிமெண்ட் ஆகியவை வந்து இறங்கிக் கொண்டே இருந்தன. எப்போது பார்த்தாலும் ஆட்களின் உரத்த கூச்சல்... எந்திரங்களின் பேரிரைச்சல்... எங்கு பார்த்தாலும் தூசுப்புகை மயம்!

முதல் நாள் என்னிடம் சற்றுப் பதற்றம்! சூழ்நிலையோடு ஒத்துப்போக இரண்டு–மூன்று நாள் பிடித்தன. மேற்பார்வை மட்டும் என் பணி அல்ல. எல்லாம் முறைப்

படி நடக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். கூலியாட்கள் கிழேயிருந்து சிறு ஜல்லி மற்றும் கலவையைத் தூக்கி வந்து கொட்டுவார்கள். ஓரத்தில் உடைக்கப்பட்ட ஜல்லிக் கலவை. நடுவில் பெரிய கற்களை நிரப்பி சிமெண்ட் கலவையைக் கொட்டி பள்ளத்தை நிரப்ப வேண்டும். மணலும் கற்களும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட இடத்திலிருந்து தான் வரவேண்டும். ஜல்லி, சிமெண்ட், மணல் கலப்பதில் முறையான விகிதாசாரம் பின்பற்றப்பட வேண்டும்.

ஆனால், நான் பார்த்த வரையில் அங்கு இத்தகைய நடைமுறை எதுவும் அனுசரிக்கப்படவில்லை. கிழே போட்டால் கற்கள் உடைந்தன. மணலிலும் இதே கதை தான். அது மணலே அல்ல. மண்தூள், சிமெண்ட்டின் அளவும் குறைக்கப்பட்டது.

அரசு சார்பில், இதையெல்லாம் நான் தான் கண்காணிக்க வேண்டும். என்னுடன் மேஸ்திரி இருந்தார். ஒப்பந்தக்காரரின் ஆட்கள் இருந்தனர். கலவையைப் பரிசோதிக்க எந்திர சாதனங்கள் மற்றும் ஆய்வுக் கூட வசதிகள் இருந்தன. ஆனால், எதுவும் திருப்திகரமாகச் செயல்படவில்லை. எனவே, என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.

ஒருநாள் மேற்பார்வைக்கு வந்த உயர் அதிகாரியிடம் நான் அங்கு நடக்கும் முறைகேடுகள் அனைத்தையும் ஒளிக்காமல் சொல்லிவிட்டேன்.

அதற்கு அவர், "இப்படித்தான் எங்கும் நடக்கிறது; நீ ஒன்று தெரிந்து கொள். இதையெல்லாம் நீ ஏன் விபரீதமாக எடுத்துக் கொள்கிறாய்...?" என்றவாறு, என்னைத் தனியான ஓர் இடத்துக்கு அழைத்துப் போய், "நீ அவர்களின் வாராந்திர வேலை முன்னேற்றத்தை மட்டும் பார்... அதற்குரிய பில் தயார் செய்... அளந்து பார்த்து நான் சான்றளித்து விடுகிறேன். பில் ஏற்கப்பட்டுவிடும். அதன் பிறகு அவர்கள் எல்லா ஏற்பாட்டையும் செய்து விடுவார்கள்... நீ கவலைப் படாதே..." என்றார்.

எனக்கு வியர்த்தது. பதறிப்போனேன். இப்படியெல்லாம் நடக்க விடக் கூடாது. எனவே துறைப் பொறியாளரிடம் பேசினேன்.

"இது உனக்கு முதல் வேலையா...?" அவரிடம் பரிகாசக் கேள்வி, "ஒரு மாதம் வேலை செய்; எல்லாம் சரியாகிவிடும்..."

எனக்கு அவமானமாகிவிட்டது. எவரும் என்னை ஆதரிக்கவில்லையே என்ற வேதனை! கடைசியில் 'பிண்டோ' என்பவரிடம் பேசினேன். மிகுந்த அனுபவம் உடையவர்.

"இதோ பார்... முன்பு உன்னைப் போலவே ஒரு ஆள் இங்கு இருந்தான். தலைமைப் பொறியாளர் வரையில் போய்ப் புகார் செய்தான். வேலை நடப்பதையே நிறுத்தினான். கடைசியில், நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, மணல் ஏற்றி வந்த ஒரு லாரி, அவன் மீது ஏறியது. அந்த இடத்திலேயே ஆள் காலி! நீ கொஞ்சம் யோசித்தால்..." என்றார் பிண்டோ!



"நீங்க எந்தப் புகார் வேண்டுமானாலும் ஒரு வெள்ளை பேப்பரிலே எழுதிக் கொடுங்க... நாங்க உடனடியா அதை கவனிக்கறோம்!" -வீ. எஸ். கணேசன்

நான் காந்திஜி பற்றிப் படித்திருந்தேன். நேருஜியின் சொற்பொழிவுகளைக் கேட்டிருந்தேன். முதலமைச்சரிடம் போய் ஆசியும் பெற்றிருந்தேன். எவரிடம் நான் பயப்பட வேண்டும்?

ஒரு ஞாயிற்றுக் கிழமை. கிராமத்துக்குப் போனேன். அங்கு முதலமைச்சர் வந்திருப்பது தெரிய வந்தது. நல்ல வாய்ப்பு. கைநழுவ விட்டுவிடக் கூடாது என்று நினைத்து ஓடினேன். அவர் ஏதோ சொந்த வேலையாக வந்திருந்தார். எனவே, அரசியல் தலைவர்களோ, அல்லது அரசு அதிகாரிகளோ உடன் இருக்கவில்லை. அவர் வீட்டாருடன் எனக்கு நல்ல பழக்கம் என்பதால், உள்ளே சென்று, அவர் முன் நின்றேன்.

"வா... கலாவதி அணையின் பொறியாளரே... வா.... வேலை எப்படி இருக்கிறது...?" என்றார் உற்சாகத்துடன்.

எனக்கு அது போதுமானதாக இருந்தது.

Home Alone - 3

ஒரு வெள்ளெலி, ஒரு பாடும் கிளி – இவை இரண்டும் தான் எட்டு வயது அலெக்ஸின் நண்பர்கள். 'இவர்களைத்' தவிர வேறு யாரும் அவன் சொல்வதை நம்புவதாயில்லை.

''பக்கத்து வீட்டில் திருடர்கள். உடனே வாங்க'' என்று தன் வீட்டில் தனியே இருக்கும் அலெக்ஸ் போலீஸுக்கு போன் செய்ய, போலீஸ் வருவதற்குள் திருடர்கள் வந்த சுவடு தெரியாமல் தப்பி விடுகிறார்கள். இப்படி இரண்டு முறை நடக்க ''டேய் பொடியா, இனியும் பொய் பேசினா நடக்கிறதே வேற'' என்று கண்டித்து விட்டுப் போகிறார் இன்ஸ்பெக்டர்.

உண்மையில் அந்த நான்கு திருடர்களின் இலக்கு, அமெரிக்க ராணுவத்திலிருந்து திருடப்பட்ட ஒரு மிக ரகசிய கம்ப்யூட்டர் சிப். அதை ஒரு பொம்மைக் காருக்குள் மறைத்து எடுத்து வரும்போது விமான நிலையத்தில் அந்தப் பை இடம் மாறி விடுகிறது. அதைத் தற்செயலாக எடுத்துக் கொண்டு சிகாகோவிற்குப் பயணமாகும் பாட்டி தன் காலனியில் வசிக்கும் அலெக்சுக்கு அதைப் பரிசளிக்கிறாள். அந்தக் காலனியில் தான் சிப் இருக்கிறது என்பதை மோப்பம் பிடித்து விடும் நால்வர் அணி, அங்குள்ள ஒவ்வொரு வீடாகத் தேடி, கடைசியில் அலெக்ஸ் வீட்டை முற்றுகையிட்டு, போலீஸிடம் பிடிபடுகிறது!



ஹோம் அலோன் – முதல் இரு பாகங்களில் நடித்த மெக்காலே கல்கின் இதில் இல்லை. இளைஞன் ஆன கையோடு, ஒரு 'பெண் நண்பி'யை அடைந்து, விரைவில் (அதாவது மேஜரான கையோடு) திருமணமும் செய்து கொள்ளப் போகிறான்(ர்) கல்கின்.

இதில் இடம்பெறும் பொடியனின் நிஜப் பெயரும் அலெக்ஸ்தான் – 'One fine day' யில் கலக்கியவன், கல்கின் கண்ணில் தெரியும் விஷமம் அலெக்ஸுக்கு இல்லைதான். ஆனால் அப்பாவித்தனமும் ஒரு 'ப்ளஸ்'ஸாகி விடுகிறது. மாடிக்கும், கீழுக்குமாக அவன் ஓடி ஓடிச் செய்யும் சாகசங்கள், 'ஆஹா'! என்றாலும் ஹோம் அலோன் ஒன்னை இவை ஞாபகப்படுத்துகின்றன. 'ஓஹோ' பெறுவது இந்தப் படத்தின் முதல் பாதியில் ரிமோட் காரை வைத்துக் கொண்டு வில்லன் கூட்டணிக்கு அலெக்ஸ் தண்ணி காட்டும் காட்சிகள்!

குழந்தைகளுக்கான படம் என்பதை உணர்ந்து 'க்ளீனாக' தயாரித்ததற்குப் பாராட்டு. கோடை விடுமுறையாகப் பார்த்து இதை இங்கு ரிலீஸ் செய்த சாமர்த்தியத்துக்கும் பாராட்டு! ●

– ஜி

என்னிடம், மனதுக்குள் குமுறிக் கொண்டிருந்த எரிமலையின் வெடிப்பு! அவர் புன்முறுவலுடன் தலையசைத்து அசைத்து கேட்டுக் கொண்டார். நான் அவரிடம் கல், மணல், சிமெண்ட் கதை முழுவதையும் கூறினேன்– ''பள்ளத்தை நிரப்பப் போடப்படும் கற்கள் தரம் குறைந்தவை. பொறியாளர்கள் சொல்லப் பயப்படுகிறார்கள். இந்த அணையில் உறுதியில்லை. பத்து வருடம் கூட நிலைத்து நிற்காது'' என்றேன்.

சொல்லும்போது எனக்கு உடல் நடுங்கியது. லேசாக வியர்க்கவும் செய்தது. இறுக்க மூடிய கைகளைக் காற்றில் வீசியவாறு, சற்றுக் குரலை உயர்த்தி, நாணய்யாவின் ஏமாற்று வேலைகளை எல்லாம் எடுத்துரைத்தேன். நாடகம் பார்க்கும் பள்ளிக் குழந்தை போல், முதலமைச்சர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். நான் சொன்னது எத்தனை முக்கியச் செய்தி! ஒரு நாட்டின் எதிர்காலத்தையே துயர முடிவை நோக்கி இட்டுச் செல்லும் காரியம் நடக்கிறது. ஆனால், அவரிடம் என் பேச்சினால் எந்தப் பயனும் இல்லை.

''நான் உன்னை அங்கு ஏன் அனுப்பினேன் தெரியுமா?'' அவரிடமிருந்து சம்பந்தமில்லாத கேள்வி பதிலையும் அவரே சொன்னார். ''உன் அப்பா மரம் ஏறித் தேங்காய் பறித்து, அதை உரித்து உரித்தே தன் பாதி வாழ்வைக் கழித்து விட்டான். நீயும் ஏழைமையிலேயே தான் வளர்ந்தாய். அந்த ஏழைமை உன்னை விட்டுப் போக வேண்டும். இந்த ஆசையில் தான், உன்னை அங்கு அனுப்பினேன். ஆனால் நீயோ, நாணய்யா பற்றிய

புகாருடன் இங்கு வந்திருக்கிறாய். உன்னிடம் உண்மையைக் கூறட்டுமா? சென்ற தேர்தலில் என்னை எதிர்த்து எட்டுப் பேர் போட்டியிட்டனர். நாணய்யா தான் அவர்களுக்கெல்லாம் தலா ஐந்து லட்சம் கொடுத்து எல்லாவற்றையும் சரிக்கட்டினார். நான் முதலமைச்சர் ஆனேன். அதிலும் பல சிக்கல்கள். நாணய்யா அதற்கெல்லாம் கூடப் பணம் செலவு செய்தார். அந்தப் பணம் முழுவதையும் அவர் சம்பாதித்துக் கொள்ள வேண்டாமா? அதற்காகத்தான் கலாவதி அணை கட்டும் பணியை அவரிடம் ஒப்படைத்திருக்கிறேன். அதை எல்லாம் யாராலும் தடுக்க முடியாது. தடுக்கவும் கூடாது. நீயும் அவரைக் குற்றம் சாட்டாதே! உனக்கு நல்ல வாய்ப்பு! பிழைக்கும் வழியைத் தேடிக் கொள். இனி இப்படிப்பட்ட புகார்களுடன் இங்கு வராதே! உனக்கு நல்ல எதிர்காலம் உண்டு. போய் வா...''

என்னிடம் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் நடுக்கம். யாரோ என் கால்களை வாரித் தரையில் வீழ்த்துவது போன்ற தடுமாற்றம். நான் கேட்டேன். "காந்தி... நேரு... சொன்னதை எல்லாம்..."

அவரிடம், அந்த இடமே இடிந்து விழுவது போன்ற சிரிப்பு!- "இது நல்ல வாய்ப்பு! விட்டுவிடக் கூடாது... நீயும் விட்டு விடாதே! நாம் பேசிக் கொண்டது நல்லதாயிற்று. இல்லாவிட்டால் இதற்கெல்லாம் நமக்குத் துணிவே வந்திருக்காது....''

நான் வீடு திரும்பினேன். திங்களன்று கிளம்பி வேலைக்குப் போனேன். உச்சந் தலையில் கடும் சூடு! புதிய கறுப்புக் கண்ணாடி வாங்கிப் போயிருந்தேன். நல்லதாகப் போயிற்று!

ஆனால் நேரு-காந்தி சொன்னதை எல்லாம் மறப்பது கடினமாகத்தான் இருந்தது. எனினும் என்னை நான் மாற்றிக் கொண்டேன். எதையும் கண்டு கொள்வதில்லை. நான் தான் கறுப்புக் கண்ணாடி மாட்டிக் கொண்டு விட்டேனே!

விரைவில், அங்கேயே நான் துணைப் பொறியாளர். பிறகு, ஐந்தாண்டுகளுக்கு ஒன்று வீதம், தலைமைப் பொறியாளர் வரையில் பதவி உயர்வு. பின்னணியில் முதலமைச்சர். எப்போது அவரை நான் பார்க்கச் சென்றாலும் தோல் பையுடன் தான் போவேன். அப்போதெல்லாம் தான் சூட்கேஸ் கிடையாதே! அவருக்கு என்று கேட்டால், அனைவரும் தாராளமாகத் தந்தனர். திட்டம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பே, ஒப்பந்தக்காரர்களுடன் பேசி வைத்துக் கொண்டு, முதலமைச்சருக்குப் பணம் கொடுத்து விடுவேன்.

முதலமைச்சர் பெரும் செல்வந்தரானார். தலைநகரில் பல கட்டடங்கள். பந்தயக் குதிரைகளை வாங்கி வளர்த்தார். கம்பெனிப் பங்குகளாக வாங்கிக் குவித்தார். அவர் கோடீஸ்வரர் ஆனார். அவரது உறவினர்கள் எல்லாம் இன்று லட்சாதிபதிகள்!

தேன் எடுத்தவன் புறங்கையை நக்காமலா இருப்பான்...? என் அப்பா கிராமத்திலேயே தங்கி விட்டார். தலைநகரில் இன்று எனக்கு மூன்று வீடுகள்; மூன்று கார்கள். ஒன்று எனக்கு... அடுத்தது மனைவிக்கு... மூன்றாவது மகனுக்கு. அவனுக்கு ஒரு தொழிற்சாலை அமைத்துக் கொடுத்துள்ளேன். ஒரு மலைத் தோட்டமும் வாங் கினேன்.

நான் ஓய்வு பெற்று இரண்டு வருடம் ஆகிறது. அதற்கு முன்பு கலாவதி அணைக்கட்டுப் பகுதிக்குப் போகும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அதுவும் அதன் உறுதிப் பாட்டைச் சீர்செய்யும் ஒரு ஆலோசனைக் குழுவில்!

அது கட்டப்பட்டு முப்பது ஆண்டு ஆகின்றன. இந்த முப்பது வருடமும் அது பழுது பார்க்கப்படாத ஆண்டே கிடையாது. எனினும் அதன் விரிசல்களைச் சரி செய்ய முடியவே இல்லை. அரசு அப்பணிபற்றிச் சிபாரிசு செய்ய ஒரு நிபுணர் குழுவை அனுப்பியது. அக் குழுவின் உறுப்பினர்

''கதை எழுதிட்டு, கடைசியில ஏன் 'இந்த கதையை படித்து விட்டு சிறிது தூரம் ஓடவும்'னு குறிப்பு எழுதி இருக்கீங்க?''

''கதையை ஜீரணிக்க முடியலைன்னு யாரும் சொல்லிடக் கூடாது இல்லையா அதனால்தான்!''

– பா. ஜெயக்குமார்





வந்தவர்: நீங்க சம்திங்கே வாங்கமாட்டீங்கன்னு உங்க ஆபீஸ்ல எல்லாரும் சொல்றாங்களே..?

ஆபீஸ் மானேஜர்: எல்லாரும் புளுகுண்ணிப் பசங்கசார்... அவுங்க பேச்சையெல்லாம் கேட்காதீங்க!

– *சீர்காழி வி. ரேவதி*

களில் ஒருவனாகத்தான் நான் அங்கு போனேன். அந்த அணை கட்டப்பட்ட போது நான் அங்கு ஓர் இளநிலைப் பொறியாளராக இருந்தேன் என்பதை யாரிடமும் நான் வெளியிடவில்லை.

எங்களது யோசசனைப்படி 'கிரௌண்டிங்' முதலான பல்வேறு வழிமுறைகளை அரசு செய்து பார்த்தது. எனினும் திருப்திகரமான, விளைவு ஏதும் ஏற்படவில்லை. எனவே அரசு இன்னொரு நிபுணர் குழுவை அனுப்பியது. அதிலும் நான் இடம் பெற்றேன். என்னுடன் பல்வேறு மாநிலங்களின் தலைமைப் பொறியாளர்கள் சிலரும் இடம் பெற்றிருந்தனர்.

கடைசியாக, அந்த அணைக்கு முன்னதாக வேறொரு அணையைக் கட்டியே ஆகவேண்டும் என்று எங்களது நிபுணர்குழு அரசுக்குப் பரிந்துரை செய்தது. அவ்வாறே கட்டுவதென அரசு இறுதி முடிவு எடுத்து விட்டது.

இப்போது, நான் அந்த அணையின் 'ப்ளூ ப்ரிண்ட்'டை எதிரில் பிரித்து வைத்துக் கொண்டு பார்க்கிறேன். கடந்த காலத்தில் நடந்தவை அனைத்தும் என் கண்முன் படமாக விரிந்தன. முதலமைச்சர் என் பின்னால் என்ற துணிவில் நான் அப்போது என்னவெல்லாம் செய்தேன்...?

இன்று ஒரு முன்னாள் தலைமைப் பொறியாளராக உள்ள நான், அந்த முன்னாள் முதலமைச்சருக்கு மாலை அணிவித்துக் கௌரவிக்கத் தயாராக நிற்கிறேன்.

என்னிடம் இப்போது சர்க்கரை வியாதியுடன் இன்னும் பல வியாதிகள்! நடக்க முடியவில்லை. படியேறி இறங்கச் சிரமாக உள்ளது. ஆனால், அந்த முதலமைச்சரின் நிலை! தொண்ணூறு வயதைக் கடந்து விட்ட போதிலும் அவருக்குத் தான் எத்தனை திடகாத்திரமான, உரமேறிய கல் போன்ற உடல்!

அவரை எப்போதாவது சந்திப்பேன். "எப்படி இருக்கிறாய்..." என்று விசாரிப்பார்.

இப்போதெல்லாம் நாட்டைப் பற்றி, அவர் நிறையப் பேசுகிறார். காந்தி-நேருவின் லட்சியங்களை எல்லாருக்கும் எடுத்துரைக்கிறார். சத்தியம்-நேர்மை மீது அவருக்கு இப்போது முழு நம்பிக்கை! மக்களும், பத்திரிகைகளும் அவரை நாட்டின் நிர்மாணகர்த்தா என்கின்றன. பிதாமகர் என்கின்றனர். சிற்பி என்று அவர் பாராட்டப்படுகிறார். நானும் போய் அவரைப் பாராட்டத் தயாராக இருக்கிறேன்.

பூமாலை தயாரிக்கும் ராயப்பாவிடம், எண்ணூறு ரூபாய்க்கு ஒரு மாலை தயாரிக்கச் சொல்லிவிட்டேன்.

அந்த மாலையை அவருக்கு அணிவிக்கும் நாள் என்று வரும்?– அதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். ●



"ஏங்க, நீங்க பத்திரிகை நிருபர்ன்றதுக்காக நம்ம வீட்டுல திருட வந்தவன்கிட்டயே இந்த நேரத்துல பேட்டி எடுக்கறது நல்லவா இருக்கு?"

– நெல்லிக் குப்பம் வி.மோகன்



வாகன மாறுதலுக்குத் தயாராகுங்கள்!

அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இன்னும் இரண்டே ஆண்டுகளில் – சாலையில் ஓடும் வாகனங்களில் முக்கியமான சில மாறுதல்களை எதிர்பார்க்கலாம். காரணம் மத்திய அரசு அறிமுகப்படுத்தியிருக்கும் சில சட்டங்கள்.

அதன்படி குப் குப் என்று அடைத்துக் கொள்ளும் கார்பரேட்டருக்கு கார்கள், விரைவிலேயே டாட்டா சொல்லியாக வேண்டும். தடங்கலின்றி இயங்கும் 'எரிபொருள் இன்ஜெக்ஷன்' ஸ்விட்ச் தான் கி.பி.2000 முதல் கார்களில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

இப்போதுள்ள மொபெட், ஸ்கூட்டர் ஆகியவை இரு – ஸ்ட்ரோக் என்ஜின்களில்தான் இயங்குகின்றன. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த வகை வண்டிகள் நான்கு – ஸ்ட்ரோக் என்ஜின்கள் கொண்டவையாக மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும். (இப்போதுள்ள என்ஜின்களை நான்கு ஸ்ரோக்காக மாற்றிக் கொள்ளலாம்.) இதனால் பெட்ரோலில் எண்ணெய்யைக் கலக்க வேண்டியது தவிர்க்கப்படுகிறது. வெளியேறும் நச்சுக் காற்றின் அளவும் குறையும்.

பெருநகரங்களில் ஓரிரு வருடங்களாகவே ஈயம் கலக்காத (unleaded) பெட்ரோல் கிடைப்பது உண்மைதான். என்றாலும் இந்த மாதத்திலிருந்து எல்லா மாநில தலைநகரங்களிலும் இந்த வகை பெட்ரோல் கட்டாயம் கிடைக்க வேண்டும் என்ற சட்டமும் இயற்றப்பட்டிருக்கிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாடு முழுவதுமே இந்த வகை பெட்ரோல் தடங்கலின்றிக் கிடைத்தாக வேண்டும் என்று இந்த விதிமுறை வலியுறுத்துகிறது.

சரியில்லாத கார்பரேட்டர்களால்தான் கார்பன் மோனாக்ஸைடு போன்ற நச்சுக் காற்று மிக அதிக அளவில் பரவுகிறது. கார்களைப் பொறுத்தவரை அதிகபட்ச மாசு வெளிப்படும் அளவு இவ்வளவுதான் (ஒரு கிலோ மீட்டருக்கு 8.68 கிராம்) என்று 1996-ல் அனுமதிக்கப்பட்ட அளவு, சர்வதேச ஒப்பந்தத்தின்படி கி.பி. 2000-ஆம் ஆண்டில் 2.72 எனும் அளவுக்குக் குறைக்கப்பட வேண்டும். இதற்கு கார்பரேட்டர்கள் உதவாது.

புதிய கார்களான சியலோ, ஆஸ்ட்ரா போன்றவை வழக்கத்திலிருந்து விலகி, 'இன்ஜெக்ஷன் சிஸ்டம்' கொண்டவையாக இப்போதே இருக்கின்றன. ஆனால் மாருதியைப் பொறுத்தவரை இப்போது அப்படியில்லை. அதே சமயம் மாருதியும் தனது வருங்காலத் தயாரிப்பில் இந்த மாறுதலை அறிமுகப்படுத்தப் போகிறது. இதனால் இந்தக் காரின் விலை சுமார் 20,000 ரூபாய் அதிகரிக்கக்கூடும். காரணம் புது அறிமுகமான இன்ஜெக்டர்கள் மற்றும் சென்சர்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில்தான் நாம் இருக்கிறோம்.

ஏன் உள்ளூரிலேயே இந்த பாகங்களைத் தயாரிக்க முடியாதா என்ன? இப்போதைக்கு அது புத்திசாலித்தனம் இல்லையாம். காரணம் குறைந்தபட்ச அளவிலாவது கார்கள் தயாரானால்தான், இது ஓரளவாவது லாபத்தைத் தருவதாக இருக்குமாம். நம் நாட்டில் சென்ற வருடம் தயாரான கார்களின் எண்ணிக்கை நான்கு லட்சம். இது அந்தக் குறைந்தபட்ச அளவை விடக் குறைவானது!

இதெல்லாம் இருக்கட்டும். கலப்படமில்லாத பெட்ரோல் கிடைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கையை எடுக்கப் போகிறது?

— ஜி.எஸ்.எஸ்.

● பெ. பொன்ராஜபாண்டி, மதுரை - 10.

? தீவிரவாதத்தை ஒழிக்க, கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் முஸ்லிம்களுக்கு ஐந்து சதவிகித இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று லத்தீப் கூறுகிறாரே?

! இன்று இட ஒதுக்கீடு கேட்காத பிரிவே கிடையாது எனுமளவுக்கு, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும் கேட்கிறார்கள். முஸ்லிம்களும் கேட்டு விட்டுப் போகட்டும். ஆனால், அத்துடன் தீவிரவாதத்தை இணைப்பது ஆபத்தான அணுகுமுறை. அதையும் இதையும் தொடர்புபடுத்தவே கூடாது.



• அதிரடி அறிக்கை!

கலைஞரின் டெல்லி பயணம் பற்றி...?



• அக்கிரம விமர்சனம்!

காரணம் எதுவானாலும் தீவிரவாதம் தப்பானது; அதற்கு மன்னிப்புக் கிடையாது.

● ஆர்.கே. விங்கேசன், பள்ளம்.

? எது விதண்டாவாதம்?

! "நாட்டிலேயே தமிழகம் மட்டும் தான் 356 பிரயோகிப்பைக் கட்டாயமாக்கும் மோசமான நிலையில் உள்ளது" என்ற ஜெ அறிக்கை!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? "எங்கள் கட்சி வித்தியாசமானது; அதனால்தான் நிர்வாகிகள் ஒட்டுமொத்த ராஜினாமா செய்துள்ளனர்" - என்று மூப்பனார் பெருமைப்பட்டுள்ளாரே?

! அந்த ஒட்டுமொத்த ராஜினாமாவைப் பெறுவதற்காகத்தானே மூப்பனார் தாம் ராஜினாமா செய்வதாகச் சொன்னது! அது சரி. சொத்துக் கணக்குக் காட்டிய கோவை கவுன்சிலரைக் கட்சி நீக்கம் செய்ததால் த.மா.காவிலும் யோக்கியமானவர்களுக்கு இடமில்லையோ என்கிற சந்தேகம் வந்து விட்டதே! மூப்பனார் விளக்கமளிக்க வேண்டும்.

● சி.எஸ். நடராஜன், சீர்காழி.

? சமீபத்தில் எதைப் படித்த போது அதிர்ச்சி ஏற்பட்டது...?

! சேலம் - கரூர் அகல ரயில் பாதைப் பணிக்கு இவ்வாண்டு ரயில்வே அமைச்சகம் பிசாத்து பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது என்பதைப் படித்தபோது. திட்டச் செலவு 130 கோடி. போன வருடம் ஐந்து கோடி தரப்பட்டது. இந்த ரேட்டில் போனால், திட்டச் செலவு, திட்டம் முடிவதற்குள் மும்மடங்காக உயர்ந்துவிடும்!

● ஜி. பாரதி, கோவை - 4.

? ஜெயலலிதா மீதான அன்னியச் செலாவணி வழக்குகளை வாபஸ் பெற முடியாது என்று மத்திய நிதி அமைச்சர் சின்ஹா கூறியிருப்பது பற்றி...?

! வாபஸ் வாங்குவதை விட பலவீனப்படுத்துவது ரொம்பக் கேவலம்!

● ராஜி, கமுதி.

? பத்திரிகைகளின் தரம் குறைந்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி ஆர்.வி. வருத்தப்படுகிறாரே...?

! ஆமாம். இன்றைய அரசியல் செய்திகளைப் பிரசுரிக்கும் போது தரம் தாழத்தானே செய்யும்!

● வி. சிவா, மதுரை - 16.

? சசிகலா வழக்கில் ஆஜரான வக்கீலை மத்திய அரசு வக்கீலாக நியமித்துள்ளனரே?

! அ.தி.மு.க. கூட்டணி அமைச்சர்கள் ஒவ்வொரு முறையும் ஃபைலில் கையெழுத்துப் போடுமுன் போயஸ் தோட்டத்துக்கு போன் செய்து அனுமதி பெற வேண்டும் என்னும் போது, வாஜ்பேயி என்ன செய்ய வேண்டும் என்று ஜெ சூப்பர் பிரதமராக இருந்து கட்டளை

விடும் போது– இதுவும் நடக்கும்; இன்னமும் நடக்கும்!

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? மரணம் என்பது இறைவன் கொடுத்த வரமா? சாபமா?

! வாழ்க்கை, மரணம் இரண்டுமே வரமாகவும் முடியும் சாபமாக விளங்கவும் முடியும். அவரவரும் எப்படித் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்துத் தான் அதெல்லாம் நிர்ணயிக்கப்படுகிறது.

● சித்ரா, கும்பகோணம் – 1.

? கருணாநிதி குற்றமற்றவர் எனும் ஜெயின் கமிஷன் அறிக்கை பற்றி...?

! ஓர் அறிக்கை முழுவதுமாக வெளிவருவதற்கு முன்னதாகவே பத்திரிகையில் 'லீக்' ஆன பகுதிகளை வைத்துக் கொண்டு, அரைவேக்காடு அரசியல் நடத்தி, ஆட்சி மாற்றத்துக்கும் தேவையற்ற தேர்தலுக்கும் வழிவகுத்து, தானும் தோற்று, மக்களுக்கும் ஏராள பண நஷ்டத்தை ஏற்படுத்திய கேசரியின் முட்டாள்தனத்துக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்.

● வானொலி மார்க்கோனி, கவுந்தப்பாடி.

? கேள்விகளுக்குச் சரியான பதில்கள் தெரியாததால்தானே ஒருசில வாசகர்களின் கேள்விகள் பத்திரிகைகளில் இடம்பெற வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது?

! சுவாரஸ்யமான பதில்களைப் பெறக்கூடிய கேள்விகள் இயல்பாக முதலிடம் பெற்று விடுவதாலும் வந்து குவியும் ஆயிரக்கணக்கான கேள்விகளில் பத்தோ பதினைந்தோதான் பதில் பெற முடியும் என்பதாலும்தான் அவ்வாறு நிகழ்கிறது. வேறு காரணங்கள் இல்லை.

● ஏ. ஜஹ்பர் காதர், விளாத்திகுளம் அஞ்சல்.

? பத்திரிகைக்காரர்கள் எல்லாம் அரக்கர்கள் அல்ல; ஆனால் அக்கிரமக்காரர்கள் என்கிறாரே சோனியா?

! போபர்ஸ் ஊழலை வரிந்து கட்டிக் கொண்டு பத்திரிகைகள் வெளிக்கொணர்ந்ததை; இன்னமும் அதை மறக்காமல் இருப்பதை சோனியாவால் எப்படித் தாங்க முடியும்?!

● மேலை பழ. நாகப்பன், சென்னை – 41. ❑

? கலைஞரின் தில்லி பயணம் பற்றி...?

! தமிழக மீனவர்களின் பிரச்னை; காவிரி பிரச்னை என்றெல்லாம் பேசுவதாகக் காட்டிக் கொண்டு என்ன பேசியிருப்பார்கள் என்பதை யூகிக்க முடியாதா?




கவலையும் காரணமும்!

● நல்லத்துக்குடி கண்ணன், மயிலாடுதுறை – 1.

? நடிகர் நடிகைகளின் காதல், மற்றும் மறுப்பு வெளியீடுகள் போன்று உள்ளதே த.மா.கா. – காங்கிரஸ் இணைப்பு குறித்து சோனியாவின் பேச்சும், மூப்பனார் பேச்சும்...?

! நடிக – நடிகையரின் காதலும் கல்யாணமும் நாட்டைப் பாதிக்காதே ஐயா!



• ஆபத்தான இணைப்பு!

● ஏ. சங்கர், பெங்களூர் – 16.

? நம்முடைய சிந்தனைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் 'மூளை'தான் காரணம் என்று மருத்துவ இயல் கூறுகிறது. ஆனால் நம்மை நல்வழிப்படுத்துவதே இதயம்தான் எனக் கூறும் ஆன்மிகம் 'மனம்' என்பது குறித்தும் பேசுகிறதே...? மனமும் இதயமும் வெவ்வேறா...?

! இருதயம் வேறு; இதயம் வேறு. இதயம் என்பது மனம் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது. மனம் என்பது, மூளை நடத்தும் ஆராய்ச்சிக்கும், அறிவுக்கும் அப்பாற்பட்ட ஸ்தூலம். மூளையால், அறிவால் கட்டுப்படுத்தப்பட வேண்டிய ஒன்று.

● மஞ்சுதேவன், மும்பை – 86.

? ரெடிமேட் பீடா போடுவது, வெற்றிலை பாக்கு போடுவது... எதிலே சுகம் அதிகம்?

! நம்பர் பீடாவாக இல்லாதபட்சத்தில், ஹோட்டல் விருந்துக்குப் பிறகு ரொம்பப் பொருத்தம். கல்யாணச் சாப்பாடு என்றால், வாழை இலை வாசனை மாறாத கையால் வெற்றிலை பாக்கு மடித்துத் தரிப்பது பரம சௌக்கியம். ஆனால் வீடு திரும்பிய பிறகு பல் தேய்த்து வாயை சுத்தப்படுத்திக் கொள்ள மட்டும் மறந்து விடாதீர்கள்!



• விளக்கம் தேவை...

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
மேலை பழ நாகப்பன்,
H 57/6, மூன்றாவது மெயின் ரோடு,
திருவான்மியூர்,
சென்னை - 600 041.

திசை


நான் நண்பர் மணியன் அவர்களைச் சந்தித்ததே ஒரு அலாதியான சம்பவம்.

அப்போதுதான் சென்னைப் பல்கலைக் கழகத்தில் மற்றுமோர் முதுநிலைப் பட்டப் படிப்பை முடித்திருந்தேன். எனது வேதியியல் பேராசிரியர், அமெரிக்காவில் டாக்டர் பட்டம் எடுத்த டாக்டர் சுவாமிநாதன். சீர்காழி சொந்த ஊர். விஞ்ஞான ஆராய்ச்சியில் மிகுந்த ஈடுபாடு. எதையும் அனாயாசமாக எடுத்துக் கொள்ளும் மனோபாவம். பல மாணவர்கள் அவரிடம் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்கள்.

வேதியியலிலும் மற்ற துறைகளிலும் வெளிவந்து கொண்டிருந்த பல புதிய கண்டுபிடிப்புகளும் தொழில்நுட்பங்களும் என்னைப் பிரமிக்க வைத்தன. அந்த வாரத்து ஆனந்த விகடனைப் படித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு நினைப்பு; ஓர் உத்வேகம். நான் விகடன் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

"ஐயா! இந்த நாடு முன்னேற வேண்டுமானால் தமிழன்னையின் கையிலே அணுவியல் நூலும், வேதியியல் கண்டுபிடிப்புகளின் தொகுப்பும், உயிரியல் நூலும் இடம் பெற்றிருக்க வேண்டும். மாறாக நாட்டில் ஒரு சினிமா நடிகையை அறிந்திருக்கும் அளவுக்கு ஒரு விஞ்ஞானியை அறியவில்லை. ஒரு தமிழறிஞரை அறியுமளவுக்குப் பலருக்கும் வாழ்வளிக்கும் ஒரு தொழிலதிபரை மக்கள் அறியவில்லை. நாம் முன்னேற, வளம் பெற, தொழில் வளம் பெற விஞ்ஞானிகளை முன்னிறுத்துங்கள். அப்படிப்பட்ட விஞ்ஞானிகள் இன்று தமிழ்நாட்டின் பல பல்கலைக் கழகங்களிலேயே இருக்கின்றனர். ஏதோ இதை நான் எழுதித் தருவதற்காக இங்கே குறிப்பிடவில்லை. நீங்களோ உங்கள் நிருபர்களோ இதைச் செய்யலாம்" என்று ஒரு கடிதம் எழுதினேன்.





மணியனுடைய சந்திப்பின் விளைவும் சரி, அமெரிக்க புல்பிரைட் திட்டத்தில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டதும் சரி – என் வாழ்வை திசைதிருப்பிய சம்பவங்கள்.

ஒரு வாரம் கழித்து எனக்கு விகடன் அலுவலகத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. "ஆசிரியரைச் சந்திக்க முடியுமா?" என்று கேட்டு. நான் இதை எதிர்பார்க்கவில்லை. அங்கே ஆசிரியர் தேவனுக்குப் பிறகு கோபு இருந்தார். ஆனால் அவர்தான் ஆசிரியரா அல்லது வேறு யார் என்பது எனக்கு அப்போது தெரியாது. விகடன் அலுவலகத்தின் உள்ளே சென்றதும் கைகாட்டினார்கள். இடதுபுறம் திரும்பி கடைசி அறைக்குள் நுழைந்தேன். ஒரு சின்ன அறையில் மணியன் உட்கார்ந்திருந்தார். எதிரே நான் அமர்ந்தேன். துடிப்பான மனிதர். பேச்சிலும் அது தெறித்தது.

"எங்கள் ஆசிரியர் குழு கூட்டத்தில் உங்

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

கள் கடிதத்தை விவாதித்தோம். நீங்கள் சொல்வது சரிதான். உங்களுக்கு எழுத வருமா?"

எனக்கு ஏற்பட்டது சற்று அதிர்ச்சி. "கல்கி பத்திரிகையில் கடந்த இரண்டு மாதமாக 'விஞ்ஞான குவிஸ்' வெளிவந்து கொண்டிருக்கிறது. கடந்த ஓராண்டாக தினமணி கதிரில், எனது விஞ்ஞானக் கட்டுரைகள். நெய்வேலி நிலக்கரி, சேலத்து அலுமினியம், எதற்கெடுத்தாலும் எவர் சில்வர் என்று கட்டுரைகளை எழுதிக் கொண்டிருக்கிறேனே, நீங்கள் பார்க்கவில்லையா?" என்றேன்.

"பார்க்கவில்லை!" என்றார்.

உடனே அடுத்த வார்த்தையாக –

"ஒரு மூன்று கட்டுரைகள் – விஞ்ஞானிகளைப் பற்றி எழுதிக் கொடுங்கள். நன்றாக இருந்தால் போடுகிறோம்" என்றார்.

எனக்கு மேலும் அதிர்ச்சி.

ஊமையன் கண்ட கனா போல ஏதோ 'சரி' என்று தலையசைத்து வந்தேன்.

அலுவலகத்தை விட்டு மவுண்ட் ரோட்டில் காலடி எடுத்து வைத்ததும், என் அதிர்ச்சி எண்ணங்கள் தலைதூக்கின.

'என்ன இது! கல்கியிலும் தினமணி கதிரிலும் தொடர்ந்து எழுதி வருகிறோம். அது கூடப் பார்க்காமல் இவர் இருக்கிறார்!



திருப்பிய சம்பவங்கள்!

நம்மை எழுத வருமா என்று கேட்கிறார்!'

கால்கள் நடந்தன.

'நான் போய் விகடனில் வரப் போகிறது என்று சொல்லி பிரபல விஞ்ஞானிகளைப் பேட்டி கண்டு விட்டு வருவேன். நாளைக்கு இவர் நன்றாக இல்லை என்று சொல்வார். நான் மதிக்கும் அந்த மனிதர்களிடம் போய் எந்த முகத்தோடு விழிப்பேன்?'

'சேச்சே! அப்படி நாம் எழுத வேண்டிய அவசியமில்லை!'

ஒரு கோபம். வெறுப்பு. மவுண்ட்ரோடில் பல தெருக்களைக் கடந்தேன். அண்ணாந்து பார்த்தேன். ஜெமினி ஸ்டுடியோஸ்! விகடனின் மற்றோர் ஸ்தாபனம்! மனம் மீண்டும் யோசித்தது.

'ஆனந்த விகடனில் எழுதச் சொல்கிறார்கள். இது பெரிய வாய்ப்பு. இவருக்கு நம்மைப் புரியவில்லை. நாம் எழுதுவதன் மூலம் இவருக்கு நம்மைப் புரியவைக்க வேண்டும்.

இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும்!' என்று என் மனமே சொல்லியது: ஒரு தெளிவு.

இதன் விளைவாக 'தமிழகத்து விஞ்ஞானிகள்' என்ற தொடரை 1962-ல் நான் அமெரிக்கா செல்லுமுன் எழுதினேன். ஒரு எட்டு விஞ்ஞானிகளைப் பற்றி; எட்டு வாரம். கட்டுரைகளுக்கு நல்ல வரவேற்பு.

மறுமுறை நான் அண்ணாமலைப் பல்கலைக் கழக வேதியியல் துறை கட்டடத்திற்குள் நுழைந்ததுமே என்னைச் சுற்றி எல்லோரும் கூடி விட்டார்கள். எங்கள் பேராசிரியர் பாலையாவைப் பற்றி அப்படிச் சிறப்பாக எழுதியிருந்தேன். பேராசிரியர் பாலையா என்னை உட்காரச் சொல்லி பேசிக் கொண்டிருந்தார்! அப்போது தொழில் நுட்பக் கல்லூரியின்

இது லேட்டஸ்ட்டுங்க!

பாராளுமன்ற வளாகத்தில் சமீபத்தில் அடிபடும் 'கமெண்ட்' இது. சபாநாயகரோ பாலயோகி. பா.ஜ.கட்சியினர் ஆளும் கட்சி என்பதால் 'ராஜ யோகிகள்'. விட்டுத் தரும் மனப்பான்மை இல்லாமல் பிடிவாதம் பிடிக்கும் காங்கிரஸ்காரர்கள் 'ஹத யோகிகள்'. வலுவான எதிர்ப்புக்குரல் கொடுக்கும் மற்ற எதிர்க் கட்சியினர் பல யோகிகள். இது தவிர மனம் நொந்த 'ரோகிகள்' பதவியைப் பயன்படுத்தி சுகம் அனுபவிக்கிற 'போகிகள்' என்றுதான் எத்தனை ரகம்!

ஆக மக்களைப் பற்றி கவலைப்பட்டு, பணியாற்ற நினைக்கிற 'கர்மயோகிகள்' யாரும் இல்லை போலும்!

– மௌலி

இயக்குனராக இருந்த டி. முத்தையன் அவர்களை நான் சந்தித்த போது அவர் என் மீது வைத்திருந்த மதிப்பைக் கண்டு அயர்ந்தேன்.

அதை விட விசேஷம் : பொறுப்பாசிரியர் மணியனை மீண்டும் சந்தித்த போது அறுநூறு ரூபாய்க்கான ஒரு காசோலையை நீட்டினார்; சொன்னார்.

"வழக்கமாக நாங்கள் இந்தக் கட்டுரைகளுக்கு 400 ரூபாய் தான் கொடுப்போம். திரு. வாசன் அவர்கள் உங்களுடைய கட்டுரைகளை மிகவும் பாராட்டி 600 ரூபாய் கொடுக்கச் சொன்னார்."

'உச்சிகுளிர்ந்ததடி, உடம்பும் நேராச்சு' என்று பாரதி பாடுவாரே அப்படி இருந்தது எனக்கு. எனினும் ஒரு சின்ன ஆசை.

"திரு. வாசன் அவர்களைச் சந்திக்க முடியுமா?"

"இல்லை. சாத்தியமில்லை."

அடுத்த சில மாதங்களில் நான் அமெரிக்காவுக்குச் சென்று விட்டதால் திரு. வாசன் அவர்களைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்காமலே போய் விட்டது.

புல்பிரைட் அறிஞர் என்ற திட்டத்தின் கீழ் அமெரிக்காவுக்கு மேல் படிப்புக்கு விண்ணப்பித்திருந்தேன். சாதாரண கணக்கிலிருந்து ஆங்கில இலக்கணம் வரை எனக்கு பரீட்சை. உலக நாடுகளிலிருந்து கம்யூனிசம் வரை கேள்விகள். ஒரு ஆறு பேர் கொண்ட குழு. இரண்டு இந்தியர்கள். மற்றவர்கள் நான்கு பேர் அமெரிக்கர்கள். சென்னைப் பல்கலைக் கழக தாவரவியல் ஆராய்ச்சிப் பேராசிரியர் டாக்டர் சதாசிவம் அவர்களுள் ஒருவர். பேட்டி முடிந்து, டாக்டர் சதாசிவம் வெளியே வந்தார். அவரை நான் சந்தித்திருக்கிறேன்.

"என்ன முடிவு? நான் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறேனா?" என்றேன் ஆவலோடு.

"உங்களைத் தேர்ந்தெடுக்காமல் வேறு யாரைத் தேர்ந்தெடுக்க முடியும்?" என்று சொல்லிச் சிரித்தார்.

நன்றி சொன்னேன். "எங்கே போக வேண்டும்? காரில் போகலாம் வாருங்கள்!" என்று என்னை அழைத்துக் கொண்டு போனார்.

மணியனுடைய சந்திப்பின் விளைவும் சரி, அமெரிக்க புல்பிரைட் திட்டத்தில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டதும் சரி – என் வாழ்வை திசைதிருப்பிய சம்பவங்கள்.

நானும் மணியனிடம் அதே பாணியில், "நன்றாக எழுத வருமோ, இல்லையோ எனக்குத் தெரியாது! பெரிய விஞ்ஞானிகளிடம் கட்டுரை வரும் என்று சொல்லிவிட்டு, பின்னால் என்னால், 'மொக்கணம்' பட முடியாது. நீங்களே உங்கள் நிருபர்களை வைத்து எழுதிக் கொள்வது நல்லது" என்று சொல்லி இருக்கலாம். அப்படிச் சொல்லும் மனப் பக்குவத்தில்தான் நான் இருந்தேன். ஆனால் சொல்லவில்லை.

பி.எஸ்ஸி., பட்டத்துடன் ஒருமுறையும் முதுநிலைப் பட்டங்களுடன் ஒருமுறையும் நான் முயன்று தோற்றதினால் நான் வேறு ஆயத்தங்களையும் செய்து கொண்டிருந்தேன்.

அமெரிக்காவில் உள்ள 17 பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பித்திருந்தேன். அவற்றில் மூன்று பல்கலைக் கழகங்கள் என்னை மேல் படிப்புக்கு ஏற்றுக் கொள்வதாக எழுதியிருந்தன.

நான் அப்போது திரு. ஏ.சி. முத்தையாவுக்கு ட்யூஷன் ஆசிரியர். எனக்கு அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலிருந்து வந்த கடிதங்களை அறிந்த அவர் உடனடி

யாக என் விமான செலவுக்காக நாலாயிரம் ரூபாயைக் கடனாக வாங்கிக் கொடுத்தார். அவர் ஒரு இளைஞர். பொறியியல் கல்லூரியில் இரண்டாமாண்டு மாணவர். இந்த இள வயதில் 'அப்பா அம்மாவைக் கேட்க வேண்டும்' என்று ஒரு வார்த்தை சொல்லாமல், பிறரிடமிருந்து எனக்குப் பணம் ஏற்பாடு செய்து கையில் கொடுத்ததை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை; வியக்காமல் இருக்க முடியவில்லை. மாணவ நிலையைக் கடந்த 'மனிதம்', 'பக்குவம்' இவற்றைக் கண்டேன், அங்கே அவரிடம்! அமெரிக்கத் திட்டத்தில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டதால் நான் அந்தப் பணத்தை உடனடியாகத் திருப்பிக் கொடுத்து விட்டேன்.

ஆனால் நான் அமெரிக்க அரசின் திட்டத்தை மட்டுமே நம்பிக் கொண்டிருக்கவில்லை. 'செல்ல வேண்டும்' என்ற தீவிரம் - இதுதான் என்னை இயக்கிக் கொண்டிருந்தது.

எனது அனுபவத்தில் நான் கண்ட உண்மை - மார்த்தா சைனிடார் என்ற பிரபல மனசிகிச்சை நிபுணர் கூறிய அதே வாசகம் தான் :

'உனது ஜீவதாகம் எதுவோ அதன் பின்னால் செல்; மற்றவை தொடரும்.'


இடம் அமெரிக்கா. விடுமுறை நாட்கள். கனடாவிலிருந்து டாக்டர் முத்து சிதம்பரமும் மில் வாக்கி விஸ்கான்சின் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் சங்கரும் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார்கள். எல்லோருமாக சீட்டு விளையாடிக் கொண்டிருந்தோம். வெயில் நேரம். காலை பதினொரு மணி இருக்கும். தமிழக முதல்வர் அண்ணா அமெரிக்கா வருவதாக வந்த செய்தி பற்றி பேசிக் கொண்டிருந்தோம். அண்ணா எங்கிருந்தாலும் சென்று பார்த்து வருவது என்று நான் தீர்மானித்திருந்தேன்.

எங்கள் ஆரவாரத்திற்கிடையே தொலைபேசி மணி ஒலித்தது.

''ஆனந்த விகடன் மணியன் பேசுகிறேன். நமது முதல்வர் அண்ணா அமெரிக்கா வருகிறார். அவர் விஜயத்தை விகடனுக்கு பிரத்யேகமாக நீங்கள் 'கவர்' செய்ய வேண்டும்!''

எனக்கு இன்ப அதிர்ச்சி. வந்த செய்தி. மணியனின் குரல். அறிஞர் அண்ணாவுடன் சுமார் இருபது நாட்கள்!

(தொடரும்)



''என் பொண்ணுக்குப் பார்த்திருக்க மாப்பிள்ளை கோதுமை வியாபாரம் பண்றாரு!''

''அப்ப Wheat- டோட மாப்பிள்ளைன்னு சொல்லுங்க...''

— சி.தெ. ரஜினி அருள்



''தலைவர் பேச ஆரம்பிச்சதும் மூணு நிமிஷத்துக்கொரு தடவை இந்த பட்டனை அழுத்து!''

''அழுத்தினால் என்ன ஆகும்?''

''பத்தாயிரம் பேர் கைதட்டற மாதிரி சத்தம் கேட்கும்!''

— உ. ராஜாஜி



''முதல்ல கட்டிங்கை முடிங்க! அப்புறமா மஸாஜ் பண்ணலாம்.''

''அதுக்குத்தான் கத்திரிக்கோலைத் தேடிக்கிட்டிருக்கேன், மஸாஜ் பண்ணலை. இங்கதான் இருக்கும்! கண்டுபிடிச்சுடலாம்!''

— நெல்லிக்குப்பம் வி. மோகன்

மணி பார்த்தாள் சித்ரா. எட்டே முக்கால். பஸ் ஸ்டாப்பில் பயங்கர கூட்டம். எரிச்சலாய் இருந்தது. வயிறு பசித்தது. மதியம் கொஞ்சமாய்ப் பழைய சோறு கொண்டு வந்து சாப்பிட்டது.

யாரோ தன்னை உற்றுப் பார்ப்பது போல் தோன்ற திரும்பினாள் சித்ரா. சபாரி அணிந்து இருந்த ஓர் இளைஞன், அருகே பணக்கார தோரணையுடன் ஒரு பெண்மணி. அந்த சபாரி இளைஞன்தான் இவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான். அவனை எங்கோ பார்த்த மாதிரி இருந்தது. எங்கே? காலேஜில் கூட படித்தவனா!

"ஹலோ." என்று அவன் கையசைத்தான். அவன் நின்று இருந்த இடத்தில் கூட்டம் இல்லை. அதனால் அவனை நோக்கி நடந்தாள். கண்களைச் சுருக்கியவாறு யார் இவன் என்று யோசித்தாள். "ஹலோ சித்ரா. என்னைத் தெரியலையா? நா சுந்தர்!" என்று சிரித்தான். ஞாபகம் வந்து விட்டது. காலேஜில் ஒன்றாய்ப் படித்தவன். இந்த ஐந்தாறு வருஷத்தில் ஒருவன் தோற்றம் இந்தளவு மாறுமா? தலையில் பாதிமுடி கொட்டி.. அதற்கு ஈடாக அடர்த்தியாய்த் தாடி வளர்த்து இருந்தான். நிறைய புஷ்டியாய் இருந்தான். அடையாளம் கண்டு கொண்டபின் சிரித்தாள்.

"சுந்தரா!"

இன்றும் ஜெயித்தான்!

யோகி

"ஆமா!" என்றவன் பக்கத்தில் இருந்த பெண்ணைக் காட்டி, "இது என் ஒய்ப் ராதிகா. இது என் காலேஜில கூட படிச்ச பெண் சித்ரா!" என்று அறிமுகப்படுத்தி வைத்தான். அந்தப் பெண்மணியும் புஷ்டியாய் இருந்தாள். விரல் அகலத்தில் கழுத்தில் இரண்டு கனத்த செயின்கள் அணிந்து இருந்தாள். மணிக்கட்டை வளையல்கள் மறைத்து இருந்தன. பட்டுச் சேலை அணிந்து இருந்தாள். லிப்ஸ்டிக் போட்டு இருந்தாள்.

தன்னைப் பார்த்துக் கொண்டாள் சித்ரா. சுமாரான சேலையும், சாயம் போன ரவிக்கையும், காதில் கவரிங் தோடும், கழுத்தில் மஞ்சள் கயிறும். "அப்படியே இருக்கீங்க" என்றான் சுந்தர்.

"அதான் டக்கென்று அடையாளம் கண்டு பிடிச்சிங்க. உங்களைப் பார்த்ததும் என்னால் அடையாளம் கண்டுக்க முடியல. ஆறு வருஷம் இருக்குமா?"

"சரியா ஏழு வருஷம். தொண்ணூறுல முடிச்சோம்."

"அதற்குள் உங்க தோற்றத்தில் எத்தனை மாற்றம்" என்றாள் சித்ரா.

"எங்க வேலைக்குப் போயிட்டு வீட்டுக்குப் போறீங்களா?"

"ம்..."

"எங்க வேலை பார்க்கறீங்க?"

"பாரடைஸ் ஜுவுளி ஷோரூம்ல."

"ஜவுளிக் கடையிலா" உதட்டைப் பிதுக்கினான். "க்ராஜுவேட் நீங்க. வேற வேலை கிடைக்கலயா?"

"ம்... இப்ப ஒரு ஆறு மாசமாத்தான் வேலைக்குப் போறேன். சூழ்நிலை. பெரிய வேலைன்னா அனுபவம் வேணுமே. ஆறு வருஷமா வீட்டுல சும்மா இருந்தேன். என்ன சேலரி கிடைக்கும். எந்த அனுபவம் இருக்கும்?"

"குழந்தைங்க இருக்கா?"

"ரெண்டு" என்று சிரித்தான். தோளை உலுக்கிக் கொண்டான். "எங்களுக்கு மேரேஜாகி ரெண்டரை வருஷம்தான் ஆறது. இப்ப ப்ரக்னெண்டா இருக்கா."

அவன் மனைவியைப் பார்த்தாள் சித்ரா. எங்கேயோ பார்த்துக் கொண்டு இருந்தாள். இவர்களின் உரையாடல்களில் பிரியம் இல்லாதவள் போல்... நீங்க எங்க இந்தப் பக்கம்."

"ஒரு மேரேஜ் ரிசப்ஷன். வந்தோம்."

"பஸ் வர்ற மாதிரி தெரியல. ஆட்டோல போவோம்" என்றாள் அவன் மனைவி. பேசிட்டு இருக்கேன்ல. கொஞ்சம் கூட மேனர்ஸ் இல்லாம கூப்பிடுறே" என்றான் சுள்ளென்று.

"எவளாவது ஒருத்தி பேசக் கிடைச்சா

போதுமே. என்னு பல்லைக் காட்டுவீங்க" என்றான். சித்ராவுக்கு சுரீர் என்றது. இந்தப் பக்கம் திரும்பிக் கொண்டாள். மேற்கொண்டு பேசுவதா வேண்டாமா என்று தெரியவில்லை. அதனால் மௌனமாய் இருந்தாள்.

"அப்புறம். நம்ம ப்ரண்ட்ஸ் களை எல்லாம் பார்ப்பீங்களா" என்று ஆரம்பித்தான்.

"உங்க மிஸஸ்க்கு லேட்டாயிடுச்சு. முணுமுணுக்கிறாங்க. கிளம்புங்க."

"பஸ் வரணும்லயா..."

ஒரு பஸ் வந்தது. நிற்காமல் சென்றது.

"கூடப் படிச்சவங்க யாரையும் பார்க்கிறது கிடையாது. பார்க்கக் கூடிய வாய்ப்பும் இல்ல. வேலையே சரியா இருக்கு. நீங்க யாரையும் பார்ப்பீங்களா?"



"பார்ப்பதுண்டு. என்னவோ தெரியல. பலர் முகம் கொடுத்துப் பேசுறது கிடையாது. சிலர் தான் பழைய சினேகத்துடன் பேசுவாங்க. சிலர் அடையாளம் தெரிஞ்சாலும் தெரியாத மாதிரி போவாங்க. ஆண்களே இப்படின்னா பொண்ணுகளைப் பற்றிக் கேட்கவே வேணாம். கண்டுக்க மாட்டாங்க. ஏன்னு தெரியல."

சித்ரா சிரித்தாள். "நீங்க இன்னிக்கு ரிச்சா இருக்கீங்க. நம்மோடு படிச்ச எல்லோரும் உங்களை மாதிரி சக்சஸ் ஆன ஆசாமிகளாகவோ, ரிச்சாகவோ இருக்க முடியாது. சிலர் இன்னும் நல்ல வேலையைத் தேடிட்டு இருக்கலாம். வாழ்க்கையோட பலர் போராடிக் கொண்டு இருக்கலாம். பலருக்குத் தாழ்வு மனப்பான்மை கூட ஏற்பட்டு இருக்கலாம். இதன் பொருட்டு நம்மைவிட மோசமாப் படிச்சவன் எல்லாம் லைப்ல சக்சஸ் ஆகி எங்கேயோ போகும் போது, நாம கஷ்டப் படுறோமேன்னு. எனக்குக் கூட அந்த ப்லீங் உண்டு!" வருத்தமான குரலில் சித்ரா சொன்னாள்.

"உண்மைதான். நா படிச்சு முடிச்சதும் ஒரு மெடிக்கல் கம்பெனில ரெண்டு வருஷம் வேலை பார்த்தேன். மூணாவது வருஷம் வெளிய வந்து டீலரானேன். கொஞ்சம் ரிஸ்க் எடுத்தேன். இந்த அஞ்சு வருஷத்துல மேல போயிட்டேன். இப்ப என்கிட்ட பத்துப் பேர் வேலை பார்க்கிறாங்க. ஒரு ப்ளாட் வாங்கிட்டேன். ஒரு பைக் இருக்கு. வீட்டுக்குத் தேவையான எல்லா ஆடம்பரப் பொருளும் இருக்கு. டூரிஸ்ட் வேன் ஒண்ணு வாங்கி வாடகைக்கு விடலாம்னு இருக்கேன். நீங்க சொன்ன மாதிரி பலரும் இன்னும் அடிப்படைத் தேவைகளையே நிவர்த்தி பண்ணிக்க இயலாமதான் வாழறாங்க."

"அப்படி இருக்கும் போது உங்களைத் தெரிஞ்சாக் கூட கண்டும் காணாம போயிடுவாங்க. ஒருவேளை வெற்றி பெறுபவர்கள் மட்டும் உங்களைச் சந்திப்பாங்க. காலேஜ் நட்பை அவங்க மட்டும் புதுப்பிப்பாங்க. நா மிடில் கிளாஸ்க்கும் கீழ். வசதி குறைவான பேமிலி. கல்யாணம் பண்ணினாலும் அதே நிலைமைதான் நீடிக்குது. கணவன் வேன் டிரைவர். ஒரு ஆக்ஸிடெண்ட்ல மாட்டிட்டு பிழைச்சதே பெரிய விஷயம். கால்ல அடி. வேலைக்குப் போக முடியல. சும்மா இருக்க முடியுமா நானும். நா வேலைக்குப் போயே

ஆகணும். நல்ல சம்பளத்துடன் கூடிய பெரிய கம்பெனி வேலையா கிடைக்கும். கிடைக்கிற வேலையைப் பார்க்க வேண்டியதுதான்."

"கஷ்டம்தான்."

"வாங்க நேரமாயிட்டு இருக்கு. ஆட்டோல போகலாம்'' என்றாள் அவன் மனைவி. சேலையை எடுத்துக் கழுத்தைப் போர்த்திக் கொண்டாள். பலருக்கும் அவளது நகை உறுத்தலாய் இருந்து இருக்க வேண்டும். உற்றுப் பார்த்தனர்.

"இன்னிக்குன்னு பார்த்து நீங்க பைக் எடுத்துட்டு வரல" என்று கடிந்து கொண்டாள். சித்ரா திரும்ப அவளைப் பார்த்தாள். நகைகளால் அலங்கரிக்கப்பட்டு இருப்பது போல் இருந்தாள். வாழ்க்கை இவளுக்கு வெகு சந்தோஷமாய் இருக்கக் கூடும். நல்ல கணவன். சுந்தர் காலேஜில் படிக்கும் போதே நல்ல பையன்தான். எந்த வம்புக்கும் போக மாட்டான். ஆனால் சுமாராய்த்தான் படிப்பான். அதனால் என்ன... படிப்புக்கும் அவனுக்கு பின்னாளில் அமையப் போகும் வாய்ப்புக்கும் எவ்வித தொடர்பும் இருப்பதாய்த் தெரியவில்லை. ஒருவன் வாழ்க்கையில் வெற்றிபெற பெரிய படிப்புத் தேவை இல்லை. புத்திசாலித்தனமும், சாமர்த்தியமும் இருந்தால் போதுமோ என்று தோன்றியது.

இதில் பெண்களின் பாடுதான் கஷ்டம். அவள் எத்தனை சாமர்த்தியமானவளாய் இருந்தாலும் சரி, படித்தவளாய் இருந்தாலும் சரி புகுந்த வீடு எப்படி உள்ளதோ அவ்வாறுதான் அவள் வாழ்க்கை தீர்மானிக்கப் படுகிறது. காலேஜில் நான் நல்ல படிப்பாளிதான். என் வாழ்க்கை இன்று மெச்சும் படியாகவா உள்ளது. படித்த படிப்பை அப்போதே பயன்படுத்திக் கொள்ளாததுதான் காரணமா?

கணவன் வேன் டிரைவர். குடிப்பழக்கம் இருந்தால் என்னாகும். சொன்னால் கேட்பது கிடையாது. கடைசியில் விபத்தில் சிக்கிக் கொண்டு வீட்டில் சும்மா இருக்கிறான். வீட்டின் பக்கத்தில் லாட்டரி சீட்டுக் கடை ஒன்று ப்ளாட்பாரத்தில் வைத்து நடத்துகிறான். அவன் செலவுக்கு மட்டும் சம்பாதித்துக் கொள்கிறான். ரெண்டு குழந்தைகள். கஷ்டத்தோடு போராட வேண்டி உள்ளது.

"ஏங்க கிளம்புங்க. பத்து மணிக்கு டீ.வில உலக அழகிப் போட்டி ஒளிபரப்புறாங்க. பார்க்கணும்." அவசரப்பட்டாள் சுந்தரின் மனைவி.

சுந்தர் சிரித்தான். "சரி பார்ப்போம் சித்ரா..." ஆட்டோவை அழைத்தான். ஐம்பது ரூபாய் கேட்டான் ஆட்டோ டிரைவர். முப்பது ரூபாய்க்கு வாப்பா."

"சும்மா இருங்க. நாற்பது ரூபாய் வாங்கிக்கோப்பா" என்று அவன் மனைவி ஆட்டோவில் ஏறினாள். இவள் பக்கம் கையசைத்தான். ஒரு வார்த்தை கேட்டு இருக்கலாம். "எந்தப் பக்கம் போறீங்க சித்ரா. வழில வேணும்னா இறக்கி விட்டுடுறோம்" என்று கேட்கவில்லை. அவனுக்கென்ன தான் சம்பாதிப்பதை, தன்னிடம் பத்துப் பேர் வேலை பார்ப்பதை, ப்ளாட் வாங்கியதை, பைக் இருப்பதை. தன் மனைவிக்கு நகை செய்ததை, ஜம்பம் அடித்து கொள்ள ஒருவர் தேவை. இன்று நான் கிடைத்தேன். அதுவும் சிநேகித ஜம்பம் அடிக்க சொல்லித் தரவா வேண்டும். போய்விட்டான்.

ஒரு வழியாய் ஒன்பதே முக்காலுக்கு வந்த பஸ்ஸில் கூட்டத்தில் நசுங்கி ஏறினாள். தன் ஸ்டாப்பில் இறங்கியபோது சித்ரா மணி பார்த்தாள். பத்து முப்பத்தி ஐந்து. எப்போதும் பத்து மணிக்குள்ளாக வீட்டிற்குப் போய் விடுவாள். இன்று கூட்டம் காரணமாய்த் தாமதம். நடந்தாள். இன்னும் எவ்வளவு நாளைக்கு இப்படி கஷ்டப்பட வேண்டுமோ. மாசம் ஏழு நூறு ரூபாய் சம்பளத்துக்குக் காலை எட்டரை மணிக்குக் கிளம்பி. இரவு திரும்பப் பத்து மணிக்கு மேலாகி விடுகிறது. என்றைக்கு விடிவு ஏற்படுமோ!

வீட்டில் கால் வைத்ததுதான் தாமதம். ஒரு அட்டையை எறிந்தான் சித்ராவின் கணவன். "மணியைப் பாருடி. திமிரா? ஊரைச் சுத்திட்டு வர்றியா?" என்று கேட்டான். அவனால் சட்டென்று எழுந்து நடக்க முடியாது. முன்பெல்லாம் அடிப்பான். ஆக்ஸிடெண்ட் ஆனபிறகு வேகமாய் நடக்க முடியாது. சித்ரா பேசாமல் இருந்தாள். "என்னடி கேட்டுட்டு இருக்கேன் பேசாம இருக்கே. சம்பாதிக்கிற கொழுப்பா? எவன் கூடவும் சுத்திட்டு வர்றியா?'' என்று கேட்டான்.

"ஆமா, சுத்திட்டுத்தான் வர்றேன். என்ன பண்ணணுங்கிறே..." என்று வெடித்தாள். ஏனோ அவள் மனக்கண்ணில் சுந்தரின் மனைவியும் அவளது ஆடம்பரமும் தோன்றி மறைந்தது.



ஊமைப்பகை

தோப்பை வளைய வந்தேன்
காதை காற்றுக்குத்
திறந்து வைத்தவாறு.
ஆனால் எப்போதும் போல்
இன்று குயிலைக் காணோம்.
கண்ணுக்குத் தெரியாமல்
காதுக்குள் பிரசன்னமாவது
குயில்களுக்கு கூடப்பிறந்த விளையாட்டு
காதுகளில்
இன்று ஏன் குயில் தெரியவில்லை?
கோபம் என்னிடமில்லை என்றாவது
குயில் என்னிடம் சொல்லியிருக்கலாம்
ஒரு சின்னக் குரலில்...
ஊமைத் தோப்பும், காலிக் காற்றும்
வருத்தியது என்னை வகை தெரியாமல்.
குயிலை மிக நம்பி விட்டதால்
மனதின் சொந்தக் குரலையும்
இழந்து நின்றேன் இன்று.
திடீரென சாவோலைப் பறையென
காக்கைகளின் ஓலம்;
பிண்டத்திற்கு அலையும்
பேய்களின் பரபரப்புடன்.
"முட்டை பரோட்டா
முள்ளு முறுக்கு வெங்காய போண்டா
இட்லி வடை சாதா மசாலா..."
பலகார வண்டிப் பாம்புகள்
தோப்புக்குள் ஊடுருவுகிறது
பல பக்கங்களிலும்....
நெருப்பு நாக்குகளால்
காற்றைத் தீய்த்தவாறு.
ஒடுங்கிப் போன குயில்களுக்கு
ஊமைப் பகை ஏனென்று
ஓரளவு புரிந்து கொண்டேன்.
கிளையை கருக்கி ஒடித்து
குயிலைத் தின்ன வரும்
நகரப் பாம்புகள் வெகு தூரத்திலில்லை.
உணர்ந்து கொண்டேன்
கண்ணும் காதும்
காசடைந்து போய்விட்ட பாம்புகளுக்கு
கூவத் தேவையற்ற பிண்டங்கள்
இந்தக் குயில்கள்.

— எஸ். வைதீஸ்வரன்

வர்த்தமானன் வழங்கும் மற்றொரு மாபெரும் முன் வெளியீட்டுத் திட்டம்.

முதலில் வியாசபாரதம், வால்மீகி இராமாயணம் , ஸ்ரீமத் பாகவதம், பன்னிரு திருமுறைகள், திருவிளையாடற் புராணம் நூல்களின் முன் வெளியீட்டுத் திட்டத்தின் மாபெரும் வெற்றியினைத் தொடர்ந்து தற்போது மற்றொரு மாபெரும் முன் வெளியீட்டுத் திட்டம்.

வழக்கம் போல சலுகை சலுகைமேல் சலுகை இலவச நூல் ஆகிய அனைத்தும் உண்டு

பல பதிப்புகளைக் கண்ட எமது "கம்பராமாயணம் - மூலமும் தெளிவுரையும்" மீண்டும் வெளிவருகிறது.

கம்பராமாயணம்

மூலமும் தெளிவுரையும் - 5000 பக்கங்களில் 9 தொகுதிகள் விலை 1000.00

முன்வெளியீட்டுச் சலுகை 250.00

750.00

வர்த்தமானன் டிரஸ்ட் தரும் உதவித் தொகை 250.00

சலுகை விலை..... 500.00

பாலகாண்டம்(1)
அயோத்தியாகாண்டம்(1)
ஆரணியகாண்டம்(1)
கிஷ்கிந்தா காண்டம்(1)
சுந்தர காண்டம்(1)
யுத்த காண்டம்(4)
ஆக 9 தொகுதிகள்.

இலவச நூல் : உத்தர காண்டம்

மூலமும் தெளிவுரையும் - 800 பக்கங்களில்-2 தொகுதிகள்.. ரூ. 200.00

முன்பதிவு செய்யக் கடைசி தேதி : 30.5.98 முந்திக் கொண்டு 16.5.98 க்குள் பதிவு செய்வோர்க்கு மட்டுமே சலுகையுடன் இலவச நூல்கிடைக்கும்.

30.9.98 லிருந்து பணம் வந்த வரிசைப்படி நூல்கள் அனுப்பப்படும்

சலுகை விலையான ரூ.500-யினை இரு தவணையாகவும் செலுத்தலாம். அதாவது ரூ.200 மட்டும் அனுப்பிப் பெயரினைப் பதிவு செய்து கொள்க. மீதத் தொகை ரூ.300 + தபால், பேக்கிங் செலவு ரூ.40 சேர்த்துத் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம். செப்டம்பர் மாதம் 30ம் தேதியிலிருந்து பணம் வந்த வரிசைப்படி நூல்கள் அனைத்தும் VPP யில் அனுப்பப்படும்.

நேரில் பணம் செலுத்துவோர் கவனிக்க: ரூ.200 (ரொக்கமாக மட்டும், Cheque ஏற்கப்படமாட்டது) எமது அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெறலாம். ரசீதினில் நூல்கள் தயாராக இருக்கும் நாள் குறிப்பிட்டுத் தரப்படும். அந்த நாளில் நேரில் வந்து மீதித் தொகை ரூ.300 மட்டும் செலுத்தி நூல்களைப் பெற்றுச் செல்லலாம். *எமது அலுவலக வேலை நேரம் 9 a.m. - 7 p.m உணவு இடைவேளையின்றி.*

மேலும் சில தகவல்கள்: D.D அனுப்புவோர் " Varthamanan Pathippagam" என்ற பெயரில் எடுத்து. Self Addressed Card ஒன்றும் இணைத்து அனுப்புக. MO/DD அனுப்புவோர்க்கு தபாலில் தான் நூல்கள் அனுப்பப்படும். நேரில் தரப்படமாட்டாது. Cheque ஏற்கப்படமாட்டது.

MO/DD அனுப்ப வேண்டிய முகவரி : VARTHAMANAN PATHIPPAGAM
ARR Complex, 141, Usman Road, T. Nagar, Chennai - 17. Near Panagal Park, ☎ : 8257995

கம்பர் அருளிய இராமாயணம்
ஒட்டக் கூத்தர் அருளிய உத்தரகாண்டம்

நூல்களைப் பற்றி ஒரு குறிப்பு

இந்தியாவில் எத்தனை மொழிகள் உண்டோ அத்தனை மொழிகளிலும் இராமாயணம் உண்டு. இது தவிர, ஒரே மொழியிலேயும் பல இராமயண நூல்கள் தோன்றியிருக்கின்றன. இதிலிருந்தே இந்திய மக்கள் மீது இராம கதைக்கு உள்ள செல்வாக்கைப் புரிந்து கொள்ளலாம். எத்தனை இராமயண நூல்கள் இருந்தாலும் அவை அத்தனைக்கும் ஊற்றாக இருப்பது வால்மீகி முனிவர் இயற்றிய இராமாயணம் தான்!

அந்த மாமுனிவரின் கதையை அடிப்படையாகக் கொண்டே பிற்காலப் புலவர்கள் தங்கள் தங்கள் மொழி மரபுக்கேற்ப, பண்புக்கேற்ப நிகழ்ச்சிகளைக் கூட்டியும், குறைத்தும், மாற்றியும் இராம கதையை வகுத்தனர். இந்த வகையில் அற்புதமான ஒரு கலைப்படைப்பைத் தோற்றுவித்தார், கம்பர்! அவரது காப்பியத்தில் கவிதைப் பிரவாகத்தையே காணலாம்! பார காவியம் பாடிய அம் மாபெரும் புலவர் ஓர் எல்லையில் இராம பிரானின் கதையை நிறுத்திக் கொண்டார். இராவணனை வீழ்த்தி அயோத்தி சென்று ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இராம பிரான், அனுமன் முதலானோர்க்கு விடை கொடுத்தனுப்புவதோடு கம்பராமாயணம் முடிகிறது. இராகவனின் பிற்கால நிகழ்ச்சிகளைப் பற்றிக் கம்பராமாயணம் எதுவும் கூறவில்லை.

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் அந்தப் பணியைச் செய்து முடிக்கிறார். அவர் இயற்றிய உத்தர காண்டம் என்னும் நூல் தனித் தன்மை வாய்ந்தது, மகாகவி கம்பர் குறிப்பாகச் சொல்லிவிட்டுப் போகும் பல நிகழ்ச்சிகளை உத்தர காண்டம் விரிவாகப் பேசுகிறது. சில நிகழ்ச்சிகளை இங்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

இராமபிரானின் ஆட்சியின் மாட்சி (இராம ராஜ்யம்) உத்தரகாண்டத்தில்தான் கூறப் படுகிறது.

இராவணனின் பிறப்பு, தவம், அவன் பெற்ற வரங்கள், சாபங்கள் ஆகியவை இவ்வுத்தர காண்டத்தில் விரிவாக இடம் பெற்றுள்ளன. இராவணன் தவம் உடையவன்; மூன்று கோடி ஆண்டு வாழ்நாளையுடையவன்; சில சாபங்களும் அவனுக்கு உண்டு என்ற செய்திகள் கம்பராமயணத்திலும் கூறப்படுகின்றன என்றாலும் இவை பற்றிப் படலம் படலமாகப் பாடுவது உத்தர காண்டம் தான் ! பல கன்னியரை , திருமணமான மகளிரைக் கற்பழித்த கொடியவன் இராவணன். இத்தக் கொடுமையில் அவன் பெற்ற பயிற்சிதான் சீதையைக் கவர்ந்து செல்லும் அளவுக்கு அவனைக் கொண்டு போய் நிறுத்தியது. வேதவதியும், அரம்பையும், பல கன்னியரின் தாயாரும் இட்ட சாபக் கணைகள் அவன் மீது எந்த நேரத்திலும் பாயக் காத்திருந்த செய்தியை உத்தரகாண்டம் தெரிவிக்கிறது.

மேகநாதன் இந்திரனை வென்று இந்திரசித்து என்ற பட்டம் பெறும் மேன்மையும் இவ்வுத்தரகாண்டம் உணர்த்தும் செய்தியாகும்.

பரதன், இலக்குவன், சத்துருக்கன் ஆகியோர் தனித் தனிநாடு பெறும் செய்தியையும் இதில் காணலாம். குசலவர் பிறப்பும், மேன்மையும், வான்மீக முனிவரின் காப்பியப் பிரவேசமும் உத்தரகாண்டத்தின் தனிச் சிறப்புகளாம்.

இராமாவதார நோக்கம் ஈடேறுகிறது. இராமபிரான் தன் மூல பலத்துடன் கலப் பதற்கேற்ற காலம் வருகிறது. அப் பெருமான் வைகுண்டம் அடைவதுடன் உத்தர காண்டம் நிறைவு பெறுகிறது.

✉ யார் முதலில் பேசினால் நமக்கென்ன...? மின்தடையைச் சரிசெய்து எங்களை வியர்வை மழையிலிருந்து சீக்கிரம் காப்பாற்றுங்களேன்!

ராஜி.
கமுதி,

✉ அமரர் கல்கியின் 'சோர்வு கொள்ளாதே' என்ற அமரத்வம் வாய்ந்த கவிதையை வெளியிட்டு புத்தாண்டில் புத்துணர்வை ஊட்டியுள்ளீர்கள்.

த. சத்தியநாராயணன்.
அயன்புரம்,

✉ சாருகேசியின் 'வெளிவராத அரசியல் விளம்பரங்கள்' அசத்தலான கற்பனை!

பூனாம்பாளையம், ஆர். பி. ஜெயச்சந்திரன்.

✉ அர்த்தமுள்ளதும் அவசியமானதுமான அறிவுரைகளைத் தலையங்கம் வலியுறுத்தியுள்ளது. பி.ஜே.பி.க்குத் தரப்பட்டிருக்கும் வாய்ப்பு, ஸ்திரமான ஆட்சியை எதிர்பார்த்துத்தான் என்பது நூறு சதவீத உண்மை. குறுகிய காலத்தில் வளர்ந்து, பெரும்பான்மை பெறும் தேசியக் கட்சியாக வந்து விட்ட நிலையில், பி.ஜே.பி. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நல்லாட்சி வழங்கினால் நீடித்து நிற்கலாம். தனது சில வறட்டுக் கொள்கைகளை விட்டுக் கொடுத்து, ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டியது இக்கட்சியின் தற்போதைய தலையாய கடமை.

ஜி. ராமதாஸ்.
கணபதி அக்ரஹாரம்,

✉ உராங் உடான் குரங்குடன் டிபன் சாப்பிட ஆசை... எதற்கும் "சிங்கப்பூர் இலவச டூர்" என்று வாசகர்களுக்கு ஒரு போட்டி நடத்துங்களேன்!

கோவை, ஏ.எஸ். இராமசாமி.

✉ பாகமதி விவகாரம் குறித்த டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பேட்டியில், 'உணர்ச்சிவசப்பட்டு, இமோஷனலாகக் கையாள வேண்டிய விஷயமல்ல இது; அறிவுர்தியாகச் செயல்பட்டு, தக்க புள்ளி விவரங்களுடன்... வாதாட வேண்டிய விஷயம்' என்று அறிவுபூர்வமாகவே விளக்கி இருந்தார். இவரிடம் கேட்கப்பட்ட இதே கேள்விகளை ஓர் அரசியல்வாதியிடம் கேட்டிருந்தால் பதில் எப்படி இருந்திருக்கும் என்பது நமக்குத் தெரிந்த விஷயம்தான்! அந்த வகையில் இப்பிரச்னை குறித்து மிகச் சரியான நபரிடம் பேட்டி கண்டு வெளியிட்ட கல்கியின் பணி மெச்சக்கூடிய ஒன்றாகும்.

எஸ். இரோஜந்திரன்.
கபிஸ்தலம்,

✉ பா. ராகவனின் 'வண்டார் குழலி' சிறுகதை, ஒவ்வொரு மனிதனின் இளம் வயதில் ஏற்படும் அனுபவச் சிலிர்ப்பு. ஆழ்ந்த, தெளிந்த நீரோட்டமான நடை. பல ஆண்டுகள் முன்னோக்கி, இளமைக் கால அனுபவங்களை அசைபோட வைத்த கதை. பாராட்டுக்கள்.

எஸ். பூபதி.
சென்னை - 49,

✉ ஏவி.எம். சரவணன் பேட்டி கண்டேன். குடும்பக் கதைகளுக்கு வரவேற்பு இல்லை என்று அவர் கூறியிருப்பது ஏற்கத்தக்கது அன்று. தாலி சென்டிமெண்ட், வரதட்சணை, மாமியார் மருமகள் பிரச்னை என்ற குறுகிய வட்டத்துக்குள்ளேயே, குதிரை ஓட்டினால் படம் எப்படி ஓடும்? ஒவ்வொரு நடுத்தரக் குடும்பமும் பிரச்னைகளை தினம் சந்திக்கின்றன. அவற்றைக் கவனித்துத் தொகுத்துப் படம் எடுக்கலாமே!

ஜெ. பாபு.
குடந்தை,

✉ தங்கர்பச்சானை ஒளிப்பதிவாளராக மட்டுமே தெரிந்த எங்களுக்கு, எழுத்தாளர் என்ற வேறொரு முகத்தையும் அறிந்து கொள்ள முடிந்தது. அவரது பேட்டியில் கோடை வெயிலைக் காட்டிலும் 'அனல்' தெறித்தது. சொந்த ஊர் நெய்வேலி என்பதாலா?

துளசி கணபதி
சிதம்பரம்,

✉ கங்காருக் குட்டி போல, கல்கியுடன் குட்டி கல்கி (சுவர் உலகம்) இணைந்து வந்தது புத்தாண்டுப் பரிசுதான்! சினிமா உலகைப் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆரூர் அ...
திருவாரூர்,

கங்காருக் குட்டிபோல்...

வட்டமேஜை



காதலா காதலா

ஒரு மகாநதியையோ, நாயகனையோ எதிர்பார்த்துக் கொண்டு போகவில்லைதான். ஆனால் அபூர்வ சகோதரர்கள் அல்லது மைக்கேல்... ஆகிய படங்களில் வெளிப்பட்ட நகைச்சுவையின் ஒரு பகுதி கூட இதில் இல்லை எனும் போது ஏமாற்றம்!

மேக்கப்பில் இந்தியத் தாத்தாவாகவோ அவ்வை மாமியாகவோ கூட ஆகவேண்டாம். அட்லீஸ்ட் ஒரு மீசை கூடாதா? மழுமழு கமலின் முகத்தில் வயது தெரிகிறது. 'கரகர குரலில் குப்பைத்தொட்டி பாஷை'யும் அவர் பேசிப் பலமுறை கேட்டாகி விட்டது. எனினும் கல்கி ('பகவான்') தோற்றத்தில் ஆனந்தவிகடானந்தா என்ற போலிச் சாமியாரின் போதனைக் கூட்டத்தில் நொண்டிக் கிழவன் வேடமிட்டுக் கலந்து கொண்டு நடக்க முடிந்த இளைஞனாக மாறும் காட்சியில் கமல் கை தட்டல்களை அள்ளிக் கொள்கிறார்.

தலைப்பில் இரண்டு 'காதலா'க்கள் என்றாலும் பிரபுதேவாவிற்கு நல்ல சப்போர்டிங் ரோல் மட்டுமே என்ற உணர்வு எழுகிறது.

தேவலோக ரம்பை - ஊர்வசி நடனம் போல நடன மன்னர்களான கமல், பிரபுதேவாவின் 'காசு மேலே காசு வச்சு' பாடல் நடனம் நிஜமாகவே கலக்கல்தான். நடன அசைவுகளில் பிரபுதேவாவிடம் துள்ளல் கொஞ்சம் தூக்கலென்றால் கமலிடம் கச்சிதம் ஒருபடி அதிகம். இந்தப் பாடலில் இந்த இருவரையுமே தூக்கிச் சாப்பிட்டு, ரசிகர்களின் ஒட்டு மொத்த கரகோஷத்தை அள்ளிக் கொள்வது ஒளிப்பதிவு. பிரபுதேவாவின் ரப்பர் வளைவு நடனத்துக்குத் துளியும் சளைக்காமல் சுழன்று சுழன்று நர்த்தனமாடுகிற கேமரா. மாறுபட்ட செட்டிங்கை வேறுபட்ட கோணத்தில் காட்டுகிற லைட்டிங், வித்தியாசமான விருந்து.

படத்தில் நான்கு இரைச்சல்கள் - சாரி பாடல்கள். இசையமைப்பாளர் மற்றவர்களை 'சவுண்ட் என்ஜினியர்' என்று கிண்டலடிப்பதற்கு முன் தமது சரக்கை சுத்தப்படுத்துவது நல்லது.

தேவன் முருகனாக கமலும், தேவியர் இருவராக சௌந்தர்யா, ரம்பாவும் வரும் காட்சிகளில் நாகரிகம், நகைச்சுவை இரண்டும் ஆப்சென்ட். அதே போல் சந்தர்ப்ப சூழலால் இரு ஜோடிகளும் மாறிக் கொள்ளும் முடிச்சு மிக கண்ணியக் குறைவு. அந்தச் சூழல்கள் வேறு, வெகு பலவீனமாக இருப்பதால் இந்த அபத்தம் மேலும் பளிச்.

பல திறமைசாலிகள் வீணடிக்கப்பட்டிருக்கிறார்கள் - மௌலி, ஸ்ரீவித்யா, சோ, நாகேஷ்.

"தப்புப் பண்ணிட்டேனே, தப்புப் பண்ணிட்டேனே" என்று படத்தில் அடிக்கடி புலம்புகிறார் எம்.எஸ். விஸ்வநாதன். படத்தைப் பார்த்த நாமும்தான்!

— ஜி

மும்பை மசாலா:

குற்றப் பத்திரிகை வெளியீடு!

கொஞ்ச நாட்களாகக் 'காண வில்லை' பகுதியில் இடம் பெற்றிருந்த அண்ணா ஹசாரே, புத்தகமும் கையுமாக வெளிப்பட்டு விட்டார். சிவாங்கர், சுதார் என்ற இரு மந்திரிகள் மீது இவர் குற்றப் பத்திரிகை வாசித்ததும், அவரைச் சரிக்கட்ட புராணிக் கமிட்டி நிறுவப்பட்டதும், அது

ஓய்வு பெறும் போலீஸார் தரும் அதிர்ச்சி!

சிவாங்கரை மன்னித்து, சுதார் மீது மட்டும் ஊழலை ஊர்ஜிதப் படுத்தியதும் மக்கள் நினைவிலிருந்து நழுவ ஆரம்பித்தது. இந்தச் சமயத்தில் தூதாட் கமிஷன் நிறுவப்பட்டு, சுதார் மீதான ஊழல்கள் மறுபடியும் 'விசாரிக்'கப்பட்டு, அவர் 'நிரபராதி' என்று தீர்ப்பும் வழங்கப் பட்டுவிட்டது. ஆனால் ஜோஷி அதை வெளியிடவில்லை என்று சுதார் கொதித்துக் கொண்டிருப்பது ஒரு புறமிருக்க, தீர்ப்பு சரியில்லை என்று ஹசாரே முழங்குகிறார். புராணிக் கமிட்டி ஒன்பது குற்றச்சாட்டுகளை விசாரித்தது; ஆனால் தூதாட் கமிஷன் இரண்டே இரண்டு குற்றச் சாட்டுகளுக்குத் தான் விசாரணை நடத்தியது எனக் கூறி, மற்ற குற்றங்களை ஆதாரத்துடன் நிரூபிக்க, 'வைப்வ் சாலி சுதார் காம்' என்ற புத்தகத்தையே வெளியிட்டுள்ளார்! அண்ணா மீது முந்நூறு குற்றச்சாட்டுகளை வைத்திருக்கும் சுதார், அடுத்து அண்ணா புராணமே வெளியிடுவாரோ என்னவோ?



• திலீப் குமார்

சந்தேகம், தீராத வியாதி!

பாகிஸ்தானின் காவ்ரி மிஸைல் விஷயத்தில் சைனாவின் கை இருக்குமோ என அமெரிக்கா சந்தேகப்படுவதெல்லாம் ஒரு சந்தேகமா? சந்தேகமென்றால் என்னவென்று மகாராஷ்டிர மாநில அரசியல்வாதிகளிடம் தான் கற்றுக்கொள்ள வேண்டும். முன்னாள் விவசாய மந்திரி சுதாரின் 'சிவதீர்த்' பங்களாவுக்கு வெளியே, இவரது நடவடிக்கைகளை ஒரு சி.ஐ.டி. சந்தேகத்துடன் கண்காணிக்க, சுதாரின் மெய்க்காப்பாளர் இவரை, சுதாரைத் தீர்த்துக்கட்ட வந்தவராகச் சந்தேகித்துச் சுட்டுவிட்டார். அந்த ஆசாமியை ஏவியதே ஜோஷி தானோ என சுதார் சந்தேகித்து, அந்த சந்தேகங்களுக்கு ஒலிவடிவம் கொடுத்து வருகையில், ஜோஷியை இப்படி நேரடியாக எதிர்ப்பதற்கு, இவருக்கு மேலிடத்தின் (தாக்கரே குடும்பம்) ஆதரவு இருக்குமோ என சிவசேனைக்காரர்கள் சந்தேகிக்கிறார்கள். தூதாட் அறிக்கை என்ன... ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் (மும்பை கலவரம்) அறிக்கையையே வெளியிடாமல் 'இதோ... அதோ' என்று ஜோஷி கண்ணாமூச்சி ஆடுவதைக் கண்டிக்காமல் மேலிடம் மௌனிக்கிறதே என ஏனையோர் சந்தேகப்பட, அதெல்லாம் வெளிவந்தால், அரசு நீடிப்பதே சந்தேகம் என்று சந்தேகத்துக்கிடமில்லாமல் அவர்கள் தெரிந்து வைத்திருப்பதால்தான்,

• லதா மங்கேஷ்கர்



அவர்கள் சும்மாயிருக்கிறார்கள் எனப் பிரிதொரு சாராருக்குச் சந்தேகம்! சந்தேகமேயில்லை... இம்முறை வெயில் கொஞ்சம் கடுமைதான்!



• சிவாஜி

கோபம் ஏனோ?

ஒரு 'போராட்ட' புகைப்படம் மற்றொரு போராட்டத்துக்கு வித்திட்டிருக்கிறது! அகில்யா ரங்கனேகர், மிருணாள் கோரே, கமலா தேசாய் போன்ற மங்கையர்க்கரசிகள், 20 வருடம் முன்பு நடத்திய 'கரீபி ஹடாவ்' (ஏழைமையை ஒழி) போராட்ட புகைப் படத்தை ஏதோ லைப்ரரியிலிருந்து எடுத்து, அகில்யாவுக்கு குளுகுளு கண்ணாடி மாட்டி, வேறொரு பெண்மணிக்கு நகைகளை எல்லாம் அணிவித்து 'வெப்பத்தை எதிர்த்து, குல்குந்துக்கு ஆதரவளிப்பது' போல் ஊர்வலம் நடத்துவதாக மாற்றித் தங்கள் குல்குந்து விளம்பரத்தில் வெளியிட்டு விட்டார்கள், சரக் ப்ரைவேட் லிமிடெட்காரர்கள்! பிரபல மராத்தி தினசரியில் வந்த விளம்பரத்தைக் கண்டு வெகுண்டெழுந்த பெண்மணிகள் குல்குந்து தயாரிப்பாளர்களை நோக்கி மீண்டும் ஆவேசப் படை எடுப்பு நடத்தினர். 'பேட்ஸ் க்ளாரியன்' என்ற இவர்களது விளம்பரக் கம்பெனிக்கு, புதிய படம் எடுக்க நேரமில்லாததால், பழைய ஆல்பத்திலிருந்து இந்தப் படத்தை உபயோகித்ததாகவும், அதில் இத்தனை பிரசித்தமான மாதர்கள் இருப்பார்கள் என அவர்கள் கனவிலும் எண்ணவில்லை என்றும் சத்தியம் செய்து, அம்மணிகளின் கோபத்தை இரட்டிப்பாக்கினர். படத்தை உபயோகித்த குற்றத்தை மன்னித்தாலும், தங்களைப் போன்ற பிரபலங்களை அடையாளம் கண்டு கொள்ளாத குற்றத்தை எப்படி சகித்துக் கொள்வது என்று தவிக்கிறார்கள்!

கெடுத்தவனா? கொடுத்தவனா?

காவல்துறை வாழ்க்கை, இப்போதெல்லாம் பலரை வாலண்டரி ரிடையர்மெண்ட் வாங்கிக் கொள்ள வைத்திருக்கிறதாம். ஒரு சிலர், விவசாயம் செய்ய, ஊரைப் பார்க்கப் போய்விடுவதில் ஆபத்தொன்றுமில்லை; பலர் ப்ரைவேட் செக்யூரிட்டி ஏஜென்ஸிகளை அதிக சம்பள ஆசையில் அணுகுவதும், ஜீரணிக்க முடிந்த யதார்த்தம்தான். ஆனால், எந்த அண்டர் வர்ல்டையும், கிரிமினல்களையும் எதிர்த்தார்களோ, அதே குண்டர் கூடாமில், ரிடையரான பிறகு சென்று போலீசார் தஞ்சமடைவதுதான், அவமானகரமான அதிர்ச்சியாயிருக்கிறது. அதுவும் 'ஷார்ப் ஷூட்டர்'களுக்கு அங்கே எக்கச்சக்க வரவேற்பாம். போலீசில் இருக்கும் வரை இவர்கள் தூக்கத்தைக் கெடுப்பவர்கள், அதிலிருந்து விலகியதும் தங்கக் கட்டிலும் பட்டு மெத்தையும் கொடுக்கிறார்களாம். அதனால் பலருக்கு, கெடுப்பவர்களைக் காட்டிலும் கொடுப்பவர்களைத்தான் பிடித்திருக்கிறதாம்!

கஷ்டமில்லாமல் ஒரு விழா!

எஸ்.ஐ.ஈ.எஸ், பாரதி ரிஸர்ச் ஃபவுண்டேஷன், இந்தியன் எக்ஸ்ப்ரஸ் – மூவரும் இணைந்து, திரைத்துறையில் முப்பெரும் திலகங்களுக்கு, மும்பையில் விழா எடுத்தனர். தாம் பாடிய பாடல்களின் லிஸ்டைக் காட்டிலும் நீண்ட இரட்டைப் பின்னலுடன் லதா மங்கேஷ்கர், அவரது தமிழ் 'அண்ணன்' சிவாஜி, இந்தி 'பையா' திலீப்குமார் ஆகியோர் ''Life time achievement'' அவார்டைப் பெற்றனர். பாடகியாவதற்கு முன், நடிகையாக, அரிதாரம் பூசிக் கொண்டு, வலுக்கட்டாயமாய் அழுது சிரித்த கஷ்டங்களை லதா நினைவு கூர்ந்தார். தன்னால் ஆங்கிலத்திலும் இந்தியிலும் சரளமாகப் பேச முடிந்த போதிலும், கூட்டத்தினர் அதைப் புரிந்து கொள்ள முடியாமல் கஷ்டப்படுவார்களே என சிவாஜி விசனப்பட்டார். நடிப்புத் தொழிலில், வில்லித்தனமான லலிதா பவாரை தன் சாதுவான தாயாக பாவித்து அன்பு செய்வதிலுள்ள கஷ்டம் ஒருபுறமிருக்க, அவர் கண்ணடித்து, பான் சுவைத்து, நமுட்டுச் சிரிப்புடன் படுத்திருக்கையில், அவரை மரித்தவராக நினைத்துப் புலம்ப வேண்டிய பெரும் கஷ்டத்தை விவரித்தார் திலீப் குமார். அவரவர் தங்கள் கஷ்டங்களைப் பகிர்ந்து கொண்டாலும், விழாவை ரப்பராக இழுத்தடித்து ஆடியன்ஸை கஷ்டப்படுத்தாமல், 'சிக்'கென முடித்ததற்கு, நிர்வாகிகளை கஷ்டமில்லாமல் பாராட்டலாம்!

மும்பையிலிருந்து : **ஜெயஸ்ரீ ராஜ்**

காதல் டைரிக் குறிப்பு :

ஒருவேளை வாழ்வில் நாம் இணைய முடியாமல் போனால் நான் தற்கொலை செய்து கொள்ள மாட்டேன். தினமும் உன்னை நினைப்பதற்கு எனக்கு உயிர் அவசியம்.

பிருந்தா, அவன் மனத்தில் உள்ள உணர்வுகளைப் புரிந்து வைத்திருப்பதாக எதைச் சொல்லப் போகிறாள் என்று அரவிந்திற்கு படபடப்பான ஆர்வம் ஏற்பட்டது.

"என்ன.... புரிஞ்சிட்டிருக்கீங்க?" என்றான் தயக்கமாக.

"நான் பழகின வரைக்கும் உங்களைப் பத்தி என் மனசில ஏற்பட்டிருக்கிற அபிப்ராயத்தைச் சொல்றேன். சிலதை நீங்க ஒத்துக்கலாம். சிலதை மறுக்கலாம்."

"பரவால்லை, சொல்லுங்க பிருந்தா."

"உங்ககிட்ட நல்ல பண்பாடுகள் நிறைய இருக்கு. உதவி செய்யற குணம் இருக்கு. நாகரீகம் இருக்கு. உண்மையை வெளிப்படையாப் பேசற பக்குவம் இருக்கு. தப்புன்னு உணர்ந்தா மன்னிப்புக் கேக்க நீங்க தயங்கறதில்லை."

நிறுத்தி தன் கைப்பையின் பட்டனை நிமிண்டினாள்.

"அப்புறம்?" என்றான் புன்னகையுடன்.

"இதெல்லாம் உங்க ப்ளஸ் பாயிண்ட்ஸ். இப்ப உங்களோட மைனஸ் பாயிண்ட்ஸா நான் நினைக்கிறதைச் சொல்றதுக்குக் கொஞ்சம் தயக்கமா இருக்கு அரவிந்த்."

"எதுவா இருந்தாலும் சொல்லுங்க."

"வலிக்கலாம். வருத்தப்படக் கூடாது."

"உங்க ஆலோசனை வேணும்னு நினைச்சித்தானே நானே உங்களைத் தேடி வந்தேன். சொல்லுங்க. வருத்தப்பட மாட்டேன்."

"வாழ்க்கை பத்தின உங்க பார்வை ரொம்ப சுருங்கிப் போய் இருக்கு. சில விஷயங்கள்லே நீங்க அசைக்க முடியாத பிடிவாதக்காரர். கொஞ்சம் அவசரம் இருக்கு எதிலயும். பொறுமை திடீர்னு தொலைஞ்சி போயிடும். 'இதுதான் சரி'ன்னு சில கொள்கைகள்ல மாறாத நம்பிக்கை வெச்சிருக்கீங்க. கண்டிப்பா ஈகோ இருக்கு. ஒவ்வொரு சம்பவத்துக்கும் உங்க கருத்துக்குச் சாதகமா நீங்களா ஒரு அர்த்தம் கொடுத்துக்குவீங்க."

சற்றே நெளிந்த அரவிந்த், "அவ்வளவு தானா, இன்னும் இருக்கா?" என்றான்.

"பார்த்தீங்களா, முழுக்க கேட்டுக்கறதுக்குக் கூட உங்ககிட்ட பொறுமை இல்லை."

"சரி, சொல்லி முடிச்சிடுங்க."

"இல்லை, வேணாம். போதும்."

"ஏன்?"

"உங்க முகம் மாறிடுச்சி. உங்களோட ப்ளஸ் பாயிண்ட்சைச் சொன்னப்போ சிரிச்சிக்கிட்டு கேட்டுக்கிட்டீங்க. இப்ப உங்க முகம் இறுகிப் போச்சி."

"அப்படி இல்லை. உங்க கருத்தை நீங்க சொல்றீங்க. அதனால என்ன? உங்க கருத்து முழுக்க கரெக்ட்டா இருக்கணும்னு ஒண்ணும் அவசியமில்லையே..."

"அவசியம் இல்லை. உங்க ப்ளஸ் பாயிண்ட்ஸை கரெக்ட்டாச் சொன்னேனா? அதையாவது சொல்லுங்க."

"அது பூராவும் நூறு சதவிகிதம் கரெக்ட்!"

"உங்க மைனஸ் பாயிண்ட்ஸ்ன்னு சொன்னது மட்டும் நூறு சதவிகிதம் தப்பு! அப்படித்தானே?"

"எல்லாமே தப்புன்னு சொன்னா அது பொய்! பிடிவாதம் இருக்கறது உண்மை தான். சில சூழ்நிலைகள்ல பொறுமை இழந்துடறதும் உண்மைதான். ஆனா மைனஸ் பாயிண்ட்ஸ் இல்லாம யாராச்சும் இருக்க முடியுமா?"

16

சா யோசிக்கிறேன்

பட்டுக்கோட்டை பிரபாகர்

"அப்படி நான் சொன்னேனா? உலகத்தில முழுக்க நல்லவனும் இல்லை. முழுக்க கெட்டவனும் இல்லை. விகிதாச்சாரம்தான் மாறும். ஒருத்தனைக் கெட்டவன்னு வகைப்படுத்தறதும் கஷ்டமான விஷயம்."

"ஏன்?"

"கெட்டவனுக்கு உண்டான குணங்கள்ன்னு எதை எதைப் பட்டியல் போடறது? சிகரெட் பிடிக்கிறவன், தண்ணியடிக்கிறவன் இவனெல்லாம் கெட்டவனா? இதெல்லாம் உடலுக்குத் தீமை செய்யற கெட்டப் பழக்கங்கள்னு மட்டும் தானே சொல்ல முடியும்?"

"பல பெண்களோட தொடர்பு வெச்சிருக்கிறவன்?"

"அவனும் ஒரு பிரதேசத்தோட கலாசாரப் பார்வையில தானே கெட்டவனாத் தெரியறான்? வேறு நாட்டுக் கலாசாரப்படி பார்த்தா அது முரண்பாடான விஷயம் இல்லையே."

"கொலை செய்றவன்?"

"கொலை செய்றவன் சட்டத்தோட பார்வையில ஒரு குற்றவாளி. கொலை செஞ்சவனை கொலைகாரன்னு சொல்றது சரி. கெட்டவன்னு எப்படி உறுதியா சொல்வீங்க? அவன் ஏன் கொலை செஞ்சான்னு ஒரு கேள்வி இருக்கே. போர் முனையில நாட்டுக்காகக் கொலை செய்றாங்க. சட்டப்படி அதுக்குத் தண்டனை இல்லை. யுத்த தர்மப்படி அது நியாயம். மனித தர்மப்படி அது நியாயமா? சரி, ஒரு பொண்ணைக் கற்பழிக்க வந்தவனை ஒருத்தன் கொலை செஞ்சிட்டான். அவன் கெட்டவனா?"



"நீங்க என்ன வக்கீலுக்குப் படிச்சிருக்கிங்களா? எதையுமே நியாயப்படுத்துவீங்க போலிருக்கு?"

"மேலோட்டமா பார்த்துக் கொலை செய்றவன் எல்லாம் கெட்டவன்னு சொல்லிட முடியுமாங்கறதுதான் என் கேள்வி." ,

"முடியாது, ஒப்புக்கறேன். என்ன சொல்ல வர்றீங்க?"

"உங்க குடும்பத்தில எல்லாரும் சேர்ந்துக்கிட்டு உங்களை ஒரு தீவு மாதிரி ஒதுக்கி வைச்சி பாரபட்சமா நடந்துக்கறாங்கன்னு சொன்னீங்களே, அது எனக்கு சரியாப் படலைங்க அரவிந்த். அவங்க உங்களை வெறுக்கறதா சொல்றது உங்க மேலோட்டமான பார்வை! உங்க இந்தக் கருத்துக்கு, சாதகமா நடந்த சில சம்பவங்களை மட்டும் வெச்சிக்கிட்டு நீங்களா உருவாக்கிக்கிட்ட அபிப்ராயம் இதுங்கறது என் கருத்து. நம்மை வெறுக்கறாங்களோன்னு ஒரு சந்தேகத்தை மனசில வெச்சிக்கிட்டு நீங்க குடும்பத்தில நடந்த ஒவ்வொரு சம்பவத்தையும் அணுகினா அந்தச் சந்தேகத்தை வலுப்படுத்தற மாதிரிதான் தோணும்."

அரவிந்த் அமைதியாக இருந்தான். இரண்டு கைகளையும் பின்னால் ஊன்றிச் சாய்ந்து அமர்ந்து வானத்தின் வெளிர் நீலத்தில் மெதுவாக நகரும் மேகத் திட்டுக்களைப் பார்த்தான்.

இப்போது அவர்களுக்கு அருகில் நின்று இளைஞர்கள் சிகரெட் பிடித்தபடி, சிரித்துப் பேசியபடி கடந்தபோது பிருந்தாவை உற்றுப் பார்த்தார்கள்.

"தெய்வீகக் காதல்டா!" என்றான் ஒருவன்.

"இருட்டினதுக்கப்புறம்?" என்றான் இன்னொருவன்.

"கஜுராஹோ காதல் மச்சி" என்றான் மூன்றாமவன்.

"யூ!" என்று ஆத்திரமாக எழப் போன அரவிந்தை கையமர்த்தித் தடுத்தாள் பிருந்தா.

"கமெண்ட் அடிச்சாங்க, போய்ட்டாங்க, விடுங்க!"

"இடியட்ஸ்! கொஞ்சம் கூட டீசன்ஸி இல்லாம..."

"அவங்க மெச்சூரிட்டி அவ்வளவுதான். ஒரு கோணத்தில பார்த்தா அவங்க யூகம் செய்ய நாமதானே இடம்கொடுத்திருக்கோம். கொஞ்சம் நாலு பக்கமும் பாருங்க. எத்தனை ஜோடிங்க உக்காந்திருக்காங்க. வழக்கமா லவ்வர்ஸ் இங்க வர்றாங்க. அதனால அவங்க பார்வையில நாம காதலர்களாத் தெரியறோம். நீங்க யாரு, நான் யாரு, நமக்குள்ளே என்ன உறவுன்னெல்லாம் விசாரிச்சுட்டு அப்புறமா கமெண்ட் அடிக்க முடியும்?"

"பிருந்தா, நமக்குள்ளே நிஜமா என்ன உறவு?" என்று கேட்க உள்ளம் துடித்தாலும் அவன் உதடுகள் தைரியம் பெறாததால் ஒத்துழைக்க மறுத்தன.

"ஸாரிங்க பிருந்தா. நான் உங்களை இங்கே அழைச்சுட்டு வந்திருக்கக் கூடாதுன்னு நினைக்கிறேன்."

"அதனால என்ன? இப்போ கமெண்ட் அடிச்சிட்டுப் போன இந்த மூணு பேரோட முகமும் இன்னும் அரை மணி நேரம் கழிச்சி நமக்கு ஞாபகமிருக்காது. அவங்க சொன்னதுக்காக மூட்-அவுட் ஆகறது முட்டாள்தனமில்லையா?"

அவள் முகத்தை ஊடுருவிப் பார்த்தான் அரவிந்த்.

"என்ன பார்க்கறீங்க?"

"எப்படி இந்த மாதிரி எல்லாம் யோசிக்கிறீங்க? எனக்கு எந்திரிச்சிப் போய் அவன் சட்டையைப் பிடிக்கணும்னுதான் தோணிச்சி. உங்களை மாதிரி உடனே மன்னிக்கத் தோணலை."

"நான் எங்கே மன்னிச்சேன்? மனசில வெச்சிக்க விரும்பலை. ஏன் அப்படிச் சொன்னாங்கன்னு சூழ்நிலையை மட்டும் யோசிச்சுப் பார்த்தேன்."

"உங்க பொறுமையும், பக்குவமும் எனக்கு வராதுங்க."

"நான் பக்குவமா? சேச்சே! அதெல்லாம் இல்லை. அது ஒரு பெரிய நிலை. ரொம்ப தூரம் போகணும் அதை அடைய. பிரச்னைகளை உணர்ச்சிவசப்பட்டுப் பார்க்காம, கொஞ்சம் தள்ளி நின்னு பார்க்கற தெளிவு இருக்கு. அதனால பதற்றப்படலை. அவ்வளவுதான். உங்க மைனஸ் பாய்ண்ட்ஸ்னு நான் அபிப்ராயம் சொன்னதில உள்ளுக்குள்ளே கொஞ்சம் வருத்தமா இருக்கா அரவிந்த்?"

"இல்லைங்க பிருந்தா. ஒரு பழமொழி சொல்லுவாங்க தெரியுமா? தலைவலியும், காய்ச்சலும் தனக்கு வந்தாத்தான் தெரியும்! நீங்க என் பிரச்னையை வெளில நின்னு பார்க்கறீங்க. நான் அதை அனுபவிக்கிறவன். நான்தான் தப்பாப் புரிஞ்சுக்கறேன்னு நீங்க சொன்னது உங்க பார்வை. நான் சொன்ன வார்த்தைகள்ல கொஞ்சம் மிகை இருக்கலாம். ஆனா குடும்பத்தில நான்

அலட்சியப்படுத்தப்படறேன்றது உண்மை."

பிருந்தா புன்னகைத்தாள்.

"உங்க கருத்தை நான் பிடிவாதமா மறுக்கறேன்னு நினைச்சி சிரிக்கறீங்களா?"

"இல்லை. விட்டுடலாம். வேற பேசலாம்."

"எதுக்கு சிரிச்சீங்க?"

"ஒண்ணுமில்லை. விடுங்க."

"என்னைக் கிண்டல் செய்ற மாதிரி இருக்கு."

"உங்களுக்கு அப்படிப் பட்டா நானா பொறுப்பு? பார்த்தீங்களா, ஒரு சின்ன புன்னகைக்கே நீங்களா ஒரு அர்த்தம் கற்பிச்சிக்கிட்டு கேள்வி கேக்கறீங்க."

"நீங்க சமாளிக்கிறீங்க பிருந்தா. நான் கற்பிச்சிக்கிட்ட அர்த்தம் தப்பானதுன்னு நிரூபிங்க."

"எப்படி?"

"நீங்க சிரிச்சதுக்கான உண்மையான காரணத்தைச் சொல்லுங்க."

"சொன்னா அநாவசியமா வாதம்தான் தொடரும்."

"பரவால்லை, சொல்லுங்க."

"உங்க ஈகோவை நினைச்சி சிரிச்சேன்."

"ஈகோவா?"

"நான் சொன்னதில கொஞ்சம் உண்மை இருக்கலாம்னு உங்க உள் மனசுக்குத் தெரிஞ்சாலும் அதை விட்டுக் கொடுக்க நீங்க தயாரா இல்லாததால 'நீ தள்ளி நின்னு பார்க்கறே, நான் அனுபவிக்கிறேன்'ன்னு சொன்னீங்க. சொன்னது நீங்க இல்லை. உங்க ஈகோ."

"நீங்க சொன்னது உண்மைன்னு என் உள் மனசு உணர்ந்ததா எப்படி நீங்க சொல்றீங்க? இது உங்க அனுமானம்தானே?"

"அதான் சொன்னேன்ல, வாதம்தான் தொடரும்னு, விட்டுடுங்க."

அரவிந்த் பெருமூச்சு விட்டான்.

"நல்லாப் பேசறீங்க பிருந்தா. என் வீட்டை விட்டு நான் வந்தது சரியா, தப்பா? அது மட்டும் சொல்லுங்க!"

"நான் எதுவும் சொல்லலைங்க."

"ஏன்?"

"வீட்டை விட்டு வந்துடலாம்னு இருக்கேன், சரியா, தப்பான்னு கேள்வி கேட்டா பதில் சொல்லலாம். சரின்னு உங்களுக்குப் பட்டதாலதானே வந்திருக்கீங்க. இப்ப நடந்து முடிஞ்ச விஷயம் பத்தி அபிப்ராயம் கேக்கறதால என்ன பிரயோஜனம்?"

"செஞ்சது சரிதான்னு சொன்னா எனக்குத் தெம்பா இருக்கும்."

"உங்களுக்கு தெம்பா இருக்கறதுக்காக அப்படிச் சொல்லணுமா?"

"இல்லை. உங்க கருத்தைச் சொல்லுங்க பிருந்தா."

"இது உங்க பிரச்னை அரவிந்த். இதை நீங்க அனுபவிக்கிறவர். நான் தள்ளி நின்னு பார்க்கறவ. உங்க தலைவலியையும், காய்ச்சலையும் நான் எப்படி உணர முடியும்? நான் உணர முடியாத ஒரு விஷயத்தைப் பத்தி நான் எப்படி அபிப்ராயம் சொல்றது?"

"பழிவாங்கிட்டீங்களா? இது மட்டும் ஈகோ இல்லையா?"

சில விநாடிகள் மௌனமான பிருந்தா, "ஆமாம் அரவிந்த். இது என் ஈகோதான். என்னை வார்த்தையால மடக்கினீங்க

"உங்கம்மாவும், மனைவியும் திடீர்ன்னு சந்திரபாபு நாயுடு செய்தது சரியான்னு சண்டை போடறாங்களே, ஏன்?"



"மத்த எல்லா டாப்பிக்கிலும் சண்டை போட்டு முடிச்சாச்சாம்!"

– ராதா வாசுதேவன்

இல்ல, இதோ பாருங்க பதிலுக்கு உங்களை மடக்கிட்டேன்னு சந்தோஷப்பட்டுக்கற ஒரு ஈகோ வெளிப்பாடுதான். ஐ'ம் ஸாரி. நான் வெட்கப்படறேன். என் மேல எவ்வளவு மரியாதை வெச்சிருந்தா உங்க பர்சனல் பிராப்ளத்தை மனம் விட்டுப் பேசுவீங்க. அலட்சியப்படுத்திப் பேசினது தப்புதான் அரவிந்த்" என்றாள்.

அவள் கண்களை நேராகப் பார்த்த அரவிந்த், "பிருந்தா, எதுக்காக அதிக பழக்கம் இல்லாத உங்ககிட்ட எல்லாத்தையும் சொல்றேன் தெரியுமா?" – சற்றே இடைவெளி விட்டவன், "எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு" என்றான்.

(தொடரும்)

வேர்க்குரு என்பது வெறும் அரிப்பல்ல.
அது ஒரு சருமக்கோளாறு.



விரைவில் நிவாரணம் பெற நைஸில்.

வெயில் காலத்தில் வியர்த்துக்கொட்டி, பிசுபிசுவென்று உடல் இருக்கையில் உங்கள் சருமத்தின் வியர்வை சுரப்பிகள் அடைத்துக்கொள்ளும். அதனால் அரிப்பு ஏற்படும், கடுமையாக சொரியத் தூண்டும்.

அப்போது சருமத்தில் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு.

நைஸிலில் மட்டுமே உள்ளது கிருமிகளைக் கொல்லும் க்ளோர்ஃபெனஸின். இந்த முக்கிய உட்பொருள் வேர்க்குருவுக்கு எதிராக கடுமையான செயல்புரியும். அதனால் வேர்க்குருவிலிருந்து விரைவான நிவாரணம் தருவது மட்டுமல்லாது, அதைச்செய்கையில் இதமும், சுகமும்-கூடுதலாய் தரும்.



நைஸில்

வேர்க்குரு பவுடர்

கிருமிகளைக் கொல்லும் க்ளோர்ஃபெனஸின் அடங்கியது.

போர்வைகள்

நீங்கள் ஹீத்ருவில் வந்து இறங்கியதுமே டெர்மினல் பிரச்னை உங்கள் மனத்தைப் பிடித்துக் கொள்கிறது. இறங்கியது எந்த டெர்மினல், மயாமிக்கு ஃப்ளைட் எந்த டெர்

புவனா சந்திரன்



மினல் என்று கேட்டறிந்து பெட்டியை ஊர்கிறீர்கள். டெர்மினல் அல்ல, ஏர்போர்ட்டே மாற வேண்டுமாம்.

அடுத்த ஃபிளைட்டிற்கு இன்னும் ஆறு மணி நேரம் இருக்கிறது.

"இங்கிருந்து ஸ்பீட் லிங்க் பஸ் பிடித்தால் அடுத்த ஒரு மணியில் நீ அந்த ஏர்போர்ட்டில் இருக்கலாம்" என்கிறான் பஸ் ஸ்டாப்பில் நிற்கிற வெள்ளைக்காரன்.

அவன் சொன்னதை விட பத்து நிமிஷம் அதிகமானது உங்களுக்குள் ஒரு திருப்தியை உண்டாக்குகிறது. உங்கள் பாஸ் நினைப்பது மாதிரி எல்லா வெள்ளையர்களும் அத்தனை துல்லியம் கிடையாது.

உங்கள் பாஸ் ஒரு வெள்ளையர் விரும்பி. உங்கள் கம்பெனி மாதிரியான பன்னாட்டுக் கம்பெனியில் எல்லா ஊர்க்காரர்களும் இருப்பது வழக்கம்தான் என்றாலும், எல்லோருடைய தலைக்கும் மேலே ஒரு வெள்ளையை உட்கார்த்தி வைத்தால்தான் உங்கள் பாஸிற்கு நிம்மதி. இதில் நீங்கள் அவரிடமிருந்து வேறுபடுகிறீர்கள்.

"மனிதனை மதி. திறமையைத் துதி. நிறத்தை மிதி!" என்பது உங்கள் கொள்கை. ஒருவேளை நீங்கள் அந்த பாஸ் இடத்தில் இருந்தால் வேறுவிதமாக நினைப்பீர்களோ என்னவோ!

லக்கேஜை செக் இன் செய்து, போர்டிங் கார்டு வாங்கியதும்தான் உங்களுக்குத் திருப்தியாகிறது. சுற்றி நோட்டம் விடுகிறீர்கள். கையில் கொஞ்சம் பிரிட்டிஷ் பவுண்ட் இருக்கிறது. கரியாக்க ஏதாவது கடை உண்டா என்று பார்க்கிறீர்கள்.



அப்போதுதான் அவளைப் பார்க்கிறீர்கள். கண்டினால் ரத்தம் வரும் வெள்ளையில். உங்களைப் பார்த்து குறி வைத்தது போல் வருகிறாள். நீங்கள் சுற்றுமுற்றும் பார்க்கிறீர்கள்.

மயாமி ஃப்ளைட் நெம்பரைச் சொல்லி "எந்த கவுண்டர்?" என்கிறாள் உங்களிடம்.

"எங்கு வேண்டுமானாலும்!" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு, கடை நோக்கிப் போன நீங்கள் இந்தக் கதையில் அவளை அதோடு மறந்திருக்க வேண்டும். ஆனால் -

அவளை உங்கள் பக்கத்து ஸீட்டில் புஸ் புஸ்ஸென்று மூச்சு விட்டுக் கொண்டு வந்து அமர்வாள் என்பது உங்களை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது.

மேலே தன் பெட்டியைத் தூக்கி வைக்கச் சிரமப்பட்டாள். நீங்கள் உடன் எழுந்து உதவினீர்கள். அவள் இருந்த ஒல்லி உடம்புக்கு சற்று அதிகமாகவே மூச்சு விட்டாள். ஒருவேளை கடைசி நேரத்தில் ஓடி வந்ததால் இருக்கலாம்.

அவளுடைய ஸீட் பெல்ட்டின் மீது நீங்கள் அமர்ந்திருந்தீர்கள். அதை எடுக்கும் முயற்சியில் அவள் கை உங்கள் இடுப்பில் இடித்தது. இம்சித்தது.

அவள் அதையெல்லாம் கண்டு கொள்ளாத மாதிரி இயல்பாகப் புன்னகைத்தாள்.

தன் பெயர் ரோஸி என்று அறிமுகப் படுத்திக் கொண்டாள். "ரோஸி பெட்ரோஸா!"

நீங்கள் உங்கள் பெயரைக் கூறினீர்கள்.

லண்டனில் ஒரு செமினாருக்கு வந்ததாகவும் மயாமியில் படிப்பதாகவும் சொன்னாள். R-ஐ அழுத்தி உச்சரித்து ஸ்பானிஷ் தாங்கிய ஆங்கிலம் பேசினாள்.

"பொய்னஸ் தியாஸ்" என்று உங்களுக்குத் தெரிந்த ஸ்பானிஷில் அவளிடம் வழிந்தீர்கள்.

அவள் சிரித்து பதிலுக்கு, "பொய்னோ" என்று சொல்லி விட்டு ஆங்கிலத்தில் கேட்டாள்,

"உங்களுக்கு ஸ்பானிஷ் தெரியுமா?" என்று.

"பொக்கிடோ, பொக்கிடோ!" என்று மீண்டும் வழிந்தீர்கள்.

அவள் மூச்சைப் போலவே, அவள் பரிமாணங்களும் சற்று புஸ், புஸ்ஸென்று இல்லையென்றால் வழிந்திருப்பீர்களோ, என்னவோ!

அவளுக்கு லேசாக பூனை முடி மீசை இருந்தது.

"என்ன படிக்கிறாய்?"

"மெடிஸின் – ஃபைனல் இயர்! அதற்குத்தான் இங்கு ஒரு ஸர்ஜரி ஸெமினார்!"

உங்களுக்குத் தெரிந்ததைக் காட்டிக் கொள்வதற்காக அர்த்தமேயின்றி, "என்ன, மேக்ஸிலோ ஃபேஷியல் சர்ஜரியா?" என்றீர்கள்.

அவள் பயங்கர வியப்புடன், "அதெப்படி அவ்வளவு கரெக்ட்டாகச் சொல்கிறீர்கள்! அதுதான்!" என்றாள்.

"சும்மா சொல்லிப் பார்த்தேன்!"

"உங்கள் உதட்டின் மேலே ஒரு தழும்பு இருக்கிறதே. நீங்கள் மேக்ஸிலோ ஃபேஷியல் செய்து கொண்டீர்களா, என்ன – க்ளெஃப்ட் லிப்பிற்கு!" என்றாள்.

உங்களுக்கு உள்ளூர கடுப்பு ஏற்பட்டாலும், "அதெல்லாமில்லை. இது கீழே விழுந்து ஏற்பட்ட வடு!" என்று அவசரமாக மறுத்தீர்கள்.

கொஞ்ச நேர அமைதிக்குப் பிறகு, "நீங்கள் என்ன கல்லூரி புரஃபஸரா?" என்றாள் அவள்.

"ஏன் அப்படிக் கேட்கிறாய்?"

"இல்லை. உங்கள் தோற்றம், பேச்சு எல்லாம் இந்தியரைப் போல இருக்கிறது. இந்தியர்களில் ரொம்பப் பேர் இங்கு புரஃபஸர்களாக, லெக்சரர்களாக இருக்கிறார்கள். எங்கள் காலேஜில் கூட இருவர் உண்டு. அதான் கேட்டேன்!"

"இல்லை. நான் ஒரு எஞ்சினியர். ஒரு அலுமினியக் கம்பெனியில் வேலை செய்கிறேன். உலகத்திலேயே பெரிய பாக்ஸைட் சுரங்கம் எங்களுக்குச் சொந்தம். இப்போது வெகேஷனுக்கு இந்தியா சென்று திரும்புகிறேன்!"

டின்னர் வந்தது. ரசித்துச் சாப்பிட்டாள். நீங்கள் ஸ்பெஷல் வெஜ்-மீல் வருவதற்காகக் காத்திருந்தீர்கள்.



தின்று முடித்து போர்வையை போர்த்திக் கொண்டு ஒரு குழந்தை போல உறங்கிப் போனாள்.

அவள் போர்வையே உங்களையும் சற்று போர்த்தியிருந்தது. அவள் திரும்பிப் படுத்த போது உங்கள் மீது சாய்ந்தாள். 'ஸாரி' என்று புரண்டு படுத்தாள். படுத்தினாள்.

எப்படியோ, பிரயாணம் முடிந்ததே தெரியவில்லை.

அதெல்லாம் நீங்கள் சென்ற முறை வந்த போது நடந்த கதை. இப்போது நிஜத்திற்கு வாருங்கள்.

உங்கள் மனைவி இந்தியாவிலிருந்து வருகிறாள். புது மனைவி. இந்த முறை வெகேஷன் சென்ற போது மணந்த மனைவி. அவளுக்கு விமானப் பயணம் புதிது.

நீங்கள் அவளை அழைத்துப் போக மயாமி இன்டர்நேஷனல் ஏர்போர்ட்டின் அரைவல் வாசலில் கஸ்டம்ஸ் டெஸ்க்கைப் பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்.

இதோ உங்கள் மனைவி வருகிறாள். உங்களுக்குப் பாதி நிம்மதி. அதென்ன உங்கள் மனைவியுடன் ஒரு மாமியும் பேசிக் கொண்டு!

உங்கள் மனைவி சொல்கிறாள், "இந்த மாமி மெட்ராஸ்லேர்ந்து எங்கூடவே வந்தாலே எனக்கு ஒரு சிரமமும் தெரியலே; அடிக்கடி இந்தியா போய் வந்து பழக்கமாம்."

நீங்கள் உடம்பை 'அஷ்ட'கோணலாக்கிக் கொண்டு மாமிக்கு நன்றி சொல்கிறீர்கள் – முழு நிம்மதியுடன். ●

55

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சாரியார்

"ஹே ரங்கா! உனக்கு இன்னும் என் பேரில் இரக்கம் வரவில்லையா...? உன் திருவடியில் என்னைச் சேர்த்துக் கொள்ள மாட்டாயோ...?" என்று பிள்ளை பெருமாள் அய்யங்கார் கதறி அழுகிறார்.

"நீ கூட்டிக் கொள்ளும் காலம் இன்னும் ஏற்படவில்லையே எனக்கு! ஏன் இன்னும் என்னை இந்த சம்ஸார பந்தத்திலே வைத்திருக்கிறாய்....?" என்று அழுகிறார்.

தமது ஆற்றல்களையெல்லாம் இழந்து, வயது முதிர்ச்சியில் தளர்ந்து போயிருக்கிறார் அவர்...

அவருடைய நிலை ஒவ்வொருத் தருக்கும் ஏற்படக் கூடியது அல்லவா! முன்பு பண்ணியதையெல்லாம் இப்போது பண்ண முடியவில்லையே... என்கிற நிலை. எழுந்தால், உட்கார்ந்தால் மூச்சு வாங்குகிறது. மூச்சே நின்று போய்விடும் போலி ருக்கிறது. எதிரே வருகிறவர் யாரென்று தெரியவில்லை; கண் பஞ்சாகிவிட்டது!

'இவ்வளவு அவல நிலை ஏற் பட்ட பிற்பாடு உனக்கு இன்னும் இரக்கம் இல்லையா ரங்கா...? இன்னும் நான் எதற்கு இந்த லோகத்திலே இருக்கணும்? உன் சேவை எனக்கு இல்லாமல் போய் விட்டதே!- உன்னைச் சரியாகப் பார்க்க முடியவில்லையே. ஹே ரங்கநாதா! உன் திவ்ய வைபவத்தை வாய் குளிரச் சொல்ல முடிய வில்லையே- எல்லாம் போய்விட் டதே என்னை விட்டு!' என்று அங்கலாய்க்கிற நிலைமை வந்து விடுகிறது.

உடம்பாகிற வீட்டை **அவன்** கட்டிக் கொடுத்தான். அந்த வீட் டிலே குடிபுகுந்த நாம், வீடே சாச்வதம் என்று எண்ணி, கட்டிக் கொடுத்தவனை "மறந்து விடுகிறோம்.

ஆகையினாலேதான் சொல் கிறேன்... அந்த மூப்பெல்லாம் ஏற் படுவதற்கு முன்னாலேயே இந்த மாதிரி ஒரு காலம் வரும் என்பதை முன்கூட்டியே நினைத்து, அந்த எம்பெருமானின் திருவடியிலே இளமையிலேயே ஆத்ம சமர்ப்பணம் பண்ண வேண்டும்.

இல்லாத சுத்தியைத் தேட வேண்டாம். இருக்கிற இடமே இடம். இருக்கிற சுத்தியே சுத்தி. ஆகையினாலே, புதிதாக ஒரு சுத்தி பண்ணிக் கொள்ள வேண்டும் என்று அவசியமில்லை... புதிதாகப் போய் நதியிலே நீராடிவிட்டு வரவேண்டும் என்பது இல்லை... ஆத்ம சமர்ப்பணம், எப்போது வேண்டுமானாலும் பண்ணலாம்; ஸ்வநிஷ்டை என்று பெயர். பக வானிடத்திலே தானே ஆத்ம சமர்ப்பணம் பண்ணுவதற்கான சக்தி யுடைய மகான்கள் அதைப் பண்ணு வார்கள்.

நிஷ்டையிலே நான்கு விதம் உண்டு. ஸ்வ நிஷ்டை, உக்தி நிஷ்டை, பாகவத நிஷ்டை, ஆசார்ய நிஷ்டை... எல்லோரா லும் ஸ்வநிஷ்டை பண்ண முடியாது. ஆனால், உக்தி நிஷ்டையென்றால் முடி யும்.

உக்தி நிஷ்டை என்றால்...?

அந்த எம்பெருமான், லக்ஷ்மி நரசிம் மன் எதிரிலே நம்மை நிறுத்த வேண்டும். ஆசார்யர் ஒருவர் (குரு) நம் அருகிலே



குறையொன்றுமில்லை

நிற்க, அவர் நமது ஆத்மாவை அவன் சுவீகரிக்கும்படியாக, நம்மை ஏற்கும்படியாகச் செய்ய வேண்டும். அவன் திருவடியிலே நம்மைச் சேர்த்து வைப்பார் ஆசார்யர். ஆத்ம விவாகம் என்று இதற்குப் பெயர்; ஆத்ம சமர்ப்பணம் என்று பெயர்.

ஆகையினாலே, சர்வாந்தர்யாமியாக பரமாத்மா இருந்து கொண்டிருக்கிறான். அவன் எதற்காக அப்படி இருக்கிறான் என்றால் எல்லாருக்குள்ளேயும் அவனுடைய பெருமையைக் காட்டிக் கொள்வதற்காக அல்ல... இது அவனுடையது என்று நாம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதற்காக.

ஆகையினாலே, சர்வாந்தர்யாமித்வம்– எங்கும் பரமாத்மா இருக்கிறான்– என்பது விஷ்ணு சப்தத்தினாலே தெரிகிறது. சர்வாந்தர்யாமித்வம் என்கிற குணத்தினாலே, ஆத்ம சமர்ப்பணம் என்கிற உத்தமமான சரணாகதி நிலை வலியுறுத்தப்படுகிறது. அதை உடனிருந்து நடத்தி வைக்கிறவனும் அந்த பரமாத்மாதான். அவன் சங்கல்பித்து விட்டானானால் நாம் ஒரு கணம்கூட வீணாக இருக்க முடியாது.


உபநிஷத் வாக்கியம் ஒன்று இருக்கிறது. 'அந்த எம்பெருமானால் எவன் வரிக்கப்படுகிறானோ, அவனால் அவன் அடையப்படுகிறான்' என்கிறது.

எம்பெருமான் யாரை வரிப்பான்...?

அவனை யார் விரும்புகிறார்களோ அவர்களை வரிப்பான். அவனிடம் யாருக்கு பக்தியிருக்கிறதோ அவர்களை விரும்புவான். அப்படி விரும்பப்படக் கூடியவன் பகவானை அடைகிறான்.

ஆகையினாலே, அவன் ப்ரீதிக்குப் பாத்திரமாய், அவன் வகுக்கும்படியான கர்மாவை நாம் பண்ணிக் கொண்டு, அவன் ஏற்கும்படியான விதத்தில் இந்த ஆத்மாவை அவனுடையது என்று சமர்ப்பிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஏற்றமுடைய ஆத்ம சமர்ப்பணத்துக்காகவே சர்வாந்தர்யாமியாக இருக்கிறான் அவன்.

அடுத்தது பாருங்கள் சர்வக்ருத்வம் என்கிற உத்தமமான குணம்.



இதுதான் ஒன்பதாவது குணம். முதல் ஒன்பதிலே ஒன்பதாவது.

சர்வக்ஞத்வம் என்றால், எல்லாவற்றையும் உள்ளபடி பரமாத்மா உணர்கிறான். சர்வசாக்ஷி அவன்... எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். உபதிருஷ்டா! அவனுக்குத் தெரியாமல் எந்தக் காரியத்தையும் செய்ய நம்மால் முடியாது.

'அவனுக்குத் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருந்தேன்... அவன் உள்ளேயே உட்கார்ந்து கொண்டு பார்ப்பதனாலே விலா அறச் சிரித்தேன்! என்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார். 'என் அஞ்ஞானத்தை நினைத்துக் கொண்டு விலா எலும்புகளெல்லாம் முறியும்படியாக என் மதியின்மையை நினைத்துச் சிரித்தேன்...' என்கிறார்.

ஆகையினாலே, பகவான் நம் கூடவே இருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். சர்வக்ஞத்வம் என்றால், வைகுண்டத்திலே உட்கார்ந்திருக்கிறான் பரமாத்மா; அங்கேயிருந்தபடியே எல்லாவற்றையும் பார்க்கிறான். எல்லாம் அவனுக்கு விஷயமாகிறது. எல்லாம் தெரிகிறது. அது மட்டுமல்ல... அவதார காலத்திலே விசேஷமாக வந்து சர்வக்ஞத்வத்தை நிரூபிக்கிறான் பரமாத்மா.

மீனோடு, ஆமையாய் எல்லாம் அவதாரம் பண்ணுகிறானே அப்போதெல்லாம் அவன் சர்வக்ஞத்வத்துக்கு இழுக்கு உண்டோ? கிடையவே கிடையாது!

சீதா பிராட்டி அக்னி பிரவேசம் பண்ணவிருக்கிறாள். அந்த சமயத்திலே எல்லா தேவர்களும் வந்தார்கள். முக்கண் பிரானான மகாதேவன் எழுந்தருளினான். பிரும்மா வந்தார், இந்திராதி தேவர்களெல்லாம் வந்தார்கள். வந்து, ராமனைப் பார்த்து,

"அக்னியிலே விழும்படியான சீதையைத் தடுத்து நிறுத்தாமல் பார்த்துக் கொண்டிருக்கிறாயே, ஹே, ராமா! நீ உணரவில்லையே! நீ யாரென்று உனக்குத் தெரியவில்லையே" என்றார்கள்.

அதற்கு பகவான் பதில் சொல்கிறான்:

"ஏன் எனக்குத் தெரியாது? தெரியுமே...! நான் என்னை மனிதனாக உணர்கிறேன். தசரதனுடைய பிள்ளை நான்..." என்கிறான்.

இதைக் கேட்டவுடனே, அங்கே வந்திருந்த அத்தனை பேரும்- பரமசிவன் என்ன, பிரும்மாதி தேவர்களென்ன... எல்லோருமே ராமனைப் பார்த்துச் சொன்னது: "நீ ராமனா? தசரதனுடைய பிள்ளையா! அல்ல! நீ விஷ்ணு. சர்வ வியாபி. எங்கும் நிறைந்தவன். விஷ்ணுவினுடைய அவதாரம் நீ. அது மாத்திரம் இல்லை; அடுத்த அவதாரமும் பண்ணப் போகிறவன் நீ. இப்போது ராமாவதாரம் பண்ணியிருக்கிறாய். அடுத்தது கிருஷ்ணாவதாரம் பண்ணப் போகிறாய்- விஷ்ணு: கிருஷ்ண: பிரஜாபதி! சர்வலோகத்தையும் பரிபாலிக்கக் கூடியவன் நீ.

''ஜகத் சர்வம் சரீரந்தே- இத்தனை லோகமும் உனக்கு சரீரமாய் இருக்கிறது! சர்வ பதார்த்தங்களிலேயும் நீ இருக்கிறாய். அனைத்தையும் தாங்கிக் கொண்டு இருக்கிறாய்; ஜகத் சர்வம் சரீரந்தே.

"பிரணவம் நீ - ஓம்காரம் நீ. வஷட் நீ- எல்லாவற்றையும் தன் வசத்திலே கொண்டிருக்கிறவன் நீ.''

விச்வம் விஷ்ணு வஷட்கார: - இது சஹஸ்ரநாமம். வேதத்திலேயும் அப்படியேதான் வருகிறது. வேத மந்திரங்களே நாம ரூபமாய் இருப்பது தானே சஹஸ்ரநாமம்.

'நீ ஓம்காரமாக இருக்கிறாய், நீ வஷட்காரமாக இருக்கிறாய், எல்லாவற்றுக்கும் மூல காரணம் நீ...?' என்று ராமனை ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள் தேவர்கள்.



''என் கணவருக்கு வீட்டு நினைப்பே கிடையாது. எப்பவும் வேலை, வேலைனு அலைஞ்சுட்டே இருக்கார்.''

''அப்படியா! எங்கே வேலை பாக்கறார்?''

''வேலை பார்க்கிறதாவது. வேலை தேடிண்டு இருக்கார்!''

— மதுரை என். உஷாதேவி

அருள்வாக்கு



பகவத் பரமாகவே பண்டிகைகள் என்று சிலதை வைத்திருப்பதோடு வ்ரதங்கள் என்றும் சிலவற்றை வைத்திருக்கிறது. பண்டிகை என்பது நாம் ஆடை ஆபரணங்களுடன் அலங்காரம் பண்ணிக் கொண்டு, பகவானுக்கு அலங்காரம் பண்ணி பூஜை செய்து, அவன் ப்ரஸாதமாக அறுசுவை உண்டி சாப்பிட்டு ஆனந்தமாயிருப்பது. போகிப் பண்டிகை, தீபாவளிப் பண்டிகை மாதிரி, புது வஸ்த்ராதிகள், அலங்காரம், பஞ்ச பக்ஷ்ய போஜனம் முதலியன இல்லாமல், வழக்கமாகச் சாப்பிடுகிற மாதிரிக் கூட இல்லாமல், நியமத்தோடு உபவாஸமிருந்து பூஜை பண்ணுவது வ்ரதம். க்ருத்திகை வ்ரதம், ஷஷ்டி வ்ரதம், சதுர்த்தி வ்ரதம், ரிஷிபஞ்சமி வ்ரதம், ப்ரதோஷ வ்ரதம், ச்ரவண வ்ரதம், பயோவ்ரதம், இது எல்லாவற்றையும் விட ஸர்வஜன அநுஷ்டானமாக ஏகாதசி வ்ரதம் என்று பல ஏற்பட்டிருக்கின்றன. எல்லா மதங்களிலுமே feasting, fasting என்று இந்த இரண்டும் இருக்கின்றன.

மற்ற வ்ரத தினங்களிலோ பூஜைக்கு அப்புறம் ஒரு பொழுதாவது பலஹாரம் பண்ணலாமென்றிருக்கிறது. ஏகாதசியில்தான் பூர்ண உபவாஸம்.

மற்ற வ்ரதங்களைப் புராண, ஆகமங்கள் சொல்கின்றன. அதில் சிவபரமான புராணாகமங்கள் சொல்பவைகளை வைஷ்ணவர்கள் அநுஷ்டிக்க மாட்டார்கள்; வைஷ்ணவ க்ரந்தங்களில் சொல்லியுள்ளதை சைவர்கள் செய்ய மாட்டார்கள். ஏகாதசியோவென்றால் ஒவ்வொரு sect மட்டும் எடுத்துக் கொள்ளும் புராண ஆகமங்களில் மட்டுமின்றி ஹிந்து என்று பெயர் இருக்கிற அத்தனை பேருக்கும் பொதுவான தர்ம சாஸ்திரங்களிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதனால்தான் இதை ஸர்வஜன அநுஷ்டானமான வ்ரதம் என்று சொன்னேன்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

மனித வேஷம் போட்டுக் கொண்டிருப்பதனாலே தன்னை மனிதன் என்று சொல்லிக் கொள்கிறான். ஆனால், எந்த இடத்திலே பார்த்தாலும் அவன் மனிதத்வம் தெரியவில்லை. அவன் பரமாத்மா, ப்ரமாத்மா என்றேதான் காட்டிக் கொண்டு வருகிறான்.

இந்த இடத்திலே தேவர்களெல்லாம் வெளிப்படையாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள். ஆனால் பரமாத்மா, போட்டுக் கொண்ட வேஷத்துக்கு ஏற்ப நடிக்கிறான்.

ஒருவன் ஸ்த்ரீ வேஷம் போட்டுக் கொண்டு நடை உடை பாவனையிலே ஸ்த்ரீ போல நடிக்கிறான்... அப்படி நடிப்பதனாலேயே அவன் தன்னை ஸ்த்ரீ என்று எண்ணிக் கொள்ள முடியுமா...? தான் புருஷன் என்பது அவனுக்குத் தெரியாதா?

ஆகையினாலே, எத்தனை அவதாரம் எடுத்தாலும் அவனுடைய சர்வக்ஞத்வத்துக்குக் குறைவில்லை. தன்னை மனிதன் என்று அவன் சொல்லிக் கொண்டானே...? மனிதனைப் போல சங்கோச அறிவா அவனுக்கு... என்று கேட்டால் இல்லை.. போட்டுக் கொண்ட வேஷத்துக்கு ஏற்றபடி அப்படி நடிக்கிறான். உண்மையில் அவன் சர்வக்ஞத்வன்- எல்லாவற்றையும் நன்கு உணரும்படியாக, ஏற்றமுடையவனாக இருக்கிறான் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

பகவானின் 99 குணங்களிலே முதல் ஒன்பது திருக்கல்யாண குணங்களைப் பார்த்தோம். இந்த ஒன்பது குணங்களும் எப்படி நமக்குத் தெரிகிறது...? ஒரே ஒரு தடவை பகவானுடைய திருவடியிலே ஓம் விஷ்ணவே நம: என்று அர்ச்சனை பண்ணினால், 'இந்த ஒன்பது குணங்களை உடையவனான விஷ்ணுவுக்கு இந்த புஷ்பம்' என்று ஆகிறது.

(தொடரும்)



பெரிய ஸ்டார்கள் நாடகங்களிலும் நடிக்க வேண்டும்!

'**பா**ண்டிட் குயின்' என்று சினிமாவாக வந்தபோது, அதில் பூலான் தேவியாக நடித்தாரே சீமா பிஸ்வாஸ், நினைவிருக்கிறதா! அந்தப் படத்துக்காக தேசிய விருது வாங்கிய அவர் அப்புறம் என்ன ஆனார்?

"பூலான் தேவியாய் நடித்து விட்டேன் என்பதற்காக, மும்பை திரையுலகினர் பலரும், தங்கள் படங்களில், கொள்ளைக்காரி அல்லது வில்லி கதாபாத்திரங்களிலேயே நடிக்கச் சொல்லிக் கூப்பிட்டார்கள். ரொம்ப வெறுத்துப் போய்விட்டேன். அத்தனை வாய்ப்புகளுக்கும் கண்டிப்புடன் 'நோ!' சொல்லிவிட்டேன்!

"என் நடிப்புத் திறமைக்குத் தீனிபோடும் கதாபாத்திரங்களில் மட்டுமே எனக்கு நடிக்க விருப்பம். எனவேதான் நான் பொறுமையுடன் அத்தகைய வாய்ப்புகளுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

நானா படேகர் - சல்மான் கான் நடித்த 'காமோக்ஷி' படத்தில் மனிஷா கொய்ராலாவுக்கு அம்மாவாக நடிக்க வாய்ப்புக் கிடைத்தபோது கூட நான் மறுக்காமல் ஏற்றுக் கொண்டேன் என்றால் அதற்கு என்ன காரணம்? அந்த கேரக்டர் நடிப்பதற்கு நிறைய வாய்ப்புள்ள ஒரு செவிட்டு - ஊமைத் தாயின் கேரக்டர். அந்தப் படம் வெற்றியடையாமல் போய்விட்டது. 'ஹாஸர் சௌரஸிமா' என்ற படத்தில் எனக்கு ஒரு நக்ஸலைட்டின் அம்மா கேரக்டர். இரண்டு கேரக்டர்களுமே, எனக்கு நல்ல பெயரைப் பெற்றுத் தந்தன!" என்கிறார் சீமா பிஸ்வாஸ்.

தமிழில் வெளியான மகளிர் மட்டும் படத்தின் இந்தி வடிவம் லேடீஸ் ஒன்லி! அதில் நாஸர் நடித்த கேரக்டரில் ரண்தீர் கபூர் நடிக்கிறார். ரேவதி, ரோகிணி, ஊர்வசி கேரக்டர்களில் ஷில்பா ஷிரோத்கர், சீமா பிஸ்வாஸ், ஹீரா மூவரும் நடிக்கிறார்கள். அந்தப்பட அனுபவம் பற்றிக் கூறும்போது, நகைச்சுவைப் படங்களில் நடிப்பது என்பது ஒரு சுகமான அனுபவம். ரொம்பவும் இன்வால்வ் ஆகி நடித்தேன்!" என்கிறார்.

"நான் சினிமாவில் நடித்தாலும் நாடகங்களில் நடிப்பதை ரொம்ப விரும்புகிறேன். நசுருதீன் ஷா போன்ற நட்சத்திரங்கள், சினிமாவில் எத்தனை பிசியானாலும், நாடகங்களில் நடிப்பதைத் தொடர்ந்து கொண்டு இருக்கிறார்கள். சினிமா பிரபலங்கள் மேடையில் தொடர்ந்து நடிப்பது நாடக உலகிற்கும் நல்லது. காரணம், டெலிவிஷனும், சினிமாவும் நாடகக் கலையை நசுக்கிக் கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில், பெரிய ஸ்டார்கள் மேடையில் நடித்தால், ரசிகர்களுக்கும் நாடகம் பார்க்கும் ஆர்வம் அதிகரிக்குமில்லையா?" என்கிறார். ●

— கௌதம்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement: 2345622; Chief Administrative Officer : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)

செங்கதிர்த்தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம்
அவன் எங்களறிவினைத் தூண்டி நடத்துக!

— மகாகவி பாரதி

ஞானச் சுடர் ஏற்றி ஒளிபெறுவோம்!
ஞாலமெல்லாம் ஞானமென்னும் ஒளி தருவோம்!

என்ற உயரிய இலட்சியத்துடன் உங்கள் இல்லமெல்லாம் நாடி வருகிறது!

ஒளிவிடும்

ஞானச் சுடர்

ஆன்மிக மாத இதழ்

ஆசிரியர் : லெட்சுமி சுப்பிரமணியம்

ஆன்மிகப் பத்திரிகையில் நீண்ட அனுபவம் கொண்டவர்களின் கைவண்ணம் இது!

ஏப்ரல் 29-ல் வரவிருக்கும் முதல் இதழில்...

- பெரிய இடத்துப் பிள்ளை – பரமாசாரிய சுவாமிகள்
- மகான்கள் நிகழ்த்திய அற்புதங்கள்
- ஞானியர் வாழ்க்கையில்...
- நல்ல வாழ்க்கைக்கு அவசியமானவை – பகவான்பாபா
- உங்கள் சக்தியைப் புரிந்து கொள்ளுங்கள் – சுவாமி சின்மயானந்தா
- இலவச திருப்பதி – திருமலை தரிசனம்
- பக்தர்களின் நலன் வேண்டி பிரார்த்தனை – பூஜைகள் – ஹோமங்கள்.

விலை : ரூ. 10/- மட்டுமே

விவரங்களுக்கு : லக்ஷ்மி பப்ளிகேஷன்ஸ்,
ரம்யா,
62, முதல் பிரதானச் சாலை.
சாய்நகர், விருகம்பாக்கம்,
சென்னை – 600 092.
போன் : 4873136.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS (S) M4392/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/(S) 161 * Registered as a Newspaper in Srilanka